# செம்மணி

நிலம் 2 துகள் 63 வள்ளுவர் ஆண்டு 2052, 02 -08 ஐப்பசி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

04



சிறப்புரிமை என்று பொய் கூச்சலிடாதீர்கள்!

03



ஆட்டுவிக்கும் அரிசி விலை

மசாய் மறா காட்டில் புலி வேட்டையோடு கூடிய பயண அனுபவம்

05



## கஜேந்திரன் நா.உ. கைது விவகாரத்தில் மனித உரிமை ஆணைக்குழு தலையீடு

### காவல் அதிகாரியிடமிருந்து விளக்க அறிக்கை கேட்கிறது

அ.அஜந்தன்

தியாகி திலீபனை நினைவேந்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட விடயத்தைக் கையில் எடுத்துள்ளது மனித உரிமைகள் ஆணைக்குழு. காவல் துறையினர் தன்னைக் கைது செய்தமை தனது நாடாளுமன்றச் சிறப்புரிமையை மீறும் செயல் என்று கஜேந்திரன் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் அவரது கைதின்போது மனித உரிமைகள் மீறப்பட்டனவா என்பது தொடர்பில் ஆராயத் தொடங்கியிருக்கும் ஆணைக்குழு யாழ்ப்பாணம் காவல் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இருந்து விளக்கம் கேட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கஜேந்திரன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு எதனையும் பதிவு செய்யவில்லை என்றுபோதும் ஊடகச் செய்திகளின் அடிப்படையில் பக்கம் 02



## 500 மில். டொலர் கடன் வழங்குகிறது உலக வங்கி

கொழும்பு, ஐப்பசி 2

கிராமிய வீதிகளின் சீரமைப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு கடனாக வழங்கவுள்ளது உலக வங்கி. பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ இதனை நேற்றுத் தெரிவித்தார். பக்கம் 02

# யாழ். முதல்வரின் தலைக்கு மேல் தொங்குகிறது கத்தி!



யாழ்ப்பாணம், ஐப்பசி 2

யாழ். மாநகர சபை முதல்வர் மணிவண்ணனின் பதவிக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம் என்று சபை உறுப்பினர்கள் சிலர் செம்மண் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியம், நேர்மை என்பவற்றின் அடிப்படைத் தகுதிகளாகக் காட்டிக்கொண்டு, கூட்டமைப்பின் இழுபறிகளுக்கு மத்தியில் பதவிக்கு வந்தவர் மணிவண்ணன். ஆனால் யாழ். மாநகர எல்லைக்குள் பெயர்ப் பலகைகள் வைக்கும் விவகாரம் மற்றும் ஆரிய குளத்திற்கு மத்தியில் பௌத்த - இந்து நல்லிணக்க மண்டபம் அமைக்கும் விவகாரம், 5ஜி ஸ்மார் போல் அமைக்கும் விவகாரம் என்பவற்றில் அவர் நடந்துகொண்ட விதம் அவர் மீதான நம்பிக்கையைச் சிதைத்துவிட்டது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் அவர் முன்வைக்கவிருக்கும் அடுத்த வருடத்துக்கான நிதி நிலை அறிக்கையைத் தோற்கடித்து அவரைப் பதவி விக்குவதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நகர்வுகளுக்குச் செல்லலாம் என்றும் அவர்கள் எதிர்வுகூறினர்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களே மணிவண்ணனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரை அம்பலப்படுத்துவதில் முன்னிற்கிறார்கள். மாநகர சபையின் எல்லைக்குள் பெயர்ப் பலகை நடும் விடயத்தில் மணிவண்ணனை மோசடி செய்தார் என்றுகூட அவர்கள் குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கமாக முன்வைத்தார்கள். இப்போது ஆரிய குளத்தில் பௌத்த - இந்து மத நல்லிணக்க மண்டபம் அமைப்பதற்கு நாகவிகாரையின் பிக்கு விடுத்த கோரிக்கையை மறைத்து சபையை தவறாக வழிநடத்துகின்றார் என்றும் அவர்கள்தான் அம்பலப்படுத்துகிறார்கள். கூட்டமைப்பின் ஆட்சியின் பக்கம் 02

## உள்ளாடைகளுக்கு தடை நீங்கியது!

கொழும்பு, ஐப்பசி 2

உள்ளாடைகள் உள்ளிட்ட அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கு கொழும்பு விதித்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. அத்தியாவசியமற்ற பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமானால் அதற்கான 100 வீத கொடுப்பனவும் பணமாகச் செலுத்தப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு உடனடியாக நீக்கப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று அறிவித்தார்.

அதேநேரம் இறக்குமதியாளர்கள் பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அத்தியாவசியமான பொருட்களைத் தேவைக்கு மட்டும் இறக்குமதிய செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு நாணய இருப்பு 5 பில்லியன் டொலர்கள் என்றும் அவர் அறிவித்தார். இந்த ஆண்டு நாடு 5 சதவீத பொருளாதார வளர்ச்சியைப் பெறும் என்றும் 2022ஆம் ஆண்டு முதல் காலாண்டி 6.5 சதவீத வளர்ச்சி கிட்டும் என்றும் அவர் எதிர்வுகூறினார்.

## கவனித்துப் படிக்கச் சொல்லி

### தும்புக் கட்டையால் தந்தை தாக்கி மகன் பரிதாபச் சாவு

தலையில் காயம் ஏற்பட்டு உயிரிழக்கும் வகையில் தாக்கினார் என்று சந்தேகிக்கப்படும் தந்தை ஒருவரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அவரை எதிர்வரும் 13ஆம் நாள் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெருந்தொற்றுக் காலத்தில் நடக்கும் இணைய வழிக் கற்றல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவில்லை என்ற கோபத்தில் மகனை தும்புக்கட்டையால் தாக்கினார் தந்தை என்கிறது காவல்துறை. இதில் மகாமோதரையைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தான். பக்கம் 02

## கட்டுப்பாடுகளோடு திறக்கப்பட்டது நாடு

கொழும்பு, ஐப்பசி 2

5 வார தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை நாடு மீண்டும் திறக்கப்பட்டது. உத்தியோகபூர்வமாக நாடு திறக்கப்படுவதற்கு முன்னதாகவே கடைகள் உட்பட பல சேவைகளும் வழமைபோன்று செயற்படத் தொடங்கியிருந்த நிலையில், நேற்று எஞ்சியிருந்த கடைகளும் சேவைகளும் வழமைக்குத் திரும்பின.

இருப்பினும் கொவிட்-19 பரவலைத் தடுக்கும் நோக்கத்தோடு மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து இன்னும் தொடங்கப்படவில்லை. அடுத்து வரும் இரு வாரங்களில் நிலமைகளை நன்கு அவதானித்த பின்னரே மாகாண பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவைகளும் அலுவலகங்களும்கூட முற்றாக வழமைக்குத் திரும்பிவிடவில்லை. அரச அலுவலகங்களில் அவசியமான அலுவலர்களை மட்டுமே சேவைக்கு அழைக்கும்படி பொது நிர்வாக சேவைகள் திணைக்களம் நேற்று சுற்றறிக்கை விடுத்துள்ளது. அலுவகத்திற்கு வர அவசியமில்லாதவர் பக்கம் 02

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**




# பொறுப்புணர்ந்து நடப்போம்

கொரோனா பெருந்தொற்று முற்றிலும் கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையிலும் நாட்டிலுள்ள எல்லோருக்கும் முழுமையாக தடுப்பூசிகள் ஏற்றி முடிக்கப்படாத நிலையிலும் நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 வாரங்களாக நடைமுறையில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு இதற்கு முந்தைய முடக்கங்களுடன் ஒப்பிடும்போது மிக இறுக்கமானதாக இல்லாதபோதும் அதன் பயனாகவும் தடுப்பூசிகள் விரைவாக ஏற்றப்பட்டதன் பயனாகவும் பெருந்தொற்றால் ஏற்படும் உயிரிழப்புக்கள் கணிசமாகக் குறைந்திருக்கின்றன. ஆனால் அது முற்றிலுமாக நின்று போய்விடவில்லை. 200 என்கிற எண்ணிக்கையிலிருந்து 50 என்கிற எண்ணிக்கைக்குக் குறைந்திருக்கும் நிலையிலேயே நாடு மீண்டுத் திறக்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குத் தடை நீடிப்பு, அரச ஊழியர்கள் முழுமையாகக் கடமைக்குத் திரும்பாமை, பாடசாலைகள் திறக்கப்படாமை என்று கட்டுப்பாடுகள் தொடர்ந்து நிலவினாலும் மாகாணங்களுக்குள் ஓரளவுக்கு இயல்பு வாழ்க்கை திரும்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் ஒவ்வொருவரும் மிகவும் கவனமாகவும் அவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டியிருக்கின்றது. தடுப்பூசிகளைப் போட்டு விட்டோம், கொவிட் இறப்புக்கள் குறைந்துவிட்டன என்று நாம் கவனவீனமாக நடந்துகொண்டோமானால் மீண்டும் ஒரு பெரும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலைக்குச் செல்லவேண்டியிருக்கும்.

உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்றால் நாடு ஐந்தாவது அலையையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்று மருத்துவத் துறையினர் ஏற்கனவே எச்சரித்துள்ளனர். இந்த நிலையில் ஒவ்வொரு குடிமகனும் பொறுப்புணர்ந்து நடந்துகொள்ளவேண்டியது கட்டாயம்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட முடக்கங்கள் காரணமாக ஏழை மக்களின் பாடு மிக மோசமாகி இருக்கின்றது. பொருளாதார ரீதியில் மிக அடிமட்டத்தில் உள்ள மக்களின் வாழ்வாதார அடிப்படைகள் எல்லாம் தகர்ந்து போயிருக்கின்றன. பல குடும்பங்கள் பட்டினியை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளன. தொழில் இல்லை, வருமானம் இல்லை என்கிற நிலையில் குடும்பங்கள் ஒவ்வொன்றும் பெருந் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் மீண்டும் கொரோனா பரவி மற்றொரு முடக்கத்துக்குப் போக வேண்டியேற்பட்டால் அது நமக்கு நாமே தோண்டிக்கொள்ளும் புதைகுழிகளாகவே இருக்கும். அதனால் அவதானத்துடனும் பொறுப்புடனும் நடந்துகொண்டு சுகாதார நெறிமுறைகளைச் சரிவரப் பின்பற்றி நடப்பது ஒவ்வொருவரதும் கடமை.

அப்போதுதான் இந்தப் பெருந்தொற்றுப் பாதிப்பிலிருந்து மீண்டுவர முடியும்.

## யாழ். முதல்வரின்...

போது மணிவண்ணன் உட்பட அப்போதைய முன்னணி உறுப்பினர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்ட 5ஜி ஸ்மார்ட் போல்களை மீண்டும் நடுவதற்கு முதல்வர் இப்போது காட்டும் மும்முரத்தையும் கூட்டமைப்பினர் கடுமையாக எதிர்க்கிறார்கள். இந்த ஸ்மார்ட் போல் தொடர்பாக டய லொக் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் விளக்கமளிக்க நேற்றுக் கூட்டிய கூட்டத்தில் பங்கெடுத்திருக்கவேண்டிய கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும் அதனைப் புறக்கணித்துள்ளார்கள். இப்படி கூட்டமைப்பு தொடர்ந்து மணிவண்ணனுக்குக் குடைச்சல் கொடுப்பதன் பின்னணியில் அவரை முதல்வர் பதவியில் இருந்து தூக்கும் ஒரு திட்டம் கூட்டமைப்புக்கு இருக்கிறது என்றே ஊகிக்கவேண்டியிருக்கின்றது" என்று அந்த உறுப்பினர்கள் செம்மண் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

தமது பெயர் விவரங்களை வெளியிட விரும்பாத அவர்கள், மணிவண்ணனின் அடுத்த நிதி நிலை அறிக்கையை இரண்டு தடவைகள் தோற்கடிப்பதன் மூலம் அவரைப் பதவி இழக்கச் செய்து கூட்டமைப்பு மீண்டும் மாநகராட்சியை கைப்பற்றத் திட்டமிடும் நகர்வுகளை நோக்கியே அனைத்தும் சென்றுகொண்டிருப்பதாக அவர்கள் எதிர்வுகூறுகின்றார்கள். உள்ளூராட்சி சபைகளின் ஆயுள் காலத்தை இன்னும் ஒரு வருடத்திற்கு கொழும்பு அரசு நீடிப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதால் கூட்டமைப்பு ஆட்சி மாற்றத்தை இலக்கு வைப்பதற்கு எல்லாச் சாத்தியங்களும் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் அத்தகைய நகர்வில் முன்னாள் முதல்வர் ஆர்னோல்டையே மீண்டும் முதல்வராக்க கூட்டமைப்பு தலைவர் முயன்றால் அது வெற்றியளிக்கக்கூடியதாக இருக்காது என்று கூட்டமைப்பு உறுப்பினர்கள் அடித்துக் கூறுகின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனின் ஆதரவோடுதான் மணிவண்ணன் முதல்வர் பதவியைக் கைப்பற்றினார் என்று சொல்லப்படும் நிலையிலும் மணிவண்ணன் எதிர்காலத்தில் கூட்டமைப்போடு சேர்ந்துகொள்வதற்குச் சாத்தியங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படும் நிலையிலும் அவரது பதவியை கூட்டமைப்புப் பறிக்கும் என்று தான் எண்ணவில்லை என்று செம்மண்ணிடம் தெரிவித்தார் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர்.

## கட்டுப்பாடுகளோட...

களை வீட்டிலிருந்தே சேவையாற்றும்படி பணிக்குமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடமைக்குச் செல்லும் அரச அலுவலர்களுக்கான போக்குவரத்து வசதிகள் அல்லது மேலதிக போக்குவரத்துக் கொடுப்பனவுகளை வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாடு திறக்கப்பட்டாலும் சுகாதார நெறிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை சம்பந்தப்பட்ட துறையினர் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று கொவிட்-19 கட்டுப்பாட்டுச் செயலணியின் நேற்றைய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## தும்புக் கட்டை...

புரட்டாதி 29ஆம் நாள் தந்தையால் தலையில் தாக்கப்பட்ட மகன் உள்ளே ஏற்பட்ட குருதிக் கசிவுகள் காரணமாக கெரவலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி மறு நாள் காலையில் உயிரிழந்தார்.

49 வயதான தந்தையைக் கைது செய்த காவல்துறையினர் காலி நீதிவான் முன்னிலையில் நிறுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

தும்புத் தடியால் மாணவன் தாக்கப்பட்ட சம்பவத்தை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கடுமையாகக் கண்டித்துள்ளது.

சிறுவர்களை உடல் ரீதியாகத் தண்டிப்பது தவறானது, ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முடித்த விதானபத்திரன.

## 500 மில்...

இலங்கையில் விவசாய விநியோகத்தை மேம்படுத்தும் வகையில் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்திற்கு 500 மில்லியன் டொலர் கடனுதவி வழங்குவதற்கு உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது என்று வங்கியின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள 16 மில்லியன் மக்கள் இந்தத் திட்டத்தால் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

இலங்கையில் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கு வீதிகளையே முழுமையாக நம்பியிருக்கும் நிலையிலும் 67 சதவீதமான மாகாண வீதிகளும் 13 சதவீதமான உள்ளூராட்சி வீதிகளுமே நல்ல நிலையில் உள்ளன.

## கஜேந்திரன்...

ஆணைக்குழு இந்த நகர்வை மேற்கொண்டுள்ளது என்று அதன் இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

நல்லூரில் உள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் புரட்டாதி 29ஆம் நாள் தீபமேற்றி அஞ்சலி செலுத்த முயன்றார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன். அவர் தீபமேற்ற முற்பட்ட சரியான நேரத்துக்கு அங்கு வந்த காவல்துறை அதிகாரிகள் தீபத்தைத் காலால் தட்டிவிட்டதுடன், உடல் பலத்தைப் பயன்படுத்தி அவரை காவல் துறை வாகனத்தில் ஏற்றிக் கைது செய்து கொண்டு சென்றனர். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறினார் என்று அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றம் அவரைப் பிணையில் விடுவித்தது.

அவரது கைதுக்குரிய காரணம், அவர் கைது செய்யப்பட்டதற்கு ஆதாரமாக அவரது குடும்பத்தினருக்கு அது தொடர்பான அறிவிப்புத் துண்டு வழங்கப்பட்டதா, கைது செய்யப்பட்டபோது பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் எவை, நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது என்ன போன்ற விவரங்களை உள்ளடக்கி விரிவான அறிக்கை வழங்குமாறு காவல்துறைப் பொறுப்பதிகாரியிடம் கேட்டிருக்கிறது ஆணைக்குழு.

1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாகப் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

# ஆட்டுவிக்கும் அரிசி விலை!



**ஸூடோ ஸ்வாமி**

அரிசிக்கு உச்சபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அரசினால் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டிருக்கின்றது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு பேசுபொருளாக இருந்த நிலையில், விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் விதத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னதாக-அதாவது-செப்டெம்பர் 2ஆம் திகதியன்று நுகர்வோர் விவகார அதிகார சபையினால் அறிவிக்கப்பட்ட அரிசி வகைகளுக்கான உச்சபட்ச சில்லறை விலைகள் பின்வருமாறு அமைந்திருந்தன. கீரி சம்பா கிலோ ஒன்றின் விலை 125 ரூபா. வேகவைத்து அரிசியாக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா கிலோ ஒன்றின் விலை 103 ரூபா. வேகவைத்து அரிசியாக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்பு நாடு அரிசி கிலோ ஒன்று 98 ரூபா அறிவிக்கப்பட்டிருந்தது.

**புதிய விலைகள் அறிவிப்பு!**

நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட-அனுமதிக்கப்பட்ட- தரப்பினர் அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை மட்டத்தினை நீக்கியதைத் தொடர்ந்து, அதே நாளில் அரிசி வகைகளுக்கான புதிய விலைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் புதிய விலைகளை அறிவித்திருப்போர் யாரெனில், பெரியளவிலான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் ஆவர். அவர்கள் வெளியிட்டிருப்பதாக குறிப்பிடப்படும் அரிசி வகைளுக்கான புதிய விலைகளின் பிரகாரம், நாடு அரிசி கிலோ ஒன்று 115 ரூபா. சம்பா அரிசி கிலோ ஒன்று 140 ரூபா. அதே வேளை கீரி சம்பா அரிசியின் கிலோவிற்கான விலை 165 ரூபா. அரசினால் அறிவிக்கப்பட்ட அரிசி விலைகள் அகற்றப்பட்ட உடனேயே அந்த விலைகளைவிட அதிகமான விலையில் அரிசி விலைகள் ஆலை உரிமையாளர்களினால் அறிவிக்கப்பட்டிருப்பது பெருத்த சர்ச்சையை உண்டுபண்ணியிருக்கிறது.

அரிசி விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் அதிகாரத்தினை அரசு இழந்துவிட்டதாகவும் அந்த அதிகாரம் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் விமர்சனங்கள்



கிளப்பிவிடப்பட்டுள்ளன. அரிசி ஆலை உரிமையாளர்களிடம் சரணடையும் நிலைக்கு அரசு தள்ளுப்பட்டுவிட்டதாகவும் பரிகசிக்கப்படுகின்றது.

அரிசி ஆலை உரிமையாளர்களினால் அறிவிக்கப்பட்டிருக்கும் விலை எவ்வகையிலும் நியாயமில்லை எனக் குறிப்பிடும் கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர், நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டினை நிவர்த்திக்கும் வகையில் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அதேவேளை, உத்தரவாத விலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்துவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

இலங்கை மக்களின் முதன்மையான உணவு நெல்லரிசி சோறு என்பது பாலபாடம். அந்தச் சோறு பெரும்பான்மைத் தரப்பினருக்கு மூவேளை உணவாகவும் விளங்கி வருகின்றது. ஊடகக்குறிப்பு ஒன்றின் பிரகாரம், நாட்டின் வருடாந்த அரிசித் தேவை 2.4 மில்லியன் மெற்றிக் தொன் ஆக இருப்பதால் மாதாந்தம் 2 லட்சம் மெட்ரிக் தொன் அரிசியை சந்தைக்கு வழங்க வேண்டியுள்ளது.

**அனுர குமாரவின் குற்றச்சாட்டு!**

நாட்டின் முதன்மை நெல் ஆலை உரிமையாளர்களுக்குச் சார்பான நிலைப்பாட்டை அரசு எடுத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறார் மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் அனுர குமார திசாநாயக்க. நெல்லுக்குக் குறைந்த கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அகற்றியுள்ளதன் மூலம் விவசாயிகளும் நுகர்வோரும் எந்தப் பயனையும் அடையப்போவதில்லை எனக் குறிப்பிடும் அவர், இந்த நடவடிக்கை மூலம் நன்மையடைவது அரிசி ஆலை உரிமையாளர்கள் மட்டுமே என்கிறார்.

சந்தையில் அரிசியின் விலையை கட்டுப்படுத்த வர்த்தமானி அறிவித்தல்களை விடுவதால் மட்டும் முடியாது எனக் குறிப்பிடும் அனுர, சந்தையில் அரிசியில் நிலவும் ஏகபோகத்தை உடைத்தால் மட்டுமே அது சாத்தியம் என்கிறார்.

**விலை அதிகரிப்பு நிச்சயம் என்கிறது அறிக்கை**

நாட்டு மக்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தும் பொருட்களான தேங்காய் எண்ணெய், சீனி, வெள்ளைப்பூடு, பால்மா மற்றும் எரிவாயு போன்ற பொருட்களும் அவை தொடர்பான தட்டுப்பாடு விலையேற்றம் அல்லது மோசடி தொடர்பான செய்திகளும் ஊடகங்களின் பாடுபொருளாக விளங்கி வந்த நிலையில், அந்தப் பட்டியலில் அரிசியும் இடம்பிடித்திருக்கிறது. இந்தப் பின்னணியில், ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து உலக வங்கி மேற்கொண்ட ஆய்வொன்றின் வெளிப்படுத்தல் அண்மையில் வெளியாகியிருக்கின்றது.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பினால் இலகுவாக பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது. காலநிலை மாற்றத்தினை அடிப்படையாக கொண்டதாக இந்த விலை அதிகரிப்பு அமையும் எனக் குறிப்பிடும் அந்த அறிக்கை, நாட்டின் வறுமை நிலையிலும் அதிகரிப்பு ஏற்படும் எனக் குறிப்பிடுகிறது. நெல் பயிராகும் காலத்தில் ஏற்படக்கூடிய வெப்பநிலை எகிறலும் அதனால் அது விளைச்சலில் ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றியும் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. இன்னும் சில வருடங்களுக்குப் பின் அரிசி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் எனக் கட்டியம் கூறும் அறிக்கை, அது நாட்டின் வறுமை நிலையையும் எகிற வைக்கும் என்கிறது.

சேதனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தினை முன்னெடுத்த அரசு, சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதனப் பசளையில் இருந்த தீமை பயக்கும் நுண்ணுயிரி காரணமாக அதை தடை செய்வதாக அறிவித்திருக்கிறது. இன்னொரு புறத்தில் மிளகாய் இறக்குமதியை நிறுத்தப்போவதாக அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது.

உணவுப் பாதுகாப்பு தொடர்பாக அடிக்கடி நினைவூட்டல்கள் விடப்படும் தருணத்தில் அரிசிக்கான தட்டுப்பாடும் அதனைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் சறுக்கிய நிலையும் நாட்டில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. சந்தையில் உள்ள அரிசிக்கான ஏகபோகத்தை உடைத்து, நெல் செய்கை பண்ணும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து அதனூடாக தன்னிறைவை நோக்கிப் பயணிக்க அரசு முயற்சித்தால் மட்டுமே மதிய விருந்தில் சோற்றை நிச்சயப்படுத்த முடியும். இல்லையேல், அது மதிய உணவாக மரவள்ளிக்கிழங்கை உண்பதில் கொண்டு போய் நிறுத்தலாம்.

**அரிசி விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் அதிகாரத்தினை அரசு இழந்து விட்டதாகவும் அந்த அதிகாரம் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் விமர்சனங்கள் கிளப்பி விடப்பட்டுள்ளன**

# சிறப்புரிமை என்று பொய்க்கூச்சலிடாதீர்கள்!

● நியூட்டன்

தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்போன நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனைக் காவல்துறையினர் தடுத்தார்கள். வாக்குவாதத்தின் தொடர்ச்சியாக கஜேந்திரன் ஏற்றிய சுடரைக் காலால் தட்டிவிட்ட காவல்துறை அதிகாரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளுக்குப் பின்னர் செல்வராஜா கஜேந்திரனை வாகனத்தில் ஏற்றிய காவல்துறையினர் அவரைக் காவல் நிலையத்துக்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் நீதிமன்றம் அவரைப் பிணையில் விடுதலை செய்தது.



விடுவிக்கப்பட்ட கஜேந்திரன் காவல் நிலையத்துக்கு வெளியே வந்து வழங்கிய செய்தியில், தனது நாடாளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று காவல்துறையினரையும் இலங்கை அரசையும் கண்டித்தார்.

உறுப்பினர்களுக்கான நாடாளுமன்றச் சிறப்புரிமை என்பது என்ன? அதை வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் செயற்பட முடியும்? என்பதைத் தெரிந்திருப்பது அவசியம். நடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேர்தலில் வெற்றி பெற்றோ, தேசியப் பட்டியலில் தெரிவாகியோ நாடாளுமன்றத்துக்குச் சென்றதும் அங்கு முதலில் அவர் உறுதியுரையேற்பு செய்யவேண்டியிருக்கும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உறுதியுரையை வாசித்து அதை ஏற்றுக் கொள்கிறேன் என ஒப்பமிட்ட பின்னரே அந்த நபர் சட்டபூர்வமாக நாடாளுமன்ற உறுப்பினராக முடியும்.

### உறுதியுரை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பை ஆதரித்துப் பாதுகாப்பதுடன் இலங்கையில் தனிநாடு ஒன்றை உருவாக்குவதை ஆதரிக்கவோ, ஊக்குவிக்கவோ, நிதியுதவி அளிக்கவோ அதற்கான பரப்புரையை முன்னெடுக்கவோ மாட்டேன் என உறுதியளித்து சத்தியம் செய்கிறேன்.

என்று கூறி ஒப்பமிட்டதன் பின்னரே இலங்கை நாடாளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதிகள் தமது உறுப்புரிமையைத் தொடர்கிறார்கள். இதன் பின்னர்தான் போராட்டம் வெடிக்கும், தடாலடி,

> **இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பை ஆதரித்துப் பாதுகாப்பதுடன் இலங்கையில் தனிநாடு ஒன்றை உருவாக்குவதை ஆதரிக்கவோ, ஊக்குவிக்கவோ, நிதியுதவி அளிக்கவோ அதற்கான பரப்புரையை முன்னெடுக்கவோ மாட்டேன் என உறுதியளித்து சத்தியம் செய்கிறேன்**

கிடுக்கிப்பிடி, ஆட்சியாளர்கள் நடுங்கிப்போயுள்ளனர் என்றெல்லாம் அவர்கள் பேசுவதுண்டு.

ஒற்றையாட்சிக்கு எதிராக (உறுதியேற்புரைக்கு எதிராக) தனித் தமிழீழத்தை வலியுறுத்தியே திலீபன் பட்டினிப் போராட்டம் நடத்தினார். விடுதலைப் புலிகள் அமைப்பும் தனித் தமிழீழத்துக்காகவே போராடியது. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பிரிவினைக்குச் சார்பாக ஒருபோதும் நடக்கமாட்டேன் என உறுதியேற்புரை செய்து ஒப்பமிட்டுக் கொடுத்த பின்னரும் நாட்டைப் பிரிப்பதற்காக உயிர் நீத்த ஒருவருக்காக நினைவேந்தல் செய்துவிட்டு அதற்காகத் தன்னைக் கைது செய்த காவல்துறையினர் தனது நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டு விட்டது என்று கூச்சலிடுவது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றது. திலீபனை ஏற்றால் சிறப்புரிமையைக் கைவிட வேண்டும். சிறப்புரிமையை ஏற்றால் திலீபனைக் கைவிட வேண்டும். இரண்டும் வேண்டும் என்கிற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசை பேராசையன்றி இனமானப் போராட்டம் அல்ல நிச்சயம்.

### சீனச் சார்பும் இந்திய எதிர்ப்பும்

தற்போது இலங்கை அரசுக்குப் பக்க பலமாக இருக்கும் நாடு சீனா. சீனாவின் பொதுவுடமைக் கட்சி (கொமியூனிஸ்ட் பார்ட்டி) தொடங்கப்பட்டு 100ஆண்டுகள் ஆகிவிட்டதால் இலங்கையில் சீனச் சார்ப்பு பொதுவுடமைக் கட்சியைச் சீன அரசு புதுப்பித்தபோது அதில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அங்கத்துவம் பெற்றனர். அதில் ஒருவர் கஜேந்திரன் மற்றவர் செல்வம் அடைக்கலநாதன். இந்தச் சீனச் சார்புச் செயற்பாடு கோட்டாபய அரசைத் தமிழர் தரப்பில் தாங்கிப் பிடிக்கின்ற ஒரு செயற்பாடே. திலீபனும் வேண்டும் சிறப்புரிமையும் வேண்டும் சீனாவும் வேண்டும் என்பது எத்தகைய ஆசை என்பதை இந்தக் கட்டுரையை வரையும் வரை என்னால் வரையறுக்க முடியவில்லை.

திலீபன் இந்திய அரசுக்கு எதிராக பட்டினிப் போராட்டம் நடத்தியவர். கஜேந்திரனின் சீனச் சார்பு நிலைப்பாடு திலீபனை நினைவுகூருவதன் மூலம் சமகாலத்தில் இந்தியாவை எதிர்ப்பதாகவும் அமைந்திருக்கலாம். அதே நேரம் அவரது கட்சியின் தலைவரோ தாங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர் என்று மீண்டும் மீண்டும் அடித்துச் சொல்கிறார்கள்.

அது உண்மையானால் கஜேந்திரனும் இந்தியச் சார்பானவர். இந்தியச் சார்புத் தமிழ் அரசியல்வாதிகள் திலீபன் விடயத்தில் தாங்களும் நிற்பதாக மக்களுக்குக் காட்ட முற்படுவது இந்தியாவை நேரடியாகப் பகைத்துக்கொள்ளாமலும் இருக்கவேண்டிய ஈருடகப் பாணிக்காக மட்டுமே இருக்க முடியும்.

### புலிகள் மீதான தடையை நீக்குதல்

விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பாக இலங்கையில் இருக்கும் வரை ஏனைய நாடுகளில் அதன் தடையை நீக்குவது சாத்தியமில்லை. புலிகள் மீதான தடையை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தோ, ஆர்ப்பாட்டங்கள் செய்தோ, சர்வதேச செயற்பாடுகளாலோ கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் அரசியல்வாதிகளால் நீக்க முடியவில்லை. எனவே நல்லிணக்கம், புரிந்துணர்வு போன்ற செயற்பாடுகளின் மூலமே தடையை நீக்க முடியுமா என்று கேட்டால் 2015-2019ஆம் ஆண்டு வரை நீடித்த நல்லாட்சி அரசில்கூட அது நடக்கவில்லை என்பதுதான் உண்மை. அப்படியிருக்கும்போது இலங்கை நாடாளுமன்ற சிறப்புரிமையை அனுபவித்துக் கொண்டே திலீபனைப் பகிரங்கமாக நினைவேந்த வேண்டும் என்று கஜேந்திரன் நினைப்பதன் சாத்தியப்பாடு மக்களை ஏமாற்றும் தந்திரமன்றி வேறெதுவுமாக இருக்க முடியாது.

### திலீபனின் நிலை

திலீபன் அகிம்சை வழியில் தன் உயிரை ஆகுதியாக்கியவர். அவ்வாறு இறந்தவரின் நினைவு நாளில் அவருக்குத் தீபம் ஏற்றுவதற்கு வன்முறையைத் தெரிந்தெடுக்க வேண்டிய அவசியமுமில்லை. காவல்துறையினரின் காலுக்குள் கற்பூரம் ஏற்றிவிட்டுக் காவல்துறையினர் காலால் தட்டிவிட்டார்கள், மக்கள் குமுறி எழ வேண்டும் என எதிர்பார்ப்பது இன்றைய சூழலில் எந்த வகையிலும் சாத்தியமானதல்ல. இவ்வாறான உசுப்பேற்றல்களைக் கடந்து பயணிக்க மக்கள் ஏற்கனவே தயாராகிவிட்டார்கள்.

திலீபனுக்குத் தீபம் ஏற்றுவதற்குப் பதிலாக அவர் சாவடைந்த தினத்தில் வடக்குக் கிழக்கில் மதுபான சாலைகளை மூடி மக்கள் வீட்டைவிட்டு வெளியேறாமல் இருந்திருந்தால், திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளையும் மக்களிடம் எடுத்துச் சென்று பரப்புரை செய்திருந்தால் (நாடாளுமன்ற சிறப்புரிமையை எதிர்பார்க்காமல்) அந்தத் தினம் புனிதப்படுத்தப்பட்டிருக்கும். மக்களுக்காக இறந்த ஒருவரின் நினைவைச் சில அரசியல்வாதிகள் தமது வீட்டு அறைகளுக்குள்ளும் அலுவலகங்களிலும் தீபம் ஏற்றிச் சமூக வலைத்தளங்களில் வெளியிடும் அரசியல் வேசமே தமிழர்களின் இன்றைய துர்ப்பாக்கிய நிலை.

ஒரு தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்தவரின் நினைவேந்தலைச் செய்வது என்பது பயங்கரவாதச் செயற்பாடு என்று சட்டமியற்றியிருக்கும் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையுடன் திலீபனை நினைவேந்த எடுக்கும் முயற்சி தனிநபர் அரசியல் வேடமே தவிர இன விடுதலைப் போராட்டமல்ல. தமிழ் அரசியல்வாதிகள் இன விடுதலை என்கிற பெயரில் தமது வாக்கு வங்கி அரசியலை முன்னெ டுப்பதற்கான முயற்சிகளைத்தான்

# மசாய் மறா காட்டில் புலி வேட்டையோடு கூடிய பயண அனுபவம்

01



**எம். லோகி**
*(காட்டுயிர் ஒளிப்படக் கலைஞன்)*

உயிர் வாழ்வதற்குத் தேவையான உயிர் வாயுவான ஒட்சிசனை உருவாக்கும் புவியின் பெரு நிலங்கள் காடுகளே! மழை தந்து வளம் கொடுக்கும் காடுகளின் வனப்பைச் சொல்லில் வடித்திட முடியாது. காடுகளோடு அளவளாவி, வாழ்க்கை நடத்தும் விலங்குகளைக் காணவும் அவற்றை ஒளிப்படம் எடுக்கவும் கண்டம் விட்டுக் கண்டம் போக அதுவும் ஆபிரிக்கா போகப் புறப்பட்டேன்.

வழமை போலதான் அன்றும் விடிந்தது. ஆனால் ஏனோ ஒரு புது உற்சாகம் என்னைப் பற்றிப் பிடித்துக் கொண்டது.

ஒளிப்படக் கலை எனது வியாபார நோக்கையும் தாண்டிய உயிர்மூச்சு என்று சொல்லலாம். பரந்து கிடக்கும் இந்த உலகின் வனப்பையும் அதன் அதிசயத்தையும் என் கண்வழியாக கண்டு அதன் அழகை ஆர்ப்பரிப்போடு அனுபவித்திட வேண்டும் என்பது மாத்திரமன்றி கண் வழி கண்ட அழகை பொக்கிஷப்படுத்தவும் தவற மாட்டேன். அவ்வாறு எண்ணியே எனது பயணப் பையில் முதலாவதாக பத்திரப்படுத்தப்பட்டது. Nikon D500 உம் Nikon D750 உம் இவற்றுடன் சேர்த்து Nikon 500 mm 5,6 PF ED VR ஒன்றும் அதனோடு Nikon 70 -200mm 2,8 E FL ED VR ஒன்றுமாகும். இவற்றுடனே ஜேர்மனியிலிருந்து எனது ஆபிரிக்கா நோக்கிய பயணம் தொடங்கியது.

மசாய் மறா ( Masai Mara ) என்பது ஆபிரிக்காவின் கென்யாவில் உள்ளது. அங்கு சென்று லொறியான் சபான் முகாமிலே ( Lorian safari Camp ) 7 நாள்கள் தங்கினேன். அதிலிருந்து 3ஆவது நாளில் நடைபெற்ற நிகழ்வை மட்டுமே இந்தப் பயண அனுபவக் குறிப்பில் உங்களுடன் பகிர்கிறேன்.

*** *** ***

அன்று விடியற்காலை. இதனமான குளிர் ஆனாலும் வழமைபோல போர்வையை இழுத்து மூடிக்கொண்டு உறங்க மனம் இடம்கொடுக்கவில்லை. ஆர்வம் போர்வையையும் தாண்டி எட்டி பார்க்க வைத்தது. கடிகாரத்தை எடுத்துப் பார்த்தேன். மணி 4ஐக் காட்டியது. கடகடவென்று எனது காலைக் கடன்களை முடித்தேன். 5 மணிக்கு பயணப்படத் தொடங்கி னேன்.



உலகின் பெரும் மிருகங்களான சிங்கம், புலி, யானை, ஒட்டகச் சிவிங்கி, காண்டாமிருகம் போன்றவற்றின் வாழிடமே இந்தக் கென்யாவின் மசாய் மறா காடு. மசாய் மறாவை ஊடறுத்த எனது காட்டுவழிப் பயணத்துக்கு ஒரு சிறு வாகனமும், அனுபவம் மிக்க சாரதி ஒருவரையும் வழங்கினார்கள். அவர்தான் மரியாதைக்குரிய பென்சன் ( Benson ). ஆபிரிக்கக் குடிமகன். 15 வருடங்களுக்கும் மேலாக என்னைப் போன்றோருக்கு வாகனச் சாரதியாகப் பணி புரிந்துகொண்டிருக்கிறார். அத்துடன் பென்சனும் திறமையான புகைப்படக் கலைஞராம். எங்கள் இருவருக்குமிடையேயான உரையாடல் ஆங்கில மொழியில் மட்டுமே நடைபெற்றது. மசாய் மறாவின் வனச் சூழல் அமைப்பு, அங்குள்ள விலங்குகள், அவற்றின் வாழ்வியல் என்று பலதரப்பட்ட தகவல்களை தெளிவாக விளக்கினார் பென்சன். என்னுடைய இந்தப் பயணத்துக்கும் எனது பொக்கிஷங்களான ஒளிப் படங்களிற்கும் இந்த சாரதியின் பங்கும் பெருந்துணை புரிந்தது என்றால் மிகையாகாது. வண்டி அதன் போக்கில் நகரத் தொடங்கியது. (தொடரும்...)

---

## சிறப்புரிமை...

செய்கிறார்கள் என்பதையே இந்தச் சம்பவம் மீண்டும் ஒருமுறை உணர்த்துகின்றது.

### நாடாளுமன்றக் கடிதத் தலைப்பு, தபால் இலட்சினை

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்றக் கடிதத் தலைப்பில் இலங்கை அரசுக்கு எதிரான செயற்பாடுகள் பலவற்றில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள பலருக்கு, இவருக்குப் புலிகளுடன் தொடர்பிருந்ததால் இவர் இங்கு வாழ முடியாது இவர் திருப்பி அனுப்பப்பட்டால் இலங்கைப் படையினரால் கொல்லப்படுவார் - என்ற கடிதங்களை வழங்கியிருக்கின்றனர். இத்தகைய கடிதங்கள் வழங்கப்படுவதற்காக பணம் பெறப்படுவதான குற்றச்சாட்டுக்கூட உண்டு. உத்தியோகபூர்வத் தபால் தலையைப் பிரிவினைவாதத்துக்குச் சார்பாகப் பயன்படுத்தி நடந்துகொண்ட பல உதாரணங்கள் இலங்கைப் புலனாய்வுத் துறையினரிடம் உண்டு. இவ்வாறு தாம் ஏற்றுக்கொண்ட சிறப்புரிமையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாமே மீறுகின்றபோது அதனைக் காவல்துறையினர் மதிக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

### மக்கள் பிரதிநிதிகள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடளுமன்றத்துக்குச் சென்றவர்கள். நாடாளுமன்றம் ஒரு மக்கள்பிரதிநிதிகள் சபை என்பதால் உறுப்பினர்கள் மிகவும் பொறுப்பாக உரையாற்ற வேண்டும். பொறுப்பற்ற வகையில் உரையாற்றினால் அவர்களைத் தெரிவுசெய்த மக்களைத்தான் திட்டுவார்கள்

2004ஆம் ஆண்டுத் தேர்தலில் செல்வராசா கஜேந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டபோதும் நாட்டைப் பிளவுபடுத்தும் விடயங்களுக்குச் சார்பாக இருக்க மாட்டேன் எனச் உறுதியேற்புச் செய்துவிட்டே வடக்கிலுள்ள 40ஆயிரம் படையினரின் உடலங்களைத் தென்பகுதிக்கு அனுப்புவோம் - என்று கூறியிருந்தார். இத்தகைய ஒரு வீராப்புப் பேச்சை விடுதலைப் புலிகளின் தலைவரோ அல்லது தளபதிகளோ கூட ஒருபோதும் கூறியதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புலிகள் தமது ஜனநாயகப் பிரிவாகவே நாடாளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தார்கள். அந்தப் பொறுப்போடு கஜேந்திரன் நடந்துகொண்டார் என்று சொல்வதற்கில்லை. வீறாப்புப் பேச்சால் அவர் சிங்கள மக்களையும் சீண்டிவிட்டது மட்டுமே நடந்தது.

இந்த மாதிரியான அரசியல் துடுக்குத்தனங்களை விடுத்து நாடாளுமன்ற சிறப்புரிமையோடு திலீபனை நினைவேந்த கஜேந்திரன் போன்றவர்கள் நினைத்தால், விடுதலைப் புலிகள் அமைப்பு மீது இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க அவர்கள் சட்ட மற்றும் அரசியல் வழிமுறைகளையே நாட வேண்டும். இதைச் செய்து முடிக்காதவரை தமிழ்த் தேசியம் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு இருக்கக்கூடிய சிறப்புரிமை மீறப்படுவதாகக் குரல் கொடுக்கக்கூடாது.

# "ஹில் புக்" கில் (கொலைப் புத்தகம்) பதிவான சாவுகள்

**கமலநாதன்**

போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இலங்கைத் தரைப் படையில் பதவி வகித்த பலரையும் அணுகி தமது பதிவுகளின் ஊடாக அவர்கள் எவ்வாறு புலிகளை வென்றார்கள், அல்லது பயங்கரவாதத்தை ஒழித்தார்கள் என்றும் அதில் ஒவ்வொரு சிப்பாயும் எத்தகைய அர்ப்பணிப்புகளைச் செய்தார்கள் என்றும் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறுவதில் சிங்கள யூரியூப் வலைத்தளங்கள் போட்டி போட்டுச் செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய எல்லா இணையத்தளங்களுமே புலிகளைப் பயங்கரவாதிகள் என்றே அழைக்கின்றன.

இலங்கைப் படையினரின் சினைப்பர் துப்பாக்கிதாரியாக இருந்த "தாசன்" என அழைக்கப்படும் விமலசேனவின் கடமைக் காலம் பற்றிய பதிவொன்றை "வெனச" என்கிற யூரியூப் பகுதியில் பார்க்கக் கிடைத்தது. அவரது சினைப்பர் தாக்குதல்களில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் விவரத்தை இலங்கைத் தரைப்படையால் பேணப்படும் 'ஹில் புக்' என்கிற கொலைப் புத்தகத்தில் பதிந்துள்ளனர். அதில் விமலசேனவால் கொல்லப்பட்ட 169 பேரினது கொலைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதைவிட உறுதிப்படுத்தப்படாத 38 தாக்குதல் விவரமும் உண்டு என்கிறார் தற்போது ஓய்வு நிலையில் உள்ள அவர்.

ஓய்வு பெறும்போது 2ஆம் லெப்ரிணன்ட் ஆக ஓய்வு பெற்றிருக்கிறார். அவரது செவ்வியின் முக்கிய சில விடயங்கள் இங்கு பதிவுசெய்யப்படுகின்றன.



**அவரது செவ்வியிலிருந்து...**

நான் 1986இல் இலங்கைத் தரைப் படையில் இணைந்தேன். நான் இணைந்த பிரிவு சிங்கப் படைப்பிரிவு. 1990இல் தியத்தலாவ படை முகாமில் சினைப்பர் பயிற்சி நெறி தொடங்கப்பட்டது. அதுவே முதலாவது சினைப்பர் படைப்பிரிவாகும். அதில் நான் திறமைச் சித்தி பெற்று முதல் நிலைக்கு வந்தேன். இந்தப் பயிற்சிக்குக் கேணல் டி.பி.ராஜசிங்க என்பவர் பொறுப்பாக இருந்தார். அதன் பின்னர் ஜெனரல் வனசிங்க பொறுப்பாக இருந்தார் (தற்போது இலங்கைத் தரைப்படையில் அவரது மகன், ஜெனரல் வனசிங்க என்ற பதவி நிலையில் உள்ளார்). 1990இல் சினைப்பர் பற்றிய வகுப்புகள் நடத்தப்பட்டன. ஆனால், செயன்முறைப் பயிற்சிக்காகச் சினைப்பர் துப்பாக்கிகளைப் பெறுவதில் சிரமம் இருந்தது. முதற் தடவையாக 12 சினைப்பர் துப்பாக்கிகளை ஜெனரல் வனசிங்கவின் முயற்சியால் பெற முடிந்தது.

முதற் பிரிவில் 16 பேர் சினைப்பர் பயிற்சி பெற்றிருந்தபோதிலும் நாங்கள் அனைவரும் ஒன்றாகவோ அல்லது தனியாகவோ எங்கும் சென்று தாக்குதல் நடத்த முடியாது. படை முகாம்களின் மீது புலிகள் தாக்குதல்களை நடத்தும்போது எங்களில் 2 அல்லது 3 பேரை அங்கு போகுமாறு பணிப்பார்கள்.

இன்னோர் சந்தர்ப்பத்தில், படைப் புலனாய்வாளர்கள் புலிகளின் நடமாட்டம் உள்ள பகுதிகளை அடையாளம் கண்டு அங்கு அழைத்துச் செல்வார்கள். அந்த இடங்களிலுள்ள நிலமைகளை எற்களுக்கு விளக்குவார்கள். அதன் பின்னர் நாங்கள் எங்களுக்குரிய விசேட பங்கர்களை எவ்வாறு அமைத்துத் தரவேண்டும் என்று கூறுவோம்.

இராணுவப் புலனாய்வாளர்களின் தகவல்படி படை முகாம் எல்லைகளில் மாலை 5 மணிக்கும் 5.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் புலிகள் வந்து கிளைமோர் பொருத்துவார்கள். அவர்களின் நோக்கம் படையினர் போய் வருகிற இடத்தில் தாக்குதல் செய்வதே

**90இல் தொடக்கம்**

1990 டிசம்பர் மாதத்தில் பலாலி முகாமிலிருந்து வசாவிளான், காங்கேசன்துறையை அண்மித்த பகுதிகளில் முதன் முதலாக எனது செயற்பாட்டைத் தொடங்கினேன். இராணுவப் புலனாய்வாளர்களின் தகவல்படி படை முகாம் எல்லைகளில் மாலை 5 மணிக்கும் 5.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் புலிகள் வந்து கிளைமோர் பொருத்துவார்கள். அவர்களின் நோக்கம் படையினர் போய் வருகிற இடத்தில் தாக்குதல் செய்வதே. அப்படி வரும் புலிகளை இலக்கு வைத்து அந்த இடத்தில் தாக்கியபோது புலிகள் பலர் இறந்தனர். புலிகளின் தொலைத்தொடர்பு மற்றும் அவர்களின் செய்திகள் மூலம் அவற்றை உறுதிப்படுத்த முடிந்தது. பின்னர் தாக்குதலை குரும்பசிட்டிப் பகுதியில் மேற்கொண்டேன். சில இடங்களில் பல மாதங்களாகக் காத்திருந்தேன். ஒரு தாக்குதல் நடந்த பின் அந்த விவரத்தை ஒரு படிவத்தில் பதிவு செய்து கொடுக்க வேண்டும். பின்னர் புலனாய்வுத் துறையினர் அதை உறுதிப்படுத்திய பின்னரே ஹில் புக்கில் அது பதியப்படும்.

**13 மாதங்களின் பின்னர் தாக்குதல்**

படைத்துறைப் புலனாய்வுப் பிரிவினரின் தகவலின்படி எமது பாதுகாப்பு அரணைப் பலப்படுத்திவிட்டுப் பல மாதங்கள் காத்திருப்போம். 1992ஆம் ஆண்டு வவுனியா - தாண்டிக்குளம் பகுதிக்கு வடக்காகப் புலிகளின் நடமாட்டம் இருப்பதாக அங்கு பங்கர் அமைத்துக் காத்திருந்தோம். புலனாய்வுத் துறையினர் இன்று தாக்குதல் நடக்கும் நாளை தாக்குதல் நடக்கும் என்று எமக்குத் தகவல் தருவார்கள். எனினும் 13 மாதங்களின் பின்பே இலக்குக் கிடைத்தது. புலிகள் பொதுமக்கள்போல சாதாரண உடையில் வந்து (சாக்குகளுக்குள் ஆயுதங்களைக் கொண்டுவந்து) தாக்குதல் நடத்தினர். நான் இருந்த பங்கருக்கு 2 ஆர்.பி.ஜி செல்களை அடித்தார்கள். எங்கள் பங்கர் பலமாகப் போடப்பட்டிருந்ததால் பாதிப்பு இருக்கவில்லை. அந்த பங்கர் அமைத்து 13 மாதங்கள் கடந்துவிட்டதால் அந்த பங்கருக்குள் யாரும் இருக்க வாய்ப்பில்லை என்று புலிகள் முடிவெடுத்திருக்க வேண்டும். நானும் எனது உதவியாளர் ஒருவரும் அந்த பங்கரில் இருப்பது வழக்கம்.

**5 நிமிடத்தில் 22 பேரைக் கொன்றேன்**

1992 ஏப்ரல் மாதம் அந்தச் சம்பவம் நடந்தது. எனது உதவியாளர் காலை உணவை உண்டுவிட்டு எனது உணவை எடுத்துவரச் சென்றிருந்தார். அவர் சென்ற சற்றுநேரத்தில் ஏ9 வீதியின் இரு மருங்கிலும் புலிகள் தயார்ப்படுத்தலில் நின்றார்கள். எனது பங்கரிலிருந்து 800 மீற்றர் தூரத்தில் நின்றார்கள். இலக்குக் கிடைத்ததும் சினைப்பரால் தாக்கினேன். முதலில் மகசினில் இருந்த 10 குண்டுகளால் 10 பேரின் தலைக்கு வெடி வைத்தேன். மீண்டும் ஒரு மகசினை மாற்றி மேலும் 10 பேருக்கு தலையில் சுட்டேன். பின்னர் தனிக் குண்டுகள் 2 பாவித்து மேலும் இருவரைச் சுட்டேன். இந்தத் தாக்குதல் வெறும் 5 நிமிட நேரத்தில் நடந்து முடிந்தது.

இந்தத் தாக்குதல் நடந்து 5 வருட காலமாகப் புலிகள் யாருமே தாக்குதல் நடந்த பகுதிக்கு வரவில்லை. அந்த 22 புலிகளையும் காவு கொடுத்ததற்காக அந்த அணிக்குத் தலைமை தாங்கி வந்த தலைவரைப் புலிகள் சுட்டதாகப் பின்னர் அறிந்தேன்.

**பல வேகய - 1**

1991 ஜூலை 14 தொடக்கம் ஒகஸ்ட் 9 வரை 26 நாள்கள் பலவேகய -1 தாக்குதல் நடந்தது. இதற்குப் புலிகள் தமது தாக்குதலுக்கு ஆகாயக் கடல்வழிச் சமர் என்று பெயரிட்டனர். பல்வேறு முனைகளில் இருந்து ஆணையிறவை நோக்கி இந்தத் தாக்குதலைத் தொடுத்திருந்தபோதும் பெரு வெளியான கள நிலவரத்தில் இருந்த பிரச்சினைகள் எனப் பல்வேறு காரணிகளால் புலிகளின் 603 போராளிகள் இறந்தனர். ஆணையிறவு முகாமைப் பாதுகாப்பதற்காக படையினரை வெற்றிலைக்கேணியில் கடல் மார்க்கமாகத் தரையிறக்கினார்கள். இந்தத் தாக்குதலுக்கு ஜெனரல் கொப்பே கடுவ, இன்றைய பீல்ட் மார்சல் சரத் பொன்சேக, பிரிகேடியர் விஜய விமலரட்ண போன்றவர்கள் தலைமை தாங்கினார்கள்.

## ஹில் புக்...

புலிப் போராளியின் தலையை பங்கருக்கு அருகில் நட்டு வைத்தேன்

சினைப்பர் துப்பாக்கிதாரர்களாக நானும் இன்னொருவரும் அங்கு களமிறக்கப்பட்டோம். அங்கு தென்னந்தோட்டம் ஒன்றுக்குள் இருந்து புலிகளின் இலக்குக்கு அடித்தேன். அதில் 9 பேர் கொல்லப்பட்டனர். மீண்டும் 1997 தாக்குதல் காலத்திலும் நான் அங்கு கடமையாற்றினேன். ஒரு நாள் காலையில் புலிகள் வசமிருந்த பக்கத்தில் சாதாரணமாகப் பலர் உலவுவதைக் கண்டேன். தாக்குதலை நடத்திவிட்டு ஒருவரின் தலையை வெட்டியெடுத்து 2 கிழமைகள் வரை நிலத்தில் புதைத்து விட்டுப் பின்னர் அதைச் சுத்தம் செய்து அந்த மண்டையோட்டை எனது பங்கருக்கு அருகில் ஒரு தடியில் குத்தி வைத்திருந்தேன்.

அன்றைய தினம் அங்கு உலாவியவர்கள். மட்டக்களப்பிலிருந்து கொண்டு வரப்பட்ட புலி அணியினர். அவர்களுக்குப் பூகோள ரீதியில் புலிகள் எங்கு நிற்கிறார்கள் படையினர் எங்கு நிற்கிறார்கள் என்ற விடயம் விளங்கவில்லை. தலை வெட்டிய முண்டத்திலிருந்த தரவுகளை வைத்து புலனாய்வுத் துறையினர் அது மட்டக்களப்பு தலைவரின் தலை என்று எனக்குச் சொன்னார்கள்.

**போர் உக்கிரம்**

படையினர் ஆணையிறவுக்குச்செல்லும் பாதைகளைப் புலிகள் தம்வசப்படுத்தியிருந்தார்கள். மீண்டும் அந்த இடங்களைக் கைப்பற்ற படையினர் முயன்றபோது புலிகள் உக்கிரமாகத் தாக்கியதால் அதிகமானவர்கள் இறந்துபேகவும் காயப்படவும் நேரிட்டது. அந்த இடத்தில் நிலையெடுப்பது சிரமமாக இருந்தது. அதிகாலை 5.30 மணிக்குள் உரிய இடங்களுக்குச் சென்று நிலையெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் புலிகள் எங்களைக் கண்டுவிடுவர்.

இந்தச் சண்டையில் முதல்நாள் நிலையெடுத்து 13 பேருக்கு தலையில் வெடி வைத்தேன். இரண்டாவது நாள் 17 பேருக்கு வெடி வைத்தேன். பின்னர் ஒவ்வொரு நாளும் 3 அல்லது 4 பேரைச் சுட்டேன். இந்த நாளில் எனக்கு நன்கு பழக்கமான பொத்திகாபொல என்ற படை அதிகாரியைக் கண்டு கதைத்தேன். நாங்கள் நிற்கும் கள நிலவரத்தை அவருக்கு எடுத்துக் கூறினேன். பின்னர் அவர்களது அணியினர் வந்து நாம் இருந்த இடத்தைப் பொறுப்பெடுத்தார்கள். நான் வெறோரு இடத்தில் நிலையெடுத்தேன்.

2 ஆயிரமாம் ஆண்டு தை முதல் நாள் பலாலி படை முகாம் பொறுப்பாளராக இருந்த பிரிகேடியர் அமரதுங்க ஆணையிறவுக் களமுனையைப் பார்க்க வருவதாக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபோது புலிப் போராளிகள் இருவர் ஒரு மோட்டாரைக் கொண்டு வந்து எம்மை நோக்கிப் பொருத்துவதைக் கண்டேன் உடனடியாக அந்த இருவருக்கும் தலைகளுக்கும் வெடி வைத்தேன்.

பளைக்கு அருகில் தென்னஞ்தோட்டப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பொச்சு மட்டைக்குள் புகுந்து ஒரு சிறிய இடைவெளியூடாக அவதானித்துக் கொண்டிருந்தபோது உயரமான, பருத்த புலிகளின் தலைவர்களில் ஒருவர் இலங்கைத் தரைப்படை உடையில் ஹெல்மட் ஜக்கற்றுகள் அணிந்து 15 பேர் வரை அவரைச் சுற்றி (அவர்களும் அதே போன்ற உடையணிந்து) செல்வதைக் கண்டேன். நான் இருந்த இடத்துக்கு மிக அண்மையில் அந்த இலக்குக் கிடைத்தபோதிலும் தாக்குதல் நடத்தினால் நான் தப்ப முடியாத சூழல் இருந்ததால் சுடவில்லை. நான் கண்ணால் பார்க்கக்கூடிய ஒரு சிறிய ஓட்டைக்குள்ளால் மட்டுமே அவர்களைப் பார்க்க முடிந்தது.

மறுநாள் மேஜர் சாந்த ஹேரத்திடம் இதுபற்றிக் கூறினேன். அங்கு வந்துபோனது புலிகளின் கடற்படைத் தளபதி சூசை என்றார். எனக்கு மிகவும் துக்கமாக இருந்தது. தவறவிட்ட சந்தர்ப்பத்தை நினைத்து இன்றுவரை வேதனைப்படுகிறேன்.

எனது இந்தத் தாக்குதல்களுக்காக ரணசூர, ரணவிரு ஆகிய இரண்டு பதக்கங்களை ஒரே நாளில் ஜனாதிபதி சந்திரிகா வழங்கினார். அந்த நிகழ்வுக்கு 4 நாள்களுக்கு முன்னதாக நான் பலாலியிலிருந்து ரத்மானலனைக்கு வான்படை வானூர்தியில் போய்க்கொண்டிருந்தபோது புலிகள் மத்திய வங்கியைத் தாக்கி அது எரிந்துகொண்டிருப்பதை வானத்திலிருந்தவாறு அவதானித்தேன்.

# வத்தல் குழம்பு



உறைப்புணவான குழம்பு நம்மவர்களின் உணவில் முக்கிய இடம்பிடிப்பது. குழம்பில்லாத மதிய உணவே இல்லை எனலாம். மதிய உணவைத் தாண்டி மற்றையநேர உணவுகளிலும் தவிர்க்க முடியாமலிருக்கிறது குழம்புக் கறி.

இந்தக் குழம்புக் கறி வகை சேராமல் ருசிக்கும் உணவில்லை என்கிற நிலைதான் இங்கிருக்கிறது. இத்தகைய குழம்பிலும் பல வகைகள், ரகங்களைக் கண்டறிந்து ஆக்கி உண்டு வருகிறார்கள். இதனால் நம்மவர்கள் மத்தியில் பல குழம்பு வகைகள் இருக்கின்றன. பிரட்டலாக, தண்ணீர் அதிகமாக, பால்; சேர்க்காமல் உறைப்பாக, தூள் சேர்க்காமல் மிளகு, சீரகம் சேர்த்த பிரட்டலாக எனப் பல வகைக் குழம்புக் கறிகள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் வற்றல் குழம்புக்கறியும். இதற்காக வற்றலிடக்கூடிய காய்கறிகள், மரக்கறிகளைத் தெரிவு செய்கிறார்கள்.

தேவையான பொருள்கள்

வற்றல் போட்டுப் பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய பாகற்காய், சுண்டைக்காய், தக்காளி ஆகியவற்றில் ஒன்றை இதற்குச் சேர்த்துக்கொள்ள முடியும். அத்துடன், கடுகு, வெந்தயம், செத்தல் மிளகாய், கறிவேப்பிலை, வெங்காயம், பழப்புளி, உப்பு ஆகியனவும் வழமையான கறிக்கு ஏற்றளவில் தேவை.

கறியாக்குவது எப்படி?

வெங்காயம், கடுகு, வெந்தயம், துண்டாக்கப்பட்ட செத்தல் மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றைத் தாழித்துப் பின்னர் அதற்குள் வற்றலைப் போட்டுப் பொரியவிடவேண்டும். வற்றல் வதங்கிவர உப்பும் மிளகாய்த் தூளும் புளியும் சேர்த்து நீரில் கரைத்து அடுப்பிலுள்ள வற்றல் கலவையுடன் சேர்க்கவேண்டும். பின்னர் நன்கு கொதிக்கவிட்டு நீர்வற்றிக் குழம்பு இறுக வரும்வரை வேகவிடவும். உப்புப், புளியைச் சரிபார்த்து இறக்கினால் சுவையான வற்றல் குழம்பு தயார்.





## உலகம் திருந்துகின்றது!

உலகிலேயே மிகவும் பழமையான வெப்பமண்டல மழைக்காடுகளான டெய்ன்ட்ரீ மழைக்காடுகள் ஆஸ்திரேலியாவிலுள்ள ஆதி குடிகளிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் ஆதிக்குடி சமூகத்துக்கும் ஏற்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தின் கீழ் இந்த காடுகள் ஒப்படைக்கப்படுகின்றன.

ஐநாவின் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த மழைக் காடுகள் சுமார் 18 கோடி ஆண்டுகள் பழமையானவை. ஆதிக்குடிகள் பல தலைமுறைகளாக இங்கு வசித்து வருகின்றனர்.

தற்போதைய ஒப்பந்தத்தின்படி குயின்ஸ்லாந்து மாகாண அரசு மற்றும் ஈஸ்டர்ன் குக்கு யலாஞ்சி ஆதிக்குடி மக்கள் ஆகியோர் இந்த மழைக்காடுகளை ஒன்றாக நிர்வகிப்பார்கள்.கிரேட் பேரியர் ரீஃப் பவளத்திட்டை ஒட்டி இந்த மழைக் காடுகள் அமைந்துள்ளன.

ஆஸ்திரேலியாவின் மிகவும் பிரபலமான சுற்றுலா இடங்களில் இந்த மழைக் காடுகளும் ஒன்று.

# கன்னிகா தானம் என்பதே இனிக் கேள்விக்குறி...?

**ரவீந்திரன்**

**ஒரு வம்ச விருத்திக்காக எம் குல விளக்கை (மகளை) உனக்கு (மாப்பிள்ளைக்கு) தானமாக அளிக்கிறேன் என்று தந்தையால் செய்யப்படும் தானமாகவே கன்னிகாதானம்**



கனடாவில் வாழ்கின்ற தமிழ்ப் பெண்கள் இருவர் ஓரினச் சேர்க்கை இணையாக மாறியிருக்கின்றனர். சைவத் தமிழ் முறைப்படி அவர்கள் தமது வாழ்க்கையைத் தொடங்கிய விடயம் கடந்த வாரம் சூடுபிடித்திருந்தது. இந்து முறைப்படி சேலை, சோடனைகள் என அந்தத் திருமணம் நடத்தப்பட்டிருக்கிறது. பிராமணர் ஒருவர் மந்திரம் ஓதித் தாலியை எடுத்துக்கொடுத்திருக்கிறார்.

இந்தத் திருமணத்தை ஆதரிக்கும், எதிர்க்கும் கருத்து வெளியிடுபவர்கள் ஒருபுறமிருக்க இதை விமர்சிக்கும் இருசாராரும் திருமணத்தை நடத்தி வைத்த பிராமணரைக் குறிவைத்துக் கடுமையாக விமர்சிப்பதைக் காணமுடிகிறது. பணத்துக்காக எதையும் மாற்றலாமா? கலாசாரத்தை அழிக்கலாமா? இதற்கு இந்து மதத்தில் அனுமதி உண்டா? எனக் கேள்விகள் பல எழுப்பப்படுகின்றன.

**கன்னிகா தானம் என்பது என்ன?**

கன்னிகா தானம் பாராம்பரியத் தமிழ்ப் பண்பாட்டில் உருவான ஒரு கருத்தல்ல. பிரமாணிய உட்புகுத்தலால் ஏற்படுத்தப்பட்டதுதான். இதன் பிரகாரம் பார்த்தால் கன்னிகாதானம் செய்பவனுக்கு (பெண்ணின் தந்தை) முன்னால் உள்ள பத்துத் தலைமுறையும் பின்னாலுள்ள பத்துத் தலைமுறையும் (இன்னும் பிறக்காத தலைமுறை) கன்னிகாதானம் செய்பவனது தலைமுறையும் சேர்த்து ஆகமொத்தம் 21 தலைமுறைகளையும் கரைசேர்க்கும் விதமாகவே இந்தக் கன்னிகாதானம் விளங்குகிறது. இந்த அடிப்படையிலேயே இந்த மகாதானத்தைச் செய்கிறேன் என்பதே அந்த மந்திரத்தின் பொருள்.

ஒரு வம்ச விருத்திக்காக எம் குல விளக்கை (மகளை) உனக்கு (மாப்பிள்ளைக்கு) தானமாக அளிக்கிறேன் என்று தந்தையால் செய்யப்படும் தானமாகவே கன்னிகாதானம் அமைகிறது.

**இரண்டு கன்னிகளின் திருமணம்**

திருமணம் என்பது இரண்டு குடும்பங்களை இணைத்துத் தீர்மானிக்கின்ற விடயமாக இருக்கிறது. அதிலும் செவ்வாய்க்குற்றப் பிரச்சினை, யோனிப் பொருத்தம் எனப் பல்வேறு விடயங்களைச் சாதகத்தில் பார்த்தே திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்யப்படுகின்ற திருமணங்களே பல சமயங்களில் கேள்விக்குறியாகும் நிலையில் உள்ளன.

இவ்வாறான சூழலில் கனடாவில் நடந்த இந்தத் திருமணம் கன்னிகள் இருவருக்கிடையில் நடந்தது என்பதைவிட இந்துமதப் பிராமணர் ஒருவர் எவ்வாறு இதைச் செய்து வைக்க முடியும் என்பதைப் முதன்மைக் கேள்வியாக எழுப்பியுள்ளது.

சமூக மாற்றம் என்பது இலகுவாக ஏற்பட்டு விடுவதில்லை. தமிழ்ச் சமூகத்தில் சாதி மாறி ஆண், பெண் திருமணம் செய்தாலே பல முரண்பாடுகள் வசைகள் எழுந்துவிடும். அப்படியிருக்கும்போது கட்டுப்பெட்டித் தமிழ்ச் சமூகம் இதை மட்டும் விட்டுவிடுமா என்ன?

இதுவிடயத்தில் சிலர் மிக உயர்ந்த நிலையில் நின்று கருத்து வெளியிட்டுள்ளனர். அவ்வாறானவர்கள் நடைமுறையில் சாதி முரண்பாட்டைக்கூடத் தாண்டமுடியாதவர்களாக இருப்பதும் யதார்த்தமாக இருக்கிறது. அநேகமாக ஒரு பொதுவிடயத்தில் கருத்து வெளியிடுபவர்கள் தம்மளவில் இருந்து அதுபற்றிச் சிந்திப்பதில்லை. முன்னிலையில் நின்று கருத்துக் கூறுவதே வழக்கம். அத்தகைய பிரச்சினை ஒன்று தனது மகளுக்கு ஏற்பட்டால் அவர்களின் வெளிப்பாடு வேறு விதமாக இருக்கும். யாரோ பிறத்தியான் பெற்ற பிள்ளைகளை வைத்து சமூகப் பரிசோதனை நடத்துவது இவ்வாறானவர்களிடம் காணப்படும் பொதுவான போக்காகவுள்ளது.

போராட்ட காலத்தில் யாருடையதோ பிள்ளைகள் போராடி இறந்தபோதும் அதை முன்னிலையிலிருந்து பார்த்த அதே சமூகம் போராட்டம் முடிந்த பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தீண்டத்தகாத சமூகமாகப் பார்த்ததையும் காணமுடியும்.

**சமூக வலைத்தளப் பதிவுகள்**

இந்தத் திருமணத்தை எதிர்ப்பவர்கள் சிலரின் சமூக வலைத்தளப் பதிவுகள் வருமாறு (சில பதிவுகள் தூஷண மொழியில் எழுதப்பட்டுமுள்ளன).

"இரு மனநோயாளிகளைத் திருப்திப்படுத்திய பண ஆசைகொண்ட ஆண்மீகக் கொள்கையற்ற ஒரு அந்தணரின் வேலை", "அதுகள் இரண்டும் என்னவாவது செய்திற்றுப்போகட்டும். அங்கு போய் நிற்கும் ஐயர்மாரை என்னென்டு சொல்லுறது", "பிராமணர்கள் பணத்துக்காக எதையும் செய் வார்கள். சிலைகளுக்கு மந்திரம் சொல்லும் பிராமணர்கள் ஓரினச் சேர்க்கைத் திருமணத்துக்கும் ஒன்றை வைத்திருப்பார்கள். சமஸ்கிருத மொழியில் கூறினால் யாருக்குத்தான் புரியப்போகிறது"

(10ம் பக்கம் பார்க்க)



## டிக்டாக் இலக்கியாவின் 'நீ சுடத்தான் வந்தியா'

ஒரு காலத்தில் தமிழ் சினிமாவை தனது இடுப்பு மடிப்பில் சொருக்கி வைத்திருந்த கவர்ச்சி நடிகை சில்க்சுமிதாவைப் போல ஒரு நடிகையாக வரவேண்டும் என்கிற கனவோடு இருப்பவர் டிக்டாக் இலக்கியா.

டிக்டாக் சமூக வலைத்தளத்தில் கவர்ச்சி ஆடல் துணுக்குகளைப் பதிவேற்றியதன் மூலம் புகழ்பெற்றவர். அதன் வழியே கிடைத்த வாய்ப்பில் ஒரு திரைப்படத்திலும் நடித்து முடித்திருக்கிறார். நீ சுடத்தான் வந்தியா என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்தப் படத்தை பார்த்த தணிகைக் குழு திணறிப்போனதாகத் தகவல்.

முதலில் ஒருவர் பார்த்து பின்னர் நான்கு பேர் கொண்ட குழுவிற்கு அனுப்பி அவர்களும் என்ன செய்வது என்று தெரியாது முடியைப் பிய்த்துக்கொண்டு கடைசியாக ஒருவழியாக வயது வந்தவர்களுக்கு மட்டும் என்கிற சான்றிதழோடு அனுமதித்திருக்கிறார்கள். படம் விரைவில் வெளிவர இருக்கிது. படத் தயாரிப்பில் இலக்கிய நன்கு ஒத்துழைத்தார் என்று பாராட்டுகின்றது படக்குழு.



# விவேரியம்





சிறுவர் பள்ளி ஆசிரியராக இருக்கிறார் ஜெம்மா. அவரும் அவரது காதலன் டாமும் வீடுதேடிக் கொண்டிருக்கிறார்கள். தொடர் குடியிருப்புகளை அமைத்து விற்கின்ற முகவர் ஒருவரை அவரது அலுவலகத்துக்குச் சென்று சந்திக்கிறார்கள். அந்த அலுவலகத்தில் வீடு மாதிரிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்வையிடுவதைவிட நேரில் சென்று அருகிலுள்ள உங்கள் வருங்கால வீட்டையே பார்த்து வரலாம் என்றுகூறி அந்த முகவர் ஜெம்மாவையும் டாமையும் அழைத்துச் செல்கிறார்.

காரில் செல்லும் அந்த முகவரைப் பின் தொடர்ந்து ஒரே மாதிரியான வீடுகள் நிறைந்த பகுதிக்குள் காதலர்கள் செல்கின்றனர். அங்குள்ள 9ஆம் இலக்க வீட்டை அழைத்துச் சென்று காட்டும் முகவர் விசித்திரமாக நடந்து கொள்கிறார். வீட்டைச் சுற்றிக் காட்டுவதன் ஒரு பகுதியாகப் பின்புறத் தோட்டப் பகுதியைக் காட்டியபின் காணாமல் போய்விடுகிறார். வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தால் அவருடைய காரையும் காணவில்லை. காதலர்கள் வந்த கார் மாத்திரம் நிற்கிறது. அதில் ஏறி அந்தக் குடியிருப்புப் பகுதியில் இருந்து வெளியேற முயன்றபோது மறுபடியும் மறுபடியும் அந்த 9ஆம் இலக்க வீட்டுக்கு முன்பாகவே வந்து நிற்கின்றனர்.

**சூரியன், வானம், முகிற்கூட்டங்கள் என எல்லாமே செயற்கைபோல ஒரே வடிவில் இருக்கின்றன. இவ்வாறான சிக்கலில் இருந்து அவர்களால் வெளியேற முடிந்ததா? இல்லையா?,**

ஒரே மாதிரியான வீதி, குடியிருப்புகளால் குழம்பிப்போய்க் காரின் எரிபொருள் தீரும் வரை அங்கேயே சுற்றி அலைச்சல் பட்டுச் சோர்வடைந்து போகிறார்கள். இருவரது கைபேசிகளிலும் சமிக்ஞைகூட இல்லமல் இருக்கிறது. அன்றிரவு அந்த வீட்டில் தூங்கி எழுந்து மறுநாள் காலையில், அந்த வீட்டின் கூரைக்கு ஏறிப் பார்க்கும்போதுதான் விபரீதம் புரிகிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எல்லாமே ஒரே மாதிரியான கூரைகளும் வீடுகளும் வீதிகளுமாக இருக்கின்றன. சூரிய ஒளியைப் பார்த்து ஒரே திசையில் நடந்துசென்று வெளியேற முயன்றும் முடியாமல்போகிறது. சூரியன், வானம், முகிற்கூட்டங்கள் என எல்லாமே செயற்கைபோல ஒரே வடிவில் இருக்கின்றன. இவ்வாறான சிக்கலில் இருந்து அவர்களால் வெளியேற முடிந்ததா? இல்லையா?, அங்கு அவர்கள் எதிர்கொள்ளும் விபரீதங்கள், சவால்கள் என்ன என்பதுதான் மீதிக்கதை.



இந்த ஆங்கிலப் படத்தைப் பார்க்கும்போது "பிக்பொஸ்" நிகழ்ச்சி நினைவுக்கு வரலாம். வெளித்தொடர்புகள் இல்லாமல் மூடிய வீட்டுக்குள் உணவு, உடைகளை வழங்கி வாழவைப்பதாகவும், அவர்களின் இயல்புகளை, வெளிப்பாடுகளை இரசிப்பதாகவும் கிட்டத்தட்ட பிக்பொஸ் பாணியில் காதலர்கள் நடத்தப்படுவார்கள். குழந்தை ஒன்றைப் பெட்டிக்குள் வைத்து அனுப்பி அதை வளர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்படுவதும், தினமும் உணவுப் பொருள்களைப் பெட்டிக்குள் வைத்து விட்டுச் செல்வதும்கூட அதை ஒத்ததாகத்தான் இருக்கும். ஆனால், பிக்பொஸ்போல வெற்றியாளர் தீர்மானிக்கப்படாமல் அந்தக் குடியிருப்பின் பின்னாலுள்ள மர்மத்தின் முடிவு கொலைக்களமாக இருப்பதுதான் இங்கு பரபரப்பை ஏற்படுத்தும் விடயம்.

பெட்டிக்குள் வைத்து அனுப்பப்பட்ட குழந்தை 98 நாள்களில் பத்து வயதுச் சிறுவனைப் போல வளர்ந்துவிடுகிறது. விநோத மனிதனாக நடந்துகொள்ளும் அதை டாம் விலக்கி வைக்க, ஜெம்மா அதன் மீது அன்பு செலுத்துகிறாள். அந்த இடத்திலிருந்து வெளியேறும் விடாமுயற்சியாக டாம் நிலத்தைத் தோண்டிக் கொண்டேயிருக்கிறான். சிறுவன் விரைவில் இளைஞனாக முதிர்ச்சி பெறுகிறான். கிடங்கு தோண்டிக் கொண்டிருக்கும் டாம் நோய்வாய்ப்படுகிறான். ஒரு கட்டத்தில் அந்தக் கிடங்குக்குள் பொதி செய்யப்பட்டுச் சடலம் புதைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறான். டாமுக்கு உதவுமாறு அந்த இளைஞனிடம் கோரும்போது, அவருடைய நேரம் முடிந்துவிட்டது என்று சொல்லிச் செல்கிறான் அவன். மறுநாள் காலை டாம் இறந்ததும் வெற்றுப் பையில் வைத்து, டாம் தோண்டிய கிடங்குக்குள் வீசுகிறான் அந்த

## விவேரியம்...



இளைஞன்.

மறுநாள் வெளியே நின்ற காருக்குள் ஜெம்மாபோய் மறைந்திருக்கிறாள். ஜெம்மாவைக் காணாமல் தேடும் இளைஞனின் பின்னால் சென்று பிக்கானால் அவனைத் தாக்க அவன் வீதிக் கரைத் தளத்துக்குள் புகுந்து விலங்கைப்போல தாவிப் பாய்ந்து அதற்குள் பதுங்கி விடுகிறான். அந்தப் பாதாளத்திலும் கட்டடங்கள் வீடுகள் இருக்கின்றன. அவனைப் பின்தொடரும் ஜெம்மாவும் பலவீனமாகி மயக்க நிலையில் இருக்க அவளையும் ஒரு பைக்குள் போட்டு டாம் தோண்டிய குழிக்குள் புதைக்கிறான் இளைஞன். பின்னர் அவன் காரை எடுத்துக் கொண்டு வீட்டு மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற முந்தைய அலுவலகத்துக்குச் சென்று பிறிதொரு இணைகளைச் சந்திக்கும் காட்சி வருகிறது. படம் முடிகிறது.

கேரட் ஷான்லியுடன் தான் இணைந்து எழுதிய ஒரு கதையிலிருந்து இந்தப் படத்தை இயக்குநர் லோர்கன் பின்னேகன் 2019இல் படமாக்கி வெளியிட்டார். திரைக் கதை மீது ஏராளமான கேள்விகள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் வித்தியாசமான அறிவியல் புனைகதைத் திகில் காட்சிப்படுத்தல்கள் சுவாரஸ்யமான திரை விருந்தாக இந்தப் படத்தை ரசிக்க வைக்கலாம்...!

## கன்னிகா தானம்...

**இயற்கைப் பிறழ்வு**

ஒரு தொல்குடியின் வாழ்க்கை முறையில் பிறழ்வுகள் ஏற்படும்போது அதைக் கண்டு மக்கள் அஞ்சுவது இயல்பான விடயமே. ஐரோப்பாவில் 1960களில் "அன்ரி ப்றா மூமென்ற்" அல்லது "நோ ப்றா மூமெண்ற்" என்ற அமைப்புகள் பெண்களுக்கான சுதந்திரத்தை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தன. அதன் பின்னர் அது அங்கீகரிக்கப்பட்டது.

அதேபோல 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்களுக்கிடையிலான ஓரினச்சேர்க்கை விவகாரம் சில நாடுகளில் சட்ட அங்கீகாரமும் பெற்றிருக்கிறது. இதில் ஈடுபடும் ஆண்கள் தம்மை ஒரு பால் உறவுக்காரர் என்பதைப் பொதுவெளியில் அடையாளப் படுத்துவதற்காக ஒரு காதில் மாத்திரம் தோடு அணியும் வழக்கம் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டது.

எல்லாவற்றையும் தாண்டி ஓரினச் சேர்க்கையில் தமது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அளவுக்கு மனத்துணிவும் அவர்கள் சார்ந்த இரண்டு குடும்பங்களையும் இணங்க வைத்த தன்மையும் சாதாரண திருமண வைபவத்தைப்போல் பிராமணர் கலந்துகொண்டு தாலி எடுத்துக் கொடுத்ததும் இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமே.

**முன்னுதாரணமாகும் ஆபத்து**

வெளிநாடுகளில் வாழ்கின்ற பல பெண்கள் நாம் ஆணைத் திருமணம் செய்யமாட்டோம் என (தமிழ் குடும்பங்களில்) அடம்பிடிப்பதால் பல பெற்றோர் தமது பெண் பிள்ளைகளின் வாழ்க்கையைத் தீர்மானிக்க முடியாது திண்டாடி வருகின்றனர். இந்த நிலையில் நடந்த இந்தத் திருமணமானது இன்னும் பல கன்னிகள் தம்மைத் தாமே சட்ட பூர்வமகத் திருணம் செய்து கொள்வதற்கான வாய்ப்பையும் தற்துணிவையும் ஏற்படுத்த வல்லது. அவர்களைப் பொறுத்தவரை இந்தத் திருமணம் ஒரு முன்னுதாரணமானதும் முற்போக்கானதும் ஆகும்.



இதன் மூலம் மனித சமுதாயம் இதுவரை சந்தித்த இயற்கையான சந்ததி உருவாக்கம், இனவிருத்தி, குடும்பக் கட்டுமானங்கள் எல்லாமே கேள்விக்குறியாக வாய்ப்புண்டு. இது ஒரு வகையில் தமிழ்ச் சமூகத்துக்கு ஒரு பிறழ்வே. இதன் மூலம் கன்னிகா தானம் என்பதை ஒரு தந்தை இன்னோர் கன்னிக்குச் செய்யவேண்டிய பண்பாட்டுத் துர்ப்பாக்கியமும் ஏற்பட்டிருக்கிறது.

# நம்மவூர்ச் சுத்துமாத்து

■ தயாநிதி - நல்லூர் ■

## பயணத் தடைக்காலப் பயண அனுமதியில் சுத்துமாத்து

பொதுவாகவே எல்லா விடயங்களிலும் நம்மவர்கள் சுத்துமாத்துச் செய்கின்றவர்களாகத்தான் இருக்கின்றனர். தற்போதைய பயணத் தடைக்காலத்தில் மாவட்டங்களுக்கு வெளியேயும் மாகாணங்கள் தாண்டியும் செல்வதற்கான வாகன அனுமதிகளைப் பெறுவதில் அதிக சுத்துமாத்துகளில் நம்மவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று அறிய முடிகிறது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் பணியாற்றுகின்ற எனது நண்பர் ஒருவர் இதுபற்றிக் கூறுகையில், ஏதோ ஒன்றைக் காரணம் காட்டி வாகன அனுமதியை எடுத்துவிடும் சிலர் அதை வைத்துப் பணம் உழைக்கும் வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் - என்றார்.

ஒருவர் தனது லொறி ஒன்றில் கொழும்புக்குப் பொருள்கள் ஏற்றிச்செல்வதற்கு அனுமதி தருமாறு கேட்டு மாவட்ட செயலகத்துக்கு வந்தபோது, அவருக்கு அனுமதி வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன என்று பல தடவைகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. ஆனாலும் அவர் அங்கு பல மணிநேரம் காத்திருந்து அலுவலர்களுக்குத் தொல்லை கொடுத்திருக்கிறார். இறுதி நேரத்தில் அனுமதி பெற்றுச் சென்றுள்ளார். பின்புதான் தெரியவந்தது அவர் லொறி என்று பொய் சொல்லி ஒரு பேருந்தின் இலக்கத்துக்கு அனுமதி பெற்றது. அந்தப் பேருந்து கொழும்புக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுப் பலரை அதில் ஏற்றிக்கொண்டு கொழும்புக்குப் போயிருக்கிறார்.

இன்னொருவர் தனது ஹையஸ் ரக வானில் யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளத்துக்கு இறாலுக்கு உணவாகப் போடுவதற்கான புழுக்களை எடுத்துச்செல்வதற்கு அனுமதி கேட்டுச் சென்றிருக்கிறார். அந்தப் புழுக்களை மீன் ஏற்றும் குளிரூட்டி வாகனங்களில்தான் கொண்டு செல்வது வழமை. ஆனால், அவரும் பல மணித்தியாலங்கள் அடம்பிடித்து அனுமதியைப் பெற்றுச் சென்றுள்ளார். அவரது அந்த அனுமதிக் கடிதத்தில், "பயணிகளுக்கு அனுமதியில்லை. சாரதி மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றது" என்று அச்சடித்துச் சாரதி மட்டும் பயணம் செய்ய ஏற்பாடு செய்து வழங்கப்பட்டிருக்கிறது.




இதேபோன்று மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குச் சென்ற பேருந்து ஒன்றைக் கொழும்புக்கு அருகிலுள்ள ஒரு காவலரணில் நிறுத்திச் சோதனைக்குட்படுத்தியபோது அந்தப் பேருந்து பயணிப்பதற்கான அனுமதி பிழையான வழியில் பெறப்பட்டது என்றும் 50 பயணிகளை ஏற்றிச் சென்ற அந்தச் சொகுசுப் பேருந்தில் மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் மற்றும் சில திருட்டுப்பொருள்களைக் கீழ் தட்டில் ஏற்றிச் சென்றதையும் விசாரணைகள் மூலம் பின்னர் காவல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இது எல்லாவற்றையும்விடப் பிரான்சில் இருந்து திருமண வைபவம் ஒன்றுக்காக வவுனியாவுக்கு வந்த 6 தமிழர்கள் பிரான்சுக்குத் திரும்பிச் செல்வதற்காக யாழ்ப்பாணத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு வந்திருக்கிறார்கள். அந்தப் பரிசோதனையில் 5 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் சுகாதாரத் துறையினர் இறங்கியபோது அவர்கள் அனைவரும் சட்டபூர்வமற்ற பி.சி.ஆர். அறிக்கை ஒன்றில் தமக்குத் தொற்று இல்லை என்பதைக் காட்டிவிட்டு வானூர்தி ஏறிவிட்டார்கள் என்பது தெரியவந்திருக்கிறது.

கொரோனாப் பெருந்தொற்று என்பது உலகம் முழுதும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் தயக்கமின்றிப் பொய் சொல்லிப் பிழையான பயண அனுமதிகளைப் பெற்றுச் சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுகிறார்கள். இதைத் தமது கெட்டித்தனம் என்றும் அவர்கள் பெருமையாகச் சொல்வது பெரும் கவலைக்குரியதாக இருக்கிறது. இந்த ஏமாற்று வேலைகளைச் செய்பவர்களுக்கு ஒத்தாசை வழங்குவர்களும் இருக்கின்றனர். இவர்கள் அதிகளவு பணத்தை விரயம் செய்வது மட்டுமல்லாது கொரோனாத் தொற்றையும் பரப்புகின்றனர்.



# சிறைக்குள்...

▪ சு.தர்மராசா ▪

## வெபர் மைதானத்தில் விளையாட்டுப் பார்க்கப் போன கதை

24

**31.10.2001** அன்று மட்டக்களப்பிலுள்ள வெபர் மைதானத்தில் உதை பந்தாட்டப் போட்டி ஒன்று நடந்தது. உதை பந்தாட்டம் பார்க்க விருப்பமானவர்களைச் சிறைச்சாலை நிர்வாகத்தின் அனுமதி பெற்றுக் கூட்டிப்போகவிருக்கிறோம் எனப் பழைய கைதியான ராஜா என்பவர் கதைவிட்டுப் புதிதாக வந்த பல கைதிகளை அதற்காகத் தயார்ப்ப டுத்தி நிற்க வைத்தார். புதிய கைதிகளுக்குத் தாம் என்ன நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதன் ஆழம்கூடப் புரியவில்லை. நல்ல உடையணிந்து, முகப் பூச்சுகள் பூசித் தலைவாரி உதை பந்தாட்டம் பார்க்கத் தயாராக நின்றார்கள். பின்னர்தான் ராஜாவின் பொய் வார்த்தையைப் புரிந்துகொண்டார்கள்.

**4.11.2001** அன்று சாஜா கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதிச் சுற்று நடந்தது. அதைப் பார்ப்பதற்காகச் சிறையின் புதிய கட்டடத்தின் மேல்மாடியில் இரவு **10.30**வரை தொலைக்காட்சி பார்க்க அனுமதி வழங்கப்பட்டது. எனக்குக் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் இல்லாவிட்டாலும் இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் சிறைச்சாலைக்குள் கிடைப்பது அபூர்வம் என்பதால் நானும் போய்ப் பார்த்தேன்.

**8.11.2001**இல் மேலும் **3** கைதிகள் கொண்டுவரப்பட்டனர். தமிழ் மக்கள் கைதிகளாக இருப்பதால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கோ, அரசின் நடவடிக்கைகளுக்கோ எந்தப் பாதிப்பும் இருக்கப்போவதில்லை. இலங்கை அரசு எத்தகைய கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அதற்கு நேர் எதிராக அல்லது சவாலாகச் செயற்படும் புலிகளின் வல்லமையைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது.

உண்மையில் புலிகளின் ஒவ்வொரு செயற்பாட்டின் பின்னணியில் தான் சிலர் கைதாகின்றனரே தவிரப் புலிகளின் நடவடிக்கைகள் ஏதோ ஒரு வகையில் திட்டமிட்டபடி நடந்துகொண்டேயிருக்கும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது வெறும் அடிபட்டுக் கொண்டிருக்கும் இயக்கமோ குழுவோ அல்ல. அது ஓர் அங்கீகரிக்கப்படாத அரசு. மக்கள் பலம், ஆயுத பலம், பொருளாதார பலம் என எல்லாவற்றையும் தன்னகத்தே வைத்திருந்தது. இந்த விடயங்கள் இலங்கை அரசுக்கும் நன்கு தெரியும். இதனடிப் படையிலேயே புலிகளின் ஒரு சில விடயங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சில தொடர் கைதுகளை அரசு மேற்கொண்டது. குறைந்த பட்சம் புலிகளின் தாக்குதல்களைத் தாமதப்படுத்து வதாகவேனும் இந்தக் கைதுகள் இருக்கும் என்று அரச இயந்திரம் எதிர்பார்த்தது.

**12.12.2001** அன்று ஒரு கைதிக்கு வலிப்பு ஏற்பட்டது. அவனுக்கு வானூர்திக் குண்டுத் தாக்குதலின்போது குண்டுத் துகள்கள் தலைக்குள் புகுந்துள்ளதால் அதில் ஏதாவது தாக்கம் ஏற்படும் போதெல்லாம், அல்லது தனியாக இருந்து யோசித்துக் கொண்டிருக்கும்போது அவ்வாறு வலிப்பு ஏற்படுகிறது என்று ஏனைய கைதிகள் கூறினார்கள். இவ்வாறு வலிப்பு ஏற்படும்போது அவன் காயப்பட்ட வேளையில் எந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாக இருந்தானோ அந்த மனப்பாதிப்பைச் சொல்லிக் கத்திக்கொண்டிருந்தான். படையினரைத் தகாத வார்த்தைகளால் பேசினான் (அங்கு கைதிகளைத் தவிர படையினர் யாரும் இருக்கவில்லை) பலர் அவனைக் கட்டிப்பிடித்தபோதிலும் திமிறிக்கொண்டு எழும்பினான்.

புதிதாகச் சிறைக்குள் வந்த ஆசிரியருக்கு ஒருநாள் தலைசுற்றி உடல் எல்லாம் வியர்த்து மூச்சுவிட முடியாத நிலை வந்துவிட்டது. இரவு அறைகள் பூட்டப்பட்டுவிட்டன. மருத்துவப் பிரிவிலிருந்த ஆண் தாதி ஏதோ மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு குடியுங்கோ சரியாகிவிடும் என்ற அவரது பொதுவான வார்த்தையையும் தூவிவிட்டுப்போனார். நான் பக்கத்து அறையிலிருந்து அவருக்கு ஆறுதல் கூறினேன். "ஒன்றுக்கும் பயப்பிடாமலிருங்கோ" என்று.

மறுநாள் காலையில் அறைகளைத் திறந்தபோது அந்த ஆசிரியர் கூறினார் தன்னை ஏதோ அமத்துவது போலவும் அந்த அறையைவிட்டு ஓடவேண்டும் போலவும் இருந்தது என்று. சிறைக்குள் இவ்வாறு நினைக்க மட்டும்தான் முடியும்.

**13.12.2001**இல் திடீரென எஸ்கொட் எடுப்பதாகச் சொன்னவுடன் நான் புறப்படுவதற்கான ஆயத்தத்தைச் செய்தபோது அந்த இரண்டு ஆசிரியர்களும் ஓடிவந்து என்னுடன் கIதைத்தார்கள்.

**விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது வெறும் அடிபட்டுக் கொண்டிருக்கும் இயக்கமோ குழுவோ அல்ல. அது ஓர் அங்கீகரிக்கப்படாத அரசு. மக்கள் பலம், ஆயுத பலம், பொருளாதார பலம் என எல்லாவற்றையும் தன்னகத்தே வைத்திருந்தது**

தங்களின் கைவசமிருந்த பிஸ்கட் பைக்கற்றுகள், சவர்க்காரம் போன்ற பொருள்களை எனக்குத் தந்தார்கள். எனக்கு அது ஒரு அன்புத் தொல்லையாக இருந்தது. மறுக்க முடியாத நிலை. அவர்களது அன்பும் அரவணைப்பும் அவர்கள் விரைவில் விடுதலையாகிவிடவேண்டும் என நினைக்க வைத்தது. அவர்கள் அடுத்த வாரம் விடுவிக்கப்பட்டார்கள் என்று பின்னர் அறிந்தேன்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நூல் நிலையம் ஒன்று இருந்தது. ஒரு சிறிய அறையில் அது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஓர் அலுமாரியில் மாத்திரம் **400** புத்தகங்கள் வரை இருந்தன. குமுதம், ஆனந்த விகடன், ராணி போன்ற இந்தியச் சஞ்சிகைகளும் மதச் சார்பான வெளியீடுகளும் நிIறைய இருந்தன. அந்த நூல் நிலையத்தை ஓர் ஒழுங்கில் திறந்து உதவும்படி தலைமைக் காவலர், நலன்புரி அலுவலர் என எல்லோரிடமும் கதைத்து அலுத்துப்போய்விட்டது. நலன்புரி அலுவலரிடம் எதைக் கேட்டாலும் ஓம் என்று கூறுவார் மறு கணமே மறந்துவிடுவார். அந்தச் சிறைச் சாலையில் **10** ஆயிரம் கைதிகள் இருப்பதுபோல பரபரப்புடன் செயற்படுவார்.

ரமேஷ் என்ற ஊழியர் நூல் நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்தார். அதைத் திறக்கக் கேட்டால், அவர் வேறு பகுதியில் வேலையில் இருந்தாலும் நிர்ப்பந்தத்தின் பேரில் அரைமணி




■ தயாபரன் - கிளிநொச்சி

# சி.சி.ரிவிக் கமராவில் தென்பட்ட ஆவிகள்

ஆவிகளின் நடமாட்டம் பற்றிப் பலரும் தாம் கண்டதை வைத்துக் கதை சொல்லக் கேட்டிருக்கிறோம். அதை அவர்களால் நிரூபிக்க முடியாது. ஆனால், ஆவிகள் உலாவுவதைச் மறைகாணி (சி.சி.ரிவி) கமராக்களில் பதிவுசெய்த சம்பவங்கள் இதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றன. அவற்றை மற்றவர்களும் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு பாழடைந்த வீட்டு வாசலில் கமராவுடன் காத்திருந்த சிலர் அங்கு வழமையாக உலாவும் கறுப்பு உருவத்தைப் படம் பிடித்திருக்கிறார்கள். மனிதனைப் போன்ற உருவத்தையுடைய முகில் அல்லது புகைக் கூட்டமாக அந்த உருவம் நகர்ந்து செல்வதைத் தெளிவாகக் காட்டுகிறது அந்தப் பதிவு.

தற்போது சிலர் வீடுகள் காணிகளை வாங்குவதற்கு முன்னர் வாஸ்து பார்ப்பதைவிடவும், இரவு நேரத்தில் தமது ஸ்மார்மட் போன்களில் அந்த வீட்டைப் படம் பிடித்துப் பார்ப்பதே அதிகம். அங்கு எங்காவது ஓர் உருவம் நகர்வதுபோல் அல்லது கறுப்புப் புகை நகர்வதுபோல இருந்தால் அந்த இடம் ஆவிகள் உலாவுகின்ற இடம் என உறுதிப்படுத்திவிடுகிறார்கள். இதனால், வீடுகளையோ கடைகளையோ வேறு சொத்துகளையோ வாங்காது பலர் தவிர்த்துவிடுகின்றனர்.

இந்தியாவில் பதிவாகிய இது போன்ற ஒரு சம்பவத்தில், இரவு 12 மணியளவில் ஓரிடத்தில் வீதிச் சமிக்ஞை விளக்கு சிவப்பு நிறத்தில் எரிந்து கொண்டிருந்தபோது ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டுநரில்லாமல் ஓடிச்செல்வதைச் மறைகாணி பதிவு செய்திருக்கிறது. இவ்வாறு பதிவு செய்வதற்கு ஒரு வாரத்துக்கு முன் அந்த வீதிச் சமிக்ஞை விளக்கடியில் ஓர் இளைஞன் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் இறந்திருக்கிறான்.

சுடலைகளுக்கு அருகாமையில் முதன்மை வீதியில் தனியாக ஒரு பெண் நின்று வழிமறிப்பதைப் பல்வேறு இடங்களிலும் பலர் பதிவு செய்திருக்கிறார்கள்.

ஒரு சித்த வைத்தியசாலையில் ஒரு பெண் தூணைப் பிடித்து ஏறி மேல்மாடிக்குச் செல்லும் படம் ஒன்றும் தெளிவாகச் மறைகாணியில் பதிவாகியிருக்கிறது. பின்னர் அது பற்றி ஆராய்ந்தபோது அந்தப் பெண் புறப்பட்ட (தூணில் ஏறத்தொடங்கிய) இடத்தில் அந்த வைத்தியசாலையின் பிண



அறை இருந்ததும் அங்கிருந்துதான் அந்தப் பெண்ணின் ஆவி புறப்பட்டு வந்தது என்றும் கண்டறியப்பட்டது.

இவ்வாறாக ஆவிகளின் நடமாட்டம் உள்ளதைசிசிரிவி கமராப் மறைகாணிப் பதிவுகளில் காணமுடிவதாகப் பல சம்பவங்கள் ஆங்காங்கே நடந்திருக்கின்றன. ஆவிகள் அல்லது பேய்கள் உண்டு என்பதை அறிவியல்பூர்வமாக நிரூபிக்கும் ஓர் ஆதாரமாகவும் இதைக் கொள்கிறார்கள்.

---

## சிறைக்குள்...

நேரமாவது வந்து திறப்பார். மிகக் கண்ணியமான ஓர் ஊழியர். அவர். மது அருந்துவதில்லை. புகை பிடிப்பதுமில்லை. அவரது பொறுமைக்கும் மரியாதைக்கும் அந்தத் தொழில் எந்த விதத்திலும் அவருக்குப் பொருத்தமானதல்ல. கிறிஸ்தவரான அவர் எதற்கும் சினக்காமல் நடந்துகொள்ளும் நல்ல மனிதர். உதாரணத்துக்காவது இவ்வாறான இடங்களில் அவரைப்போன்ற ஒருவர் இருப்பது கைதிகளுக்கு மகிழ்வைத் தரும்.

மட்டக்களப்புச் சிறையில் நீண்ட காலம் பணியாற்றும் ஓர் ஊழியர் கூறினார். அந்த நூல் நிலையத்துக்கு நிறையப் புத்தகங்கள் பலராலும் அன்பளிப்புச் செய்யப்பட்டன என்றும் ஆனால் கைதிகளுக்குப் படிக்கக் கொடுத்து வைக்கவில்லை அவற்றை வேறு யாரோ எங்கோ படித்துக்கொண்டிருப்பார்கள் என்றும். இலங்கையின் விதி அதுவென்றால் யாரால் மாற்றமுடியும். (தொடரும்)

# "மெனிக்கே மகே ஹித்தே" பாடல் யாருடையது?

■ ஆன்கொலின் ■




"மெனிக்கே மகே ஹித்தே..." என்று தொடங்கும் ஒரு சிங்களப் பாடல் சிங்கள மொழியையும் இலங்கைத் தீவையும் உலகம் முழுதும் பிரபல்யப்படுத்தியிருக்கிறது. இந்தப் பாடலுக்கு உலகம் முழுவதும் இருந்து 1.23 கோடிக்கு மேற்பட்ட பார்வைகள் கிடைத்திருக்கின்றன. இந்தப் பாடலைப் பாராட்டியவர்களில் உலகப் பிரபல்யமான ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன் முக்கிய மானவர்.

மெனிக்கே மகே ஹித்தே பாடலைப் பாடியவர் ஜொஹானி டிலோக்கா டி சில்வா என்ற பெண்மணி. அவரே இந்தப் பாடலை இயற்றிப் பாடினார் என்றே பலரும் நம்புகின்றனர். ஆனால், அது தவறானது. இந்தப் பாடலை இயற்றி இசையமைத்து வெளியிட்டவர் கேகாலையைச் சேர்ந்த சத்தீஷன் ரட்ணாயக்க. சமத் சங்கீதக் குழுவினர் அதற்கு இசையமைத்தார்கள்.

இந்தப் பாடல் ஒலி வடிவமாக வெளிவந்த பின்னர் ஒளிப்பதிவு செய்யப்பட்டவேளையில் சத்தீஷனுடன் சேர்ந்து பெண் குரலில் பாடியவர்தான் ஜொஹானி டிலோக்கா டி சில்வா. அவர் இப்போது சத்தீஷனைவிடப் பிரபல்யம் பெற்றிருக்கிறார். அவர் அந்தப் பாடலைத் தானே முழுமையாகப் பாடி (இரண்டாவது தடவை) இணையத் தளங்களில் வெளியிட்டதால் அது அவரது சொந்தப் பாடல் போலாயிற்று. தற்போது அசல் எது நகல் எது என்று தேட முடியாத அளவுக்கு அந்தப் பாடல் ஜொஹானியின் பாடலாகப் பிரபலமடைந்திருக்கிறது. இதனால் அவருக்கு இலங்கை அரசின் சார்பில் மதிப்பளித்தல்களும் நடந்துள்ளன.

"தற்போது ஜொஹானி பிரபலம் அடைந்தது பற்றி உங்களுக்கு ஏமாற்றமாக இல்லையா? அல்லது சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லப்போகிறீர்களா?" என்று சத்தீஷனிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு, "ஒரு சிங்களப் பாடல் மக்களின் பாடலாக மாறி உலகம் முழுதும் பேசப்படுவதால் அது எனக்குப் பெருமையாக இருக்கிறது. ஜொஹானி அதை முன்னெடுத்துச் சென்றிருக்கிறார். அவ்வளவு தான். இது எங்கள் பாடல், சிங்கள மொழியின் பாடல், இலங்கையின் பாடல் எனப் பெருமை கொள்வதே நல்லது" என்றார் சத்தீஷன் ரட்ணாயக்கா.

தற்போதைய கொரோனாப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் இந்தப் பாடலுக்கான மதிப்பளிப்பு நிகழ்வொன்றை நடத்தவிருப்பதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். "மெனிக்கே மஹே ஹித்தே..." என்றதுமே சத்தீஷனைவிட ஜொஹானியின் முகமே அனைவர் மனதையும் நிறைத்து நிற்கிறது.



■ எம்.கோபாலகிருஷ்ணன் ■




# மரத்தில் மறைந்தது

பைன் மரங்களினூடாகக் காற்று ஊளையிட்டுக் கடந்தது. சுழன்று சீழ்க்கையடித்தது. இன்னும் விடியவில்லை. எங்கோ அடிவானில் சன்னமாய் வெள்ளிக் கீற்றுபோல சிறு வெளிச்சம். மரவீட்டின் கூரையில் என்னவோ விழுகிறது. சரசரவென உருள்கிறது. பைன் மரக்காட்டின் நடுவே ஊன்றிய கால்களின் மேலே கட்டப்பட்ட மரவீடு. காட்டின் ஒவ்வொரு அசைவுக்கும் இந்த வீடும் அசைந்து சத்தம் எழுப்புகிறது. சாத்தியிருக்கும் ஜன்னல் கதவு கிறீச்சிட்டு அசைகிறது. அதைக் கட்டியிருக்கும் சணல் கயிறு தளர்ந்திருக்க வேண்டும். கனத்த போர்வையை விலக்க மனமில்லாமல் புரண்டான் சசிதரன்.

பிரார்த்தனைக் கூடத்தின் வாசலில் மணியொலிக்கும் ஓசை. கட்டிலுக்குக் கீழிருந்த பெஸ்டி தலைநீட்டிப் பார்த்தது. ‘ம்ம்யாவ்...’. எழுந்துகொள்வதற்கான முதல் மணி.

போர்வையை விலக்கிவிட்டு உள்ளங்கைகளைப் பரபரவெனத் தேய்த்தான். இமைகளுக்கு மேலே வைத்து மிக மெல்ல அழுத்தம் தந்தான். கைகளின் வெம்மை இமைகளில் இறங்கியது.

குரு நித்யா எழுந்து காலை நடைக்குத் தயாராகிக் கொண்டிருப்பார். எப்படி அவரை எதிர்கொள்ளப் போகிறோம்? நேற்றிரவு அந்தச் சம்பவத்தைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், இப்போது செய்வதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் முடிந்து போனவை. நேற்றின் பக்கங்களில் எழுதப்பட்டு விட்டன. இனி அவற்றை மாற்ற முடியாது, எதனாலும், யாராலும்.

மறுபடி காற்றின் ஓலம். கட்டிலின் ஓரத்தில் கிடந்த காகிதத்தை எடுத்துப் பார்த்தான். இருட்டில் தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் அவன் நன்கறிந்த ஓவியம் அது. அழுத்தமான கோடுகளில் ஏசுவின் முகம். காகிதத்தில் இருக்கும் இந்த முகத்தை அந்த மரத்துண்டில் செதுக்க இன்னும் கைவரவில்லை. உற்றுப் பார்த்தான். இதோ, காருண்யம் ததும்பும் இந்தக் கண்கள்தான் சவால்.

மரப் பலகைகளாலான தரையில் கால் வைத்ததும் ஆட்சேபிப்பது போல சிறு முனகல் ஒலி. மூலையில் சுருண்டிருந்த பெஸ்டி சோம்பலுடன் தலைதூக்கியது. ‘ம்யாவ்...’ ஜன்னல் கதவை மெல்லத் திறந்தான். காத்திருந்தது போல காற்று வீட்டுக்குள் குளிரை நிரப்பியது. காதுகளை மூடும்படி குல்லாவை இறுக்கிக்கொண்டு செருப்பை மாட்டினான். குடுவையிலிருந்த நீரைத் தம்ளரில் நிரப்பி எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தான். இருள் விலகாத பொழுதின் மெல்லிய வாசனை. சீற்றம் குறையாத காற்று. கண்களை மூடி முகத்தைத் தூக்கியபடி நின்றான். காற்று அவனை முழுக்கத் தழுவியோடியது. பெஸ்டி கட்டிலுக்கு அடியில் ஓடியது. மேற்கு வானில் சுடரும் வெள்ளியைப் பார்த்தபடியே வாயைக் கொப்புளித்தான். விருந்தினர் இல்லமும் நூலகமும் இருட்டில் நின்றன.

குவளையை வைத்துவிட்டு படிகளில் இறங்கினான். பலகைகள் அசைந்தன. சருகுகள் புரண்டன. வழக்கமான பாதைதான். ஈரமான புல்வெளி. அடர்ந்த சீமைப்புற்கள். அங்கங்கே கன்னங்கரேலென்று திட்டுத்திட்டாய்க் காட்டெருமைச் சாணம். பாதையோரத்துச் செடிகளில் ஈரம் உலராத டேலியா பூக்கள். ஓவியக்கூடத்துக்கான படிகளையொட்டிய சரிவில் நிதானமாக கீழே இறங்கினான். கண்களுக்குப் பழகியிருந்தது இருட்டு. மிதிபடும் சருகுகளின் சத்தம். கூடத்தின் கீழ்ப்பகுதியில் கிழக்குப் பார்த்தாற்போல ராமேட்டனின் அறை. அதன் பின்புற ஜன்னலுக்குக் கீழே பீடத்தின் அருகில் மண்டியிட்டு அமர்ந்தான். மார்பு வரைக்குமான ஏசுவின் செதுக்கி முடிக்கப்படாத சிற்பம். கழுத்து, தலை எனக் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. விரல்களால் மெல்லத் தடவினான். மரத்தின் சொரசொரப்பு உடலைச் சிலிர்க்கச் செய்தது. நெற்றி மேடும் நாசியும் கச்சிதமாய் அமைந்துவிட்டன. புருவங்களும்கூட. இதோ, இந்தக் கண்கள்தான்.

பிரார்த்தனைக் கூடத்தின் பின்கட்டில் வெளிச்சம் பரவியது. குரு தயாராகிவிட்டார். சசி எழுந்து ஜகரண்டா மரங்களுக்கு நடுவிலிருந்த ஒற்றையடிப் பாதையில் விரைந்தான். நூலக வாசலுக்கு வந்ததும் ஒரு நிமிடம் நின்றான். நேற்றிரவு அவன் முகம் சிவக்க இங்கிருந்துதான் கத்தியபடியே வெளியேறினான்.

எங்கிருந்து வந்தவன் அவன்? குருகுலத்தில்தான் இருக்கப் போகிறான். இவனுடன் எப்படி காலம் தள்ளப் போகிறோம்? முன் பின் தெரியாத ஒருவன். அதற்குள் அவனிடம் ஏன் அப்படியொரு மூர்க்கத்தைக் காட்டினேன்? தேவையற்றதுதான். ஒரு நிமிடம் தாமதித்திருந்தால் எதுவுமே நடந்திருக்காது. ஆனால், அந்த ஒரு நிமிடத்தை அந்த நேரத்தில் கண்டடைவதுதானே சவால்? அதைத்தானே குரு தொடர்ந்து வெவ்வேறு விதமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்? இந்த மரமண்டையில் அது ஏறவில்லை.

அவனும் நேற்றிரவு தூங்குவதற்கு நேரமாகியிருக்கும். என்னென்னவோ யோசித்திருப்பான். என்னைப் போலவே அந்தச் சம்பவம் அவனையும் பாதித்திருக்கும். அவன் கண்களில் கண்ட அந்த அலட்சியம் இப்போதும் நினைவிருக்கிறது.

**அழுத்தமான கோடுகளில் ஏசுவின் முகம். காகிதத்தில் இருக்கும் இந்த முகத்தை அந்த மரத்துண்டில் செதுக்க இன்னும் கைவரவில்லை. உற்றுப் பார்த்தான். இதோ, காருண்யம் ததும்பும் இந்தக் கண்கள்தான் சவால்**

மரப்பெட்டியின் மீதிருந்த விளக்குமாறை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தான் சசி. மரத்தடியில் நனைந்த இலைகள் பளபளத்தன. வால்பேரி மரத்துக்கு அருகிலிருந்த மஞ்சள் விளக்கின் வெளிச்சம் பிரார்த்தனைக் கூடத்துக்கும் விருந்தினர் விடுதிக்கும் பொதுவான முகப்பில் விழுந்திருந்தது. மெதுவாக இலைகளையும் சருகுகளையும் பெருக்கிக் குவித்தான். விருந்தினர் விடுதியின் முன்னறையின் கண்ணாடிகளில் நீர்த்திவலைகள். வலமும் இடமும் அமைந்த அறைகளுக்கு நடுவிலிருந்த இடைவழியின் மேற்குக் கோடியில் மட்டும் விளக்கெரிந்தது.

எங்கே தங்கியிருக்கிறான் அவன்?

கிழக்கில் தேயிலைச் சரிவை வெண்பனி மூடியிருந்தது. அங்கங்கே கரைந்த நிழல்களெனச் சில்வர் ஓக் மரங்கள் கைவிரித்து நின்றன. இருள் இளகும் வேளைக்கான

அறிகுறிகள் அடிவானில் தென்பட்டன.

வடக்கே சற்றே தாழ்வான நிலத்தில் அமைந்த சமையல்கூடத்தின் முன்பக்க விளக்கு ஒளிர்ந்தது. தாழ்ப்பாளை விலக்கும் சத்தம். மரக்கதவுகள் ஓசையுடன் திறந்தன. முழங்கால் வரைக்குமான மங்கிய காவி வேட்டியும் தடித்த உடலை இறுக்கிய ஸ்வெட்டருமாய் தம்பான் சாமிகள் வெளியே வந்தார். அவனைப் பார்த்து கையசைத்தார். பெருக்கிக் குவித்த குப்பையை அள்ளிக்கொண்டு சரிவில் இறங்கினான். மூடிய கிணற்றில் குப்பையைக் கொட்டிவிட்டு கையைத் தட்டிக்கொண்டே அருகில் சென்றான்.

"குட்மார்னிங் சசி."

குழாயைத் திருப்பி கையை நீட்டினான். சில நொடிகளுக்குப் பிறகு தண்ணீர் கொட்டியது. கையில் பட்டதும் சட்டென விலக்கினான். விறுவிறுவென உடலில் பாய்ந்தது குளிர்ச்சி. மீண்டும் மெல்ல கையை நீட்டி நனைத்தான். தேய்த்துக் கழுவினான். மஞ்சனக்கோரை நிறுத்தத்தை நோக்கி உறுமிக்கொண்டு பேருந்து மேலேறும் சத்தம் கேட்டது.

தொட்டிச் செடிகளுக்கு நடுவே எதையோ துரத்திக்கொண்டு வந்தது பெஸ்டி. மீசை முடிகள் அசைய முகத்தைச் சுழித்தது, 'ம்யாவ்...'.

'கட்டன் சாயா போடலாமா சாமி?'

'ம். வெள்ளம் கொதிச்சிருக்கும் பாரு.'

நீண்ட பெஞ்சுகளின் மேல் ஒரு முறத்தில் வாடிய காய்கறிகள். மரச்சீனிக் கிழங்குகள். தென்மேற்கு மூலையிலிருந்த அடுப்பில் தண்ணீர் கொதித்தது. சசி அளவு பார்த்து தேயிலையை இட்டான். பச்சை வாசனையுடன் தேயிலை கரைய தண்ணீரின் நிறம் மாறியது.

கூடத்தின் பின்னால் பாத்திரம் கழுவும் சிறிய தொட்டியின் அருகிலிருந்த மேடையிலிருந்து இரண்டு தம்ளர்களை எடுத்தான். தம்பான் சாமி எப்போதும் பஞ்சாரம் இட்டுக்கொள்வதில்லை. இவனுக்கு ஒன்றரை ஸ்பூன்.

'நேத்து ராத்திரி சசி எதுக்கு அப்பிடி செஞ்சது? விஜயனுக்கு சின்ன வயசு. அவருக்குத் தெரியாது. சசி இல்ல பொறுமையா இருந்துருக்கணும்?' சூடான தம்ளரை எடுத்து உள்ளங்கைக்கு நடுவில் வைத்து உருட்டினார்.

தேநீரின் வெம்மை இதமாக இறங்கியது. 'இல்ல சாமி. ரெண்டு தடவை சொல்லியும் அவன் கேக்கலை. அதான்...'

தலையைக் குனிந்தபடி சிரித்தார். 'ரெண்டு தடவை கேக்கலைன்னா இன்னொரு தடவை சொல்ல வேண்டிதுதானே?'

அவர் சொல்வதும் சரிதான். நூலகத்தைப் பராமரிப்பது சசியுடைய பொறுப்பு. யார் எந்தப் புத்தகத்தைக் கேட்டாலும் எடுத்துத் தரலாம், ஆனால் படித்த பிறகு அதே இடத்தில் மறுபடியும் அதைப் பத்திரப்படுத்த வேண்டும். வகுப்புகளின் போது அவற்றைத் தயாராக வைத்திருக்க வேண்டும். குரு எந்த நேரத்தில் எந்தப் புத்தகத்தைக் கேட்பார் என்று சொல்ல முடியாது.

'என்னவோ தெரியலை சாமி. புக்கையெல்லாம் அவன் ஹேண்டில் பண்ணினத பாக்கறப்பவே எரிச்சலா இருந்துச்சு. ரெண்டு மூணு தடவை கீழே போட்டதுந்தான் பொறுமையிழந்துட்டேன். மொதல் தடவை கீழ போட்டப்பவே சொன்னேன். அவன் கவனிச்ச மாதிரியே காட்டிக்கல. ரெண்டாவது தடவையும் கீழ விழுந்தப்பதான் சத்தம் போட்டேன். இவன் எப்படி லைப்ரரியை பொறுப்பா பாத்துக்குவான் சாமி?'

சற்றே தடித்த முன்பற்கள் பளிச்சிட சிரித்தார் சாமி. 'அவர் வயசுக்கு அப்பிடித்தான் இருப்பார். இங்க நம்ம கூடத்தானே இருக்கப் போறார்? நாமதான் ஒவ்வொன்னா சொல்லித் தரணும்.'

'அதுக்காக அவன் என்னை அப்பிடி பண்ணலாமா சாமி?'

இரண்டு தம்ளர்களையும் எடுத்துக் கழுவினார் தம்பான் சாமிகள். சசியின் தோள் மீது கை வைத்த அதே நேரத்தில் பிரார்த்தனைக் கூடத்தின் முகப்பில் இருக்கும் மணி ஒலித்தது.

காலை உலாவுக்கு குரு புறப்பட்டுவிட்டார். சசியின் முகத்தில் தயக்கம் தெரிந்திருக்க வேண்டும்.

'சசி போகலியா?'

கையைத் துடைத்துக்கொண்டு வெளியில் ஓடினான். அன்வரின் தோளைப் பிடித்தபடி வாசலில் நின்றார் குரு. கீழ் வானில் வெளிச்சம். தேயிலைச் சரிவின் மேல் ஒளிப்புள்ளிகள். உயரமாய் நின்ற செடார் மரத்தை அண்ணாந்து பார்த்தார் குரு. தடித்த, குள்ளமான உருவம். கணுக்கால் வரைக்குமான காவி வேட்டி. இறுக்கமான காலுறைக்கு மேல் கனத்த காலணி. உடலைப் பற்றிக்கொண்டிருக்கும் இளஞ்சிவப்பு ஸ்வெட்டர். நீல சால்வை. தலையில் வேலைப்பாடுகள் கொண்ட அழகிய காஷ்மீரத் தொப்பி. வெண்தாடியுனுள் மினுமினுக்கும் கன்னக்கதுப்புகள். ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தச் செடார் மரத்தைச் சில நிமிடங்கள் உற்றுப் பார்ப்பதிலிருந்துதான் அவரது நாள் தொடங்கும்.

சிபுவும் ராமேட்டனும் பின்னால் வந்து நின்றார்கள். அருகில் ஒதுங்கி நின்ற சசியைப் பார்த்ததும் ராமேட்டன் தோளைப் பற்றினார்.

தரையில் கிடந்த உலர்ந்த காயைக் கைத்தடியில் தட்டியபடியே அடியெடுத்து வைத்தார் குரு. தைலமும் எண்ணெயும் கலந்த அவரது வாசனையை உணர்ந்ததும் சசியின் அடிவயிற்றில் சிறு கலக்கம். பெஸ்டி அவர் காலருகில் வந்து உரசியது. கைத்தடியால் அதன் முகத்தின் அருகில் நீட்டினார். ஒருதரம் துள்ளிச் சாடிவிட்டு மறுபடி அவர் கால்களை உரசியது. ஆசிரமத்திலிருந்து சாலையை அடையும் வரை ஒன்றும் பேசாமல் கலையும் இருளை கவனிப்பது போல மண்ணைப் பார்த்தபடியே நடந்தார். விடியலின் களங்கமற்ற வெளிச்சம் பூமியின் மீது இறங்கியது. சாலையோரத்துச் செடிகளின் ஒவ்வொரு இலையிலும், மலரிலும் ஒளி படிந்தது. உயரமான யூகலிப்டஸ் மரங்களையும் சைப்ரஸ் மரங்களையும் கடந்து, மேற்கில் இறங்கியது வெளிச்சம். பொன்னிறம் துலங்கி மின்னியது.



**வெண்தாடியுனுள் மினுமினுக்கும் கன்னக்கதுப்புகள். ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தச் செடார் மரத்தைச் சில நிமிடங்கள் உற்றுப் பார்ப்பதிலிருந்துதான் அவரது நாள் தொடங்கும்**

தெற்குப் பாதையில் அவர்கள் நடக்கத் தொடங்கியதும் ராமேட்டனிடம் சொல்லிவிட்டு ஆசிரமத்துக்குத் திரும்பினான் சசி. அவன் பின்னாலேயே ஓடிவந்தது பெஸ்டி.

சுடுநீர் அடுப்பில் விறகைப் போட்டு எரித்துக்கொண்டிருந்தார் தம்பான் சாமி. ஏறிட்டுப் பார்த்தார்.

விடுதியின் கதவு திறந்திருந்தது. பேச்சுச் சத்தம். டேலியாப் பூக்கள் அடர்ந்த செடிகளின் வரிசையைக் கடந்து ஓவியக்கூடத்தை ஒட்டியிருந்த படிகளில் கீழிறங்கினான். ஆளுயரப் பள்ளத்தில் அமைந்திருந்த அறையின் வாசல் கிழக்குப் பக்கம் என்பதால் பின்னால் ஒதுக்கமான பகுதி. சசிக்கான இடம்.

ஜன்னல் ஓரத்தில் வைத்திருந்த கித்தான் பையிலிருந்து உளியையும் சுத்தியலையும் எடுத்துக்கொண்டு மண்டியிட்டு உட்கார்ந்தான். கல்பீடத்தின் மேலிருந்தது பாதியளவு செதுக்கி முடித்திருந்த மரச்சிற்பம். கழுத்து வரையிலான ஏசுவின் முகம். புருவ மேட்டில் உளியை வைத்ததும் தங்கப்பன் ஆசாரியின் முகம் நினைவில் வந்தது.

*** *** ***

வெண்தாடியுடன் கூடிய நீளவாக்கிலான முகம் தங்கப்பன் ஆசாரிக்கு. இடுங்கினாற் போன்ற சிறு கண்கள். கடுக்கன்கள் மினுமினுக்கும் காது மடல்கள். பள்ளியிலிருந்து வீடு திரும்பும் வழியில் தேக்கும் மூங்கிலும் அடர்ந்த தோப்பின் முகப்பில் இருந்தது அவருடைய பட்டறை. கன்னிகாஸ்த்ரிகளின் மடத்தில் சமையல் வேலைக்குப் போயிருக்கும் அம்மா வீடு திரும்ப மணி ஆறாகிவிடும். அதுவரை வாசல் திண்ணையில்தான் கிடக்க வேண்டும். பட்டறை முகப்பில் மூங்கில் கம்பின் மேல் மாட்டியிருந்த உருவத்தை வேடிக்கைப் பார்த்து நின்றபோதுதான் தங்கப்பன் ஆசாரியின் குரல் கேட்டது, 'மோனே, மேல வா.'

நீண்ட தொப்பியும் பருத்த வயிறும் கொண்ட கோமாளி பொம்மையைப் பார்த்தபடியே வளைந்து மேலேறிய பாதையில் மெதுவாக ஏறினான். மரங்களின் பச்சை வாடையுடனான வாசலில் சுருள்சுருளாய் மரப்பட்டைகள். சிறிய கோணிப்பையின் மேல் உளிகளும் சுத்தியல்களும். சிறிய ரம்பமொன்றும் சுள்ளாணிகளும் கிடந்தன. வெள்ளை மணல் போலக் குவிந்திருந்த மரத்தூளின் மேல் பூசணித்தலையுடனான ஒரு பொம்மை. ஒரு மரப்பெட்டியின் மீது வண்ணம் தீட்டப்பட்ட சின்னச் சின்னப் பொம்மைகள்.

உள்ளேயிருந்து வந்தவர் இரண்டு சப்போட்டா பழங்களை அவனிடம் நீட்டினார். 'சாப்புடு. உன்னோட அம்மை வர நேரமாகுமே. இவிட இருக்கி.'

சிறிய மரத்துண்டின் மேல் உட்கார்ந்தான். தரையில் கால்களை மடக்கி அமர்ந்து மாட்டுவண்டி பொம்மையின் சக்கரத்தைப் பொருத்தலானார் தங்கப்பன் ஆசாரி. சுருக்கங்கள் மினுமினுக்கும் அவரது கைகளையே பார்த்துக்கொண்டிருந்தான் சசி.

மறுநாள் அவனாகவே பட்டறைக்குப் போனான். ஒரு தட்டில் பலாச்சுளைகள் இருந்தன. தங்கப்பன் ஆசாரி இப்போது தலையில் குடத்துடன் நிற்கும் பெண்ணைச் செய்துகொண்டிருந்தார்.

பலாச்சுளைகளின் மணமும் இனிப்பும் தித்தித்திருக்க தங்கப்பன் ஆசாரியிடம் மெதுவாகக் கேட்டான். 'நா ஒரு பூ செய்யட்டுமா?'

புருவத்தின் நீண்ட நரைமயிர்கள் காற்றில் அசைய நிமிர்ந்து சிரித்தார். 'இதை எதுவும் கேக்கக் கூடாது. இப்ப வேணாம்' என்று உளியையும் சுத்தியலையும் காட்டினார்.

'இல்லை. இதோ இந்தச் சருகை வெச்சு செய்வேன்' என்று சுருள்பட்டைகளைக் காட்டினான். பழைய வெண்பசை டப்பாவை அவன் பக்கமாய் நகர்த்தினார்.

குடம் சுமக்கும் பெண்ணை அவர் முடித்துவிட்டு நிமிர்ந்தபோது சசி சருகுகளை ஒட்டிச்செய்த இரண்டு பூக்களை அவரிடம் நீட்டினான்.

'அடடே, ரெண்டு சூரியகாந்தி வந்தல்லோ'. உற்சாகத்துடன் சசியின் தலையைத் தடவினார்.

அரையாண்டு பள்ளி விடுமுறை நாட்கள் முடிகிற சமயத்தில் சசி பொம்மைகளுக்கு வண்ணம் தீட்டவும் ஆமை, மயில், குதிரை, சைக்கிள், படகு என சிறிய பொம்மைகளைச் செய்யயும் தங்கப்பன் ஆசாரி அனுமதித்திருந்தார்.

கன சதுரத்திலிருந்த மரக்கட்டையின் மீது சாக்கட்டியால் கோடுகள் வரைந்தார் தங்கப்பன் ஆசாரி. தாளில் செதுக்க வேண்டிய அம்மன் உருவம். நரைமயிர் கலைந்து காற்றில் பறக்க ஆசாரியின் நெற்றியில் திரண்டு நின்றன வியர்வைத் துளிகள். கீழுதட்டைப் பற்களால் கடித்திருந்தார். அருகே அமர்ந்து அவர் கைகளையே கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் சசி.

'இப்ப இது மரத்துண்டு. இதுக்குள்ளதான் இந்த அம்மன் சிலை இருக்க. இப்ப நீ என்ன செய்யணும்?'

பதில் சொல்லாமல் அவரது இடுங்கிய

கண்களையே பார்த்தான். 'இந்த மரத் துண்டுக்குள்ளதான் சிலை இருக்கு. உன் மனசுக்குள்ள கற்பனையில நீ பாத்த அந்த சிலையை மரத்துலேர்ந்து உன் கைதான் தொட் டெடுக்கணும்.'

தங்கப்பன் ஆசாரியின் உளி மரத் துண்டைச் செதுக்கத் தொடங்கியது. அவர் சொன்னது புரிந்ததுபோலவும் இருந்தது, புரியாததுபோலவும்.

'சுலபமா தெரியுதா குட்டி?' உளி மிக மெள்ளத் தட்டிக்கொண்டிருந்தது.

'ம். அப்பிடித்தான் தெரியுது.' காகிதத்தில் இருந்த சித்திரத்தைப் பார்த்தான்.

'சுலபமா தெரியும். புத்தியில இருக்கறதை கைக்கு வரவழைக்கறது ரொம்ப கஷ்டம். கற்பனையும் கருவியும் ஒன்னாகணும். அதுக்கு நம்ம ஒடம்பாலயும் மனசாலயும் இடம் கொடுக்கணும். அது எப்பிடின்னு கண்டுபிடிக்கறதுதான் சிரமம். யாரும் அதை சொல்லித்தர முடியாது.'

தங்கப்பன் ஆசாரி பேச்சை நிறுத்தி விட்டு கண்களை இடுக்கியபடி உளியைத் தட்டத் தொடங்கினார். மெள்ள மெள்ளத் தலைகாட்டியது அம்மன் சிலை.

*** *** ***

காற்றில் அசையும் சைப்ரஸ் மரங்களை ஏறிட்டுப் பார்த்தார் தம்பான் சாமி. கையில் அரிவாள். அறுத்துப் போட்ட சீமைப்புல் ஓரமாகக் குவிந்து கிடந்தது. சற்று தொலைவில் இக்லூ போன்ற அமைப்புடன் இருந்த சிறிய வீட்டுக்குள் தலை நுழைத்துப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கிப் போனான் விஜயன்.

'சசி எதுக்கு ஆயாளை அப்பிடி மொறைச்சுப் பாக்குது?'

கையிலிருந்த உளியைக் கீழே போட்டான் சசி. 'நேத்து காலையில குரு கேட்ட புக்கை அலமாரில இருந்து தேடி எடுக்க நேரமாயிடுச்சு. அதுக்குள்ள இவன் முந்திரிக்கொட்டை மாதிரி எடுத்துட்டுப் போய் குடுத்துட்டான்.'

'ஆமாம். அவன் குடுத்தப்பறமும் சசி தேடிட்டே இருந்துதே'. தம்பான் கையில் அப்பியிருந்த மண்ணைத் தட்டி உதிர்த்தார்.

'அதுகூடப் பரவாயில்லை. கிளாஸ் முடிஞ்சதுக்கப்பறம் இனிமே லைப்ரரி வேலையை அவனே பாக்கட்டும், நீ பொம்மை செய்யற வேலையைப் பாருன்னு குரு சொன்னதுதான் எனக்குச் சங்கடமா போச்சு.'

தலைமேல் விழுந்த பழுப்பிலையை எடுத்துத் திருப்பிப் பார்த்தார். 'சசிக்கு ஞாபகமிருக்கா? அம்மை மரிச்சுப் போயி தங்கப்பன் ஆசாரி இங்க கொண்டுவந்து விட்டபோது இதே மாதிரிதான் இருந்தது சசி. பத்தாம் வகுப்பு பரீட்சைகூட எழுதலை.'

மறுபடி உளியை எடுத்து கையிலிருந்த மரத்தைச் செதுக்கலானான்.

'ஒம்பது வருஷம் ஓடிப்போச்சு. சசி வந்ததுக்கு அப்பறந்தானே இந்த லைப்ரரியே கட்டினது. அப்ப சசி இருந்த மாதிரிதான் இப்ப விஜயனும். அவருக்கு அந்த வேலை சரியா இருக்கும்னு குரு யோசிக்கறாரு.'

'அப்ப நான்?'

தம்பான் சாமி அருகில் வந்து தோளைத் தொட்டார். 'சசி ஒரு சில்பியல்லே. செய்ய வேண்டிய காரியம் நெறைய இருக்கு.'

குருகுல வளாகத்தில் அங்கங்கே சசி செதுக்கிய சிற்பங்களைப் பார்க்க முடியும். ஜப்பானிய அம்மையார் தங்கியிருக்கும் குடிலின் முகப்பில் உள்ளது 'தாயும் சேயும்' சிற்பம். வெண்கலத்தாலான நாராயண குருவின் சிலைக்கு எதிரில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட பெஞ்சுகளுக்குப் பின்னால் துள்ளும் இரு மான்களின் சிற்பம். பிரார்த்தனைக் கூடத்துக்கும் தோட்டத்துக்கும் நடுவில் அகலமான அடிமரத்தின் மீது மண்ணில் வனைந்த குருவின் முகம். விருந்தினர் விடுதியின் வாசலின் இருபுறமும் தொங்கு மீசையும் நீளத் தொப்பியுமாய் வணங்கி நிற்கும் இரு சீனர்களின் சிற்பம்.

துண்டுக் கட்டைகளைக் கொண்டு செதுக்கும் சின்னச் சின்னப் பொம்மைகளைப் பிரார்த்தனைக் கூடத்தில் சிறு ஓலைப்பெட்டியில் போட்டு விடுவான். யானை, குதிரை, தவளை, அன்னம், புத்தர், சாமுராய், செம்படவன், கால்பந்து வீரன், வேட்டைக்காரன் என விதவிதமான பொம்மைகள். பிரார்த்தனைக்காக வரும் விருந்தினர்களின் குழந்தைகளுக்குப் பொம்மைகளைப் பரிசாகத் தருவார் குரு. பரிசைப் பெற்றுக்கொண்டதும் அந்தக் குழந்தைகளின் கண்களில் பரவசம் மின்னும். ஆவலுடன் ஓலைப்பெட்டியை எட்டிப் பார்க்கும். கூடத்தின் ஓரமாய் நின்றிருக்கும் சசியைக் காட்டுவார் குரு. 'உங்களுக்கு என்ன வேணும்னு சசிகிட்ட கேளுங்க. செஞ்சு தருவார்.'

பிரார்த்தனை முடிந்து வெளியில் வரும்போதே குழந்தைகள் சூழ்ந்து கொள்ளும். 'அங்கிள் எனக்கு டைனோசர் செஞ்சு தருவீங்களா?', 'எனக்கு ஸ்பைடர் மேன் புடிக்கும். ஒன்னே ஒன்னு செஞ்சு குடுங்களேன்', 'அப்துல் கலாம் செய்வீங்களா?' அங்கிருந்து புறப்படும் வரை குழந்தைகள் எதையாவது கேட்டுக்கொண்டே இருக்கும். மரத்துண்டுகளைக் கால்களுக்கு இடையில் வைத்துக்கொண்டு கவனமாகச் செதுக்கும்போது அவனைச் சூழ்ந்திருக்கும்.

'இதென்தா புதுசா இருக்கு?'

பசும்புல்லின் வாசனை. மீண்டும் தம்பான் சாமி புல்லை வெட்டத் தொடங்கியிருந்தார்.

'பக்கத்து கிராமத்துலேர்ந்து குருவோட இங்க வெளையாட சாயங்காலம் வருவாங்களே பசங்க? அவங்க ஒரு பேட் வேணும்னு கேட்டாங்க.'

'அது செரி. கிறிஸ்து எப்பிடி வந்திருக்கு? இன்னும் முடியலை போலிருக்கு.' புற்களுக்கு நடுவில் கிடந்த இரண்டு உருண்டைக் கற்களை எடுத்து மரத்தடியில் போட்டார்.

கூர் பார்ப்பதுபோல உளியை உற்றுப் பார்த்தான். கீழே வைத்துவிட்டு கைகளைத் தேய்த்துக்கொண்டான். பதில் சொல்லாமல் நாராயண குருவின் மேல் விழும் வெயில் கற்றைகளைப் பார்த்தான்.

வெட்டிய புல்லைக் குவியலில் சேர்த்துவிட்டு அரிவாளைக் கீழே போட்டார். துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துவிட்டு அவனருகில் அமர்ந்தார்.

ரோஜாச் செடிகளுக்கு நடுவே புல்மேட்டில் தத்திய மைனாவை விரட்டிக்கொண்டு ஓடியது பெஸ்டி. நெற்றி வியர்வையைத் துடைத்தவன் எழுந்து நின்றான். இருவரும் மெல்ல ஓவியக்கூடத்தின் அருகே வந்தனர். பச்சைத் தாமரைகள் போலத் தரையில் அடுக்கடுக்காய் இருந்த கள்ளிகளைக் கடந்து நின்றபோது ஏசுவின் சிற்பம் தெரிந்தது. மேலே நின்றபடியே வெவ்வேறு கோணங்களில் அதைக் கூர்ந்து பார்த்தான். தம்பான் சாமி தரையில் கால்மடக்கி அமர்ந்து ஒரேயொரு முறை பார்த்துவிட்டுத் தாடியை சொறிந்தார். எழுந்து அவன் தோளை அணைத்தபடி அழைத்துச் சென்றார்.

பிரார்த்தனைக் கூடத்தின் வாயிலிலிருந்து மீண்டும் மணியொலித்தது.

மாலை பிரார்த்தனைக்கான அழைப்பு. விறுவிறுவென மேலேறினான். குளித்து முடித்துவிட்டு ஈரத் தலையுடன் கூடத்துள் நுழைந்தபோது பிரார்த்தனை தொடங்கியிருந்தது. ஓசைப்படாமல் சுவரோரமாய் கால் மடக்கி அமர்ந்தான்.

மூச்சு சீராகி படபடப்பு அடங்கும் வரையிலும் கண்மூடித் தலைகுனிந்து அமர்ந்திருந்தவன் மெல்ல நிமிர்ந்தான். அசையாது நின்றொளிர்ந்தன மெழுகுவர்த்திச் சுடர்கள். பெரிய வெண்கலப் பிள்ளையார் சிலைக்கு முன்பாக அகலமான தட்டில் புத்தம் புதிய பூக்கள். தூபத்தின் நறுமணம்.

யாரோ உற்றுப் பார்ப்பதுபோல் உணர்ந்தான். வலதுபக்கமாய்த் தலை திருப்பினான். நேரெதிரில் குரு நித்யாவின் காலடியில் அமர்ந்திருந்தான் விஜயன். கண்களில் அதே அலட்சியம். உதட்டில் உதாசீனப்படுத்தும் சிரிப்பு.

அதுவரை அவனுள் அடங்கியிருந்த பதற்றம் மெல்ல மேலெழுந்தது. கரகரப்பான குரலில் குரு பேசத் தொடங்கியிருந்தார்.

'நம் எல்லோருக்குமே கண்கள் உண்டு. பார்வையும் உண்டு. இந்த உலகத்திலுள்ள அனைத்தையும் நாம் அனைவரும் பார்க்கிறோம். ஆனால், இந்த உலகம் எல்லோருக்கும் ஒன்றுபோலக் காட்சி தருவதில்லை. ஒரு பாறை எனக்கு வெறும் பாறையாக மட்டுமே தென்படுகிறது. ஒரு மரம் வெறும் மரமாக மட்டுமே என் கண்களில் தெரிகிறது. ஆனால், பாறையில் உள்ள சிலையும் மரத்தில் உள்ள சிற்பமும் ஒரு கலைஞனின் அகத்துக்கு மட்டுமே புலனாகிறது. இயற்கை அவனிடத்தில் காட்டும் கருணை அது.'

பேச்சை நிறுத்தியவர் வெண்தாடியை வருடியபடியே ஆழ்ந்து மூச்சிழுத்தார். ஒருமுறை அனைவரையும் நிதானமாகப் பார்த்தார். அவரது சிறு கண்கள் ஒவ்வொருவரின் மீதும் ஒருகணம் நின்று ஊடுருவியிது. பின் அடுத்தவரிடம் நகர்ந்தது. சசியின் மேல் அவர் கண்கள் நிலைத்தன. உதடுகள் நடுங்க அவரது முகத்தையே பார்த்திருந்தான். நீர் சுரந்த கண்களை மூடிக்கொண்டான்.

மறுபடி கரகரத்த அவர் குரல் ஒலித்தது. 'அந்தக் கருணையை உணர்ந்து கலைஞன் தன்னை உண்மையாக ஒப்புக்கொடுக்கும்போது மட்டுமே கலை முழுமைபெறும்.'

சசி தலைகுனிந்திருந்தான்.

பிரார்த்தனையின் முடிவுப் பாடல் ஒலித்து அடங்கியது. கணீரென்ற மணியொலி. அனைவரும் எழுந்து கலையும் அரவம். குரு மெல்ல எழுந்து அன்வரின் தோளைப் பற்றியபடி தன் அறைக்கு நடந்தார்.

அறை வாசலில் நின்று குரு திரும்பிப் பார்த்தார். சசி எழுந்து நின்றான்.

'என்ன சசி, கிறிஸ்து இன்னும் கண் தெறக்கலையா?'

அவன் பதிலை எதிர்பார்க்காதவராய் அறையின் திரைச்சீலையை விலக்கிக்கொண்டு உள்ளே மறைந்தார். ■

# அழகுக்கு மஞ்சள்!






எமது அழகுப் பகுதியில் எப்போதும் வீட்டில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி எம்மை அழகுபடுத்திக்கொள்வது குறித்தே பார்த்து வருகின்றோம். இந்த வாரம் சமையலறையில் கிடைக்கும் மஞ்சளைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பார்க்கலாம். மஞ்சள் இன்றுள்ள நிலையில் விலைகூடிய பொருள்தான் என்றாலும் தற்போது அனேகமாக எல்லாக் கடைகளிலும் மஞ்சள் விற்பனைக்குக் கிடைக்கின்றது எனவே அழகுக் கிறீம்களுக்குச் செலவிடுவதைவிட மஞ்சளை வாங்கிப் பயன்படுத்தலாம்.

தூய மஞ்சள் அழற்சி எதிர்ப்பு, ஆண்டிமைக்ரோபியல் மற்றும் ஆக்ஸிஜனேற்ற பண்புகளைக் கொண்டுள்ளது. முகப்பரு முதல் சுருக்கங்கள் வரை பலவிதமான தோல் பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்க மஞ்சள் உதவுகிறது என்றும் கூறப்படுகின்றது. இந்த அற்புத மூலிகை உங்களுக்கு எப்படி உதவி செய்கிறது?

**முகப்பருவை எதிர்த்துப் போராடும்:** முகப்பரு முறிவுக்கு சிகிச்சையளிக்க மஞ்சள் தூளை எலுமிச்சை சாறுடன் கலந்த லேசான பசை உதவும். இது உங்கள் தோலிலுள்ள அதிகப்படியான எண்ணெய்யை வெளியேற்றும்.

**முக முடி வளர்ச்சியைத் தடுக்குமா?:** எங்கள் பாட்டிகள், பூட்டிகள் தண்ணீரில் கலந்த மஞ்சள் தூளை நன்றாக முகத்தில் தடவிக் கொண்டிருந்தனர். மஞ்சளை கற்களில் தேய்த்து அதனை முகத்தில் பூசிக் கொண்டனர். முக முடி வளராமல் தடுக்க குளிக்கும்போது தினமும் இதைச் செய்தார்கள். இருப்பினும், இது உண்மையில் செயல்படுகிறது என்பதற்கு எந்த அறிவியல் ஆதாரமும் இல்லை.

**கருவளையம் மற்றும் சுருக்கங்களை எதிர்த்துப் போராட:** மோர் மற்றும் கரும்புச் சாறு கலந்து அதில் மஞ்சள் தூள் சேர்த்து ஒரு பசை தயார் செய்யுங்கள். இந்தப் பசையைக் கண்ணுக்கு அடியில் தொடர்ந்து பயன்படுத்தி வந்தீர்களானால் கருவளையங்கள் மற்றும் சுருக்கங்களை உங்கள் சருமத்தில் இருந்து அகற்ற முடியும்.

# எமையறிதல்

## 26

**ஐயங்கொண்டான் சுவாமிகள்**

இயலுமை எதிர் இயலாமை என்ற எதிரெதிர்த் துருவங்களிடை சிறைப் பட்டவொரு பெருவெளி என் சார்பில் ஆய்விற்குட்படுத்தப்படல் அவசியமாகிறது. அது எனதான எண்ணங்களின் பலம் பலவீனம் போன்ற வற்றை எனக்கு ஒளிவுமறைவின்றி முன்வைக்கும். நல்வாழ்வு என்கிற எமது கற்பிதம் அல்லது மனப்பதிவு எனதான ஆய்வு வெளிப்படுத்துகையினால் அச்சமுறுகிறது.



அச்சம் என்பதுதான் எல்லாமுமாகிறது. எல்லாமுமாயிருக்கிறது. அச்சம்தான் பாவம் புண்ணியம் என பார்க்கிறது. அச்சம்தான் கடவுள் என்கிற தொரு புறக் கற்பனைச் சக்தியை நாடுகிறது. அச்சம் தான் கிரகங்களை நாள் நட்சத்திரங்களை நம்பும்படி செய்கிறது. அச்சம்தான் பில்லி, சூனியங்கள், செய்வினைகள் என பணிய வைக்கிறது. அச்சம்தான் சகுணங்களில் முட்டி முடங்கி நிற்கிறது. அச்சம்தான் பிராயச்சித்தம், விரதங்கள், யாகங்கள், நேர்திகள் என சடங்கு வழி பிணைக்கிறது. ஆக அச்சம் என்கிற ஒன்றுதான் வாழ்வாகிறது.

நான் என்கிற யதார்த்தத்தைத் தவிர மற்றெல்லாக் கற்பனைகளையும் கண்முன் நிறுத்துகிற ஒன்றுதான் அச்சமா? என்னை நானே நம்பாமலிக்கிறதுதான் அச்சமா? எதிர்மறை எதிர்பார்ப்புத்தான் அச்சமா?.. முன்சொல்லப்பட்ட நானிலிருந்தானவை தொடர்பாகப் பலவற்றை ஏற்கனவே பார்த்துள்ளோம். இங்கு எதிர்மறை எதிர்பார்ப்புகளை ஒரு புரிதலுக்கு உட்படுத்திக்கொள்வது அவசியமாகிறது.

எதிர்பார்ப்பு என்பது நிச்சயமாக பழையது அல்ல. அது முடிந்துவிட்டதொன்று. அது அச்சம் தராது. விரக்தி நம்பிக்கையீனம் அதீத நம்பிக்கை என ஏதாவதொன்றைத் தந்திருக்கலாம். நிகழ் காலம் என்பது தயக்கம் தரலாம். அது அச்சமல்ல. இவ்விரு சந்தர்ப்பங்களுமே எதிர்பாரப்பு அல்ல. எதிர்பார்ப்பு என்பது முற்றிலுமாக நடந்ததோ நடப்பதோ அல்ல. நடக்கப்போவது. அது எதிர்காலத்திற்குரியது. எதிர்காலமென்பது முற்றும் கற்பனையானது. ஆக மொத்தத்தில் எதிர்பாரப்பு என்பது கற்பனையானதுதான்.

கற்பனையில் என்ன நேர் எதிர் எதிர்பார்ப்பு? கற்பனையிலானதில் நேரானதெனவோ எதிர்மறையானதெனவோ வகை பிரிப்பதில் ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா? அப்படியான வகைப்படுத்துதல் அறிவுபூர்வமானதுதானா? ஏதிர் பார்ப்பு என்பதே கற்பனையானதாக இருக்க அதனைக் கூறிடுவது எங்ஙனம்? சரி இப்போது ஒரு எதிர்பார்ப்பு தவறா என்கிறதொரு வினா எழ முடியும்.

எதிர்பார்ப்பு என்பது ஒரு குறிக்கோளாக, அடைய விரும்புகிற ஒரு லட்சியமாக இருக்கலாம். எனதான இயல்பு பலம் பலவீனம் இயலுமை இயலாமை என கவனத்தில்கொள்ளப்பட்டதாக அவை இருப்பது அவசியமானது. வானூர்தியில் உயரப் பறக்க விரும்புவது யதார்த்தமானது. சிறகு கொண்டு சுயமாகப் பறப்பது என்பது கற்பனை. ஆடைய விரும்புவது எது? எப்போதுமே யதார்த்தமாயிருப்பது அவசியம். வானூர்தியில் பறக்க விரும்பிய பின் விபத்தை யோசித்து அதனைத் தவிர்ப்பது அச்சம். முட்டாள்தனமானது.

யுதார்த்தத்திற்கு அப்பாலான எதிப்பார்ப்புகள் போலவே நடந்தால் என்கிற கற்பனையும் புத்திசாலிகளுக்கு உகந்ததல்ல. நடந்தால் என்கிற எதிர்பார்ப்பு எமது முயற்சிகளுக்கான தடை விசைகளையே தோற்றுவிக்கும். அதிஸ்டச் சீட்டில் பரிசு கிட்டும் என்கிற நேர் எதிபார்ப்பு எப்படி உழைப்பிற்கும் முயற்சிக்கும் தடையானதாயிருக்குமோ அதைவிட மோசமான தடைகளை எதிர் மறை எதிர்பாரப்பு உருவாக்கும். விழுந்துவிடுவேன் என்று நடக்காமலோ எழுந்து நிற்காமலோ விடுவதை எண்ணிப் பார்த்தால் சிரிப்பாயிருக்கிறதல்லவா?

ஆக மொத்தம் அச்சம் என்பது கற்பனை. அச்சம் என்பது வெறும் எதிர் மறை எதிர்பார்ப்பே. அச்சமென்பது தவிர்க்கப்பட வேண்டியதே. அதனை எப்படிச் செய்வது? அச்சமென்பது கற்பனை என எண்ணிக்கொண்டிருப்பதால் சரியாகுமா? எதனையும் எதிர்கொள்ளத் தயாராயிருத்தலா? வருவது வரட்டும் சந்திப்போம் என்கிற எண்ணமா? எது? எப்படி?

இல்லாத ஒன்றை எப்படி எதிர்பார்ப்பது? இல்லாத ஒன்றென்று தெரிந்து கொண்டபின் ஏன் அதன்பால் எண்ணங்களைக் குவிக்கவேண்டும்? எனதான நேரத்தை எனதான உழைப்பை என எனதான எல்லாவற்றையும் இல்லாத ஒன்றிற்காக வீணடிப்பதை நிறுத்துவது பயனுள்ளது. எழுவது எப்படியென்று அறிந்திருந்தால் விழுவது அச்சமாயிருக்காதல்லவா?

சிந்தனைதான் அவசியமாகிறது. சிந்திப்போம். ■

# டானியல் கிரெய்கின் கடைசிப் படம் சாவதற்கு நேரமில்லை



ஜேம்ஸ்பாண்ட் பட வரிசையில் அடுத்த படமான நோ டைம் டூ டை (சாவதற்கு நேரமில்லை) வெளியாகி இருக்கின்றது. நடிகர் டானியல் கிரெய்க் பாண்ட் பாத்திரத்தில் நடிக்கும் கடைசிப் படம் இது.

டானியல் கிரெய்க் முதன் முதலில் காசினோ ரோயல் என்கிற படத்தில் பாண்ட் பாத்திரத்தில் நடிப்பார் என்று அறிவிக்கப்பட்டபோது அது பொருத்தமற்ற தெரிவு என்று பல விமர்சகர்களும் புலம்பினார்கள். ஆனால் பாண்ட் பாத்திரத்திற்கு சிறப்பாக நியாயம் செய்த நடிகர்களில் தனது பெயரையும் பதித்துவிட்டுச் செல்கிறார் டானியல்.

ஜேம்ஸ் பாண்ட் வரிசை படங்களில் முந்தைய இரண்டு படங்களான SKYFALL, SPECTRE ஆகிய படங்களை ஸாம் மெண்டஸ் இயக்கியிருந்தார். ஆனால், அந்தப் படங்கள் வழக்கமான ஜேம்ஸ் பாண்ட் படங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டிருந்ததால், அதிதீவிர ஜேம்ஸ் பாண்ட் ரசிகர்கள்கூட பெரிதாக உற்சாகமடையவில்லை. ஆனால் சாவதற்கு நேரமில்லை படத்தை கேரி ஜோஜி ஃபுகுனகா இயக்கியிருக்கிறார்.

ஜேம்ஸ் பாண்ட் ரசிகர்களுக்கு விருந்தாக - முதலிரு படங்களைப் போன்றில்லாமல் பழைய படங்களைப் போன்ற சிறப்புமிக்கதாக - உருவாகியிருக்கிறது சாவதற்கு நேரமில்லை என்கிறார்கள் விமர்சகர்கள். அத்துடன் மற்றொரு விடயத்திற்கும் இந்தப் படத்தில் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. பாண்ட் ஓய்வில் இருக்கும்போது 007 என்ற அடைமொழியோடு நோமி என்கிற பெண் பாத்திரம் அறிமுகமாகின்றது. எதிர்கால ஜேம்ஸ்பாண்ட் படங்களில் பாண்ட் பாத்திரம் பெண்ணா என்கிற கேள்வியையும் எழுப்பிவிட்டுப் போயிருக்கிறது சாவதற்கு நேரமில்லை படம்.



# கவிதை எனும் தேனாறு

● வேலணையூர் _ தாஸ்

அண்மையில் மௌனன் யாத்ரீகா என்ற தமிழக கவிஞர் கவிதை பற்றிய அக உரையாடல் குறித்த பல கேள்விகளை பல கவிஞர்களிடம் கேட்டு தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார் கவிதை பற்றிய விரிவான கருத்து தொகுப்பாக அது அமைந்தது அதில் கவிஞர் திரு கலாப்ரியா அவர்களிடம் பின்வரும் கேள்வி கேட்கப் பட்டது.

**அழகியல் என்பது இலக்கியத்தின் ஓர் ஒழுங்கை அல்லது தேர்ந்துகொண்ட உட்பொருளை குறிக்கும் சொல்லா? அல்லது வெறும் ரசனையைக் குறிக்கும் சொல்லா? கவிதையில் அது எப்பொருளில் தொழிற்படுகிறது?**

இதற்கு கலப்பிரியாவின் பதில் இவ்வாறமைந்தது.



அது சாதாரண ஒழுங்குமில்லை வெறும் ரசனை சார்ந்ததும் இல்லை. பொருள் அல்லது சொல்ல நினைக்கிற கருத்தினை அதனதன் இயல்புக்கேற்ப உயிரோட்டமான வடிவில் சொல்வது எனலாம். கொஞ்சம் மொன்னையான வார்த்தைகளில் சொன்னால் வில்லன் பாத்திரத்தின் மேல் வெறுப்பு வரும்படி நடித்தால் அது அதன் அழகியல். அசிங்கங்களுக்கான அழகான கவிதை உங்களை முகம் சுழிக்க வைக்க வேண்டும். துயருக்கான கவிதை துயரத்தை மீட்டி கரிசனத்தையோ, ஆதரவையோ கண்டனத்தையோ உங்களில் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு நல்ல கவிதையும் அதனதன் அளவில் ஒரு மொழியை, மொழிக்குள் ஒரு மொழியைக் கொண்டிருக்கும். அதுதான் அதன் அழகியல் என்று நினைக்கிறேன்.

கவிதையென்பதை எவ்வாறு விளங்கி கொள்வது என்பதற்கு இந்தப் பதில் போதுமானதென நினைக்கிறேன். அந்த வகையில் முக நூலில் எல்லோரும் கவிதை எழுத முற்படுகிறார்கள் அதில் பெரும்பாலானவை கவிதையாக இருப்பதில்லை என்ற குற்றசாட்டு பரவலாக இருந்தாலும். பல இளையவர்கள் புதிய தளங்களில் நல்ல கவிதைகளை எழுதி வருகிறார்கள் என்பதுவும் மறுக்க முடியாத உண்மையாகிறது.

மனுதீரன் முகநூலில் பல அகம் சார்ந்த கவிதைகளை அவ்வப்போது எழுதிவருகிறார். இவரது கவிதைகளில் உறவுகள் மீதான விசாரணைகள் ஆழ்ந்த ஆன்மீகத்தளமொன்றிலிருந்து வெளிப்படுவதை காணலாம். எல்லோரும் எழுதி சலித்த சொற்களை விடுத்து புதிதாய் எழுத முற்படுகின்ற மனுதீரனின் கவிதை ஒன்று.

**மனுதீரன்**

### நீ என்னும் உதைாந இயக்கம்



*நீ வேரோடிப் போயிருந்தாய்*
*இந்நீரின் வெம்மையிலும்*
*இம் மண்ணின் தாபத்திலும்*
*ஞாபகம் கொண்டிருக்கிறாயா*

*உன் அகக் கோபமும் உன் விழிப்பையும்*
*எப்போது நீ அடையாளம் கண்டிருப்பாயென*
*மறந்திருப்பாய் எதற்காயென சொல்கிறேன் பின்னால்*
*ஆனால் நான் ஞாபகம் கொள்கிறேன்*

*அவள் விடாய் தோய்ந்த பின் அந்த அனமும் அயற்சியிலும்*
*உறுதியாய்*
*இயந்திர நாவுகளை தன் நாவின் இடர் காற்றை ஏவிக்*
*கொண்டே இருந்திருப்பாள்*
*அவள் பாவம்*
*அவள் உள் அகத்தின் நீர்ச்சுணையின் எரிச்சலும் நமச்சியும்*
*நீ அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தான்*

*இந்த தகிப்பில் நீ மூன்றரைக் கிலோ எடை தூக்கி*
*கடக்க முடியாமையாக இருக்கும் இல்லையா உன்*
*நன்மைகளை ஆனால் அது நன்மையென சுமந்தாள்*
*அந்த மூன்றரைக்கிலோ*
*என்ன வென்று நீ அறிய வேண்டுமா*
*ஆயுதங்களின் நிறையளவுகளைத் தேடிப்பார்.*

*இப்போதும் அவளுக்கு சுதந்திரம் தேவையற்றது உங்கள்*
*சுய தேவைகள் தேவையில்லை*
*அவளுக்கான ஆறுதலோ தேற்றுதலோ தேவையில்லை*
*அவளுக்கு தேவையானது*
*நீங்கள் யாரென ஆகவேண்டி*
*அவள் அரற்றிய துன்பங்களை ஞாபகம் கொள்கிறீர்களா என*
*அந்த ஒரு கேள்வி மட்டுமே*

*ஆம் இது என் கண்ணீரின் தோற்றப் பிழையென நீங்களும்*
*கடந்து விடுங்கள்*
*அப்போது எல்லோரையும் போலே நீங்களும் சாதரரணர்களென*
*கடந்துவிட இலகுவாயிருக்கும்.*

**அஷ்வினி வையந்தி**

மட்டகளப்பு கங்குவேலியை சேர்ந்த அஷ்வினி வையந்தியும் (கிழக்கு பல்கலைக்கழக மாணவி) அண்மைக் காலமாக இணைய வெளிகளில் எழுதி வருகிறார் சிறுகதை கட்டுரை இலக்கிய உரையாடல் என இயங் கும் அஷ்வினி வையந்தி அவ்வப்போது கவிதைகளும் எழுதி வருகிறார். கவிதை பற்றிய அழகியலில் அதிகம் அக்கறை காட்டாத இவரது கவிதைகள் யதார்த்தத்தை பேசுவதில் தனித்துவம் பெறுகின்றன. இலக்கிய உலகம் எதிர்காலத்தில் இவரிடமிருந்து மிக நல்ல கவிதைகளைப் பெறும் என்று நம்பலாம். இவர் அண்மையில் எழுதிய கவிதையொன்று

### அவள் ஒரு சிறந்த தாய்



*நிச்சயமாக கூறுகிறேன்*
*அவள் ஒரு சிறந்த தாய்!*
*தன் முகத்திற்கு*
*பவுடர் பூசிக்கொள்ளவோ*
*தன் நகத்திற்கு*
*கலர் பூச்சு அடிக்கவோ*
*தன் அங்கத்தை*
*பன்னீரால் குளிப்பாட்டவோ*
*அவள் நினைத்ததில்லை*
*அவள் ஒருபோதும்*
*நினைத்ததில்லை!*
*தனக்கென*
*புது ஆடைகளையோ*
*தனக்கென*
*புது பாதணிகளையோ*
*தனக்கென*
*புதிதாக எதையுமே*
*அவள் வாங்கித்*
*தொலைத்ததில்லை!*
*ஓட்டை விழுந்த*
*சட்டையையும்*
*பட்டியறுந்த*
*பாதணியையும்*
*எப்படி அணிவது என்றுதான்*
*யோசித்தாள்!*
*தூங்கி முழிப்பதற்கு*
*ஓர் அறையையும்*
*மூன்றுவேளை சாப்பிட*
*உணவையும்தான்*
*அவள் கேட்டாள்!*
*இவற்றைத் தவிர*
*அவள் கேட்டது*
*அவள் பிள்ளைகளின் புன்னகை*
*அவர்களின் வாட்டமில்லா முகம்*
*சதைபிடிப்பான தேகம்*
*பசியில்லா வயிறு*
*அவர்களின் தனிமையகன்ற உணர்வு!*
*இன்னும் நிறையவே கேட்டாள்*
*எல்லாமே*
*"தன் பிள்ளைகளுக்காகவே" கேட்டாள்!*
*இதனால்தான் சொல்கிறேன்*
*அவள் ஒரு சிறந்த தாய்!*

வரும்

# கென்யாவில் காதலிப்பதற்கு பயிற்சிவகுப்புக்கள்

காதலிப்பதற்குப் பயிற்சி. கேட்கவே வினோதமாகத் தோன்றுகிறதல்லவா. ஆனால் கென்யாவில் விரைவாக வளர்ந்துவரும் தொழில்களில் ஒன்றாக காதல் பயிற்சி வகுப்புக்கள் இருக்கின்றன என்கிறது பி.பி.ஸி.

எம் மத்தியில் தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் பிரபல்யம் பெற்றிருப்பதைப் போன்றுதான் கென்யாவில் இந்த காதல் பயிற்சி வகுப்புகளும் திருமணமாகாத பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. ஒரு வகையில் காதலன் கிடைக்காத மற்றும் காதலிக்க முயன்று முடியாமல்போன பெண்களின் தன்னம்பிக்கையை வளர்த்தெடுத்து அவர்கள் தற்துணிபுடன் ஒரு துணையைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டும் தலைமைத்துவப் பயிற்சிகளைப் போன்றவைதான் இவையும்.

இந்த வகுப்புகளில் தனிநபர் முன்னேற்றத்திற்கான வாழ்வியல் பயிற்சிகளும் அளிக்கப்படும். குறிப்பாக தியானம், மனநலம், மற்றும் தன்னம்பிக்கை வளர்ச்சி, காதல் பயிற்சி போன்றவையும் அளிக்கப்படும். அதில் அதிகமாக டேட்டிங் குறித்து பேசப்படும். வாழ்வியல் பயிற்சியை பொறுத்தவரை வாழ்க்கைத் துணையை கண்டறிவதுதான் இலக்கு.

காதலை அடைவதற்கான வழியில் ஆண்களுடன் பழகிய உடனேயே அவர்களுடன் பாலுறவு வைத்துக்கொள்வதும் இறுக்கமான ஆடைகளைப் பெண்கள் அணிவதும் முக்கிய தடைக் கற்கள் என்கிறார் இதுபோன்ற வகுப்புகளுக்கு கென்யாவில் புகழ்பெற்றவராக இருக்கும் ராபர்ட் புராலே. 'டியர் வுமன்' என்பது அவரது காதல் பயிற்சி வகுப்புக்கான பெயர்.

ராபர்ட்டின் இந்தக் கருத்துக்கள் பழங்காலத்துக்குரியவை என்று திருமணமாகாத கென்ய இளம்பெண்களில் பலர் நினைத்தாலும் அவரது வகுப்புக்கள் தமக்குத் தன்னம்பிக்கையயும் புத்துணர்வையும் தருவதாகவும் அது ஒரு துணையைத் தேடிக்கொள்ள உதவுவதாகவும் கூறுகின்றார்கள். சிலருக்கு அப்படி நடந்தும் இருக்கிறது.

## மிங்குகள் மீது விழுந்தது பார்வை...?

டென்மார்க், பின்லாந்து என ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மிங்க் என்கிற ஒருவகை விலங்குகள் வாழ்கின்றன. மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத - சாதுவான உயிரினம் தான் இந்த மிங்க். இதனால் அவற்றை அதிகளவில் வளர்க்கிறார்கள். பண்ணை வளர்ப்பு மிருகமாக அது இருக்கிறது. இவற்றின் உடலில் செம்மறியைப்போல அடர்த்தியாகக் காணப்படுகின்ற உரோமங்களைக் கொண்டு குளிருக்கு இதமான ஆடைத் தயாரிப்பும் மேற்படி நாடுகளில் பெருமெடுப்பில் நடந்தேறுகிறது. ஆனால், இதற்கெல்லாம் ஆப்பு வைத்தாற்போல் கொரோனாப் பரவல் காரணமாக அந்த அப்பாவி மிங்குகளைக் கண்ணீருடன் கொன்று புதைக்க முடிவெடுக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது. அதற்குக் காரணம் மிங்குகள் மூலம் கொரோனா நுண்தீமி பரவுவது அதிகரித்ததும், புதிய திரிபுகள் உருவாகவும், அதனால் மனிதர்களுக்குப் பாதிப்புகள் அதிகரிக்கவும் வாய்ப்புகள் ஏற்பட்டது என்பதுதான். இதனால் மிங்க் அழிப்பு பெருமெடுப்பில் நடந்தது. கவலையான காரியமாக அது இருந்தது. டென்மார்க்கின் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அறிக்கையின்படி 3 இல் 2 பங்கு மிங்குகள் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் டென்மார்க் அரசு கடும் கண்டனங்களைப் பெற்றது.

டென்மார்க்கை அடுத்து மிங்க் வளர்ப்பில் கொடிகட்டிப் பறப்பது பின்லாந்து. இப்போது தனது நாட்டு மக்களுடன் சேர்த்து மிங்குகளுக்கும் கொரோனா தடுப்பூசி போடுவதற்கான முன்னேற் பாடுகளை அது செய்துள்ளது.

பரிசோதனையாக மிங்க் விலங்குகளுக்குத் தடுப்பூசியை அது போட்டிருக்கின்ற செய்தி விலங்கு நல ஆர்வலர்கள் பலரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. மிங்குகளுக்காக 50 லட்சம் டோஸ் தடுப்பூசியை ஒதுக்கியிருப்பதாகப் பின்லாந்து சொல்லியிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலேயே பின்லாந்தில்தான் கொரோ னாத் தொற்று குறைந்தளவில் பதிவாகியுள்ளது. ஆனால், அங்கு மிங்குகளுக்கு கரோனா பரவல் அதிகமாக இருக்கிறது. அதனாலேயே பின்லாந்து அரசு தனது கவனத்தை மிங்குகளை நோக்கித் திருப்பியுள்ளது.

# இதுகளை என்னெண்டு சொல்லுறது?

● கதிரேசன் காத்தவராயன்

அதிலை சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டடிக்குப் போனன். அவற்றை வீட்டுக்கு அங்காலை பனையடியிலை முசுமுசுக்கை கிடக்கு. பிடுங்கலாமெண்டு பாஸ் கிடைச்சுது. வாய்ப்பாப்போச்சுது. மாஸ்ரர் ஆறுதலாய் இருந்தார். "வாரும் வாரும் கதிரேசு" எண்டு உற்சாகமாய் வரவேற்றார் இருந்துகொண்டன்.

படலை திறபடுகிற சத்தத்துக்கு எட்டிப் பாக்க முருகேசர் வந்தார். அவரும் இருந்திட்டார்.

"நாட்டு நடப்புகள் எப்பிடியப்பா போகுது? நான் வீட்டோடைதானே செய்தியள்தான் தஞ்சம்... அதுகளும் புதிசாய் ஒண்டமில்லை.. விசராக் கிடக்குது" எண்டு மாஸ்ரர் அங்கலாய்ச்சார். "சீரழிஞ்ச செய்தியள்தான். நானிப்ப செய்தியள் கேக்கிறதையே விட்டிட்டன்... கன நாளைக்குப் பிறகு நேற்று றேடியோவை செய்திக்குப் போட்டன்.. தலையைக் கொண்டுபோய் சுவரிலை மோத வேணும்போலை வந்திட்டுது பாருங்கோ... நாடு முழுதும் ஊரங்குச் சட்டமாம் அதுக்குள்ள வாகனங்கள் மோதி பதினொரு பேர் இருவத்து நாலு மணித்தியாலத்துக்குள்ள செத்திருக்குதுகள்.. முன்மாதிரியான நாடில்லோ இது?" எண்டு எரிச்சலோடை சிரிச்சார் முருகேசர்.

"சரியாச் சொன்னியள் மாமா" எண்டபடி உள்ளுக்கையிருந்து சுதன் வந்து இருந்துகொண்டான். "ஸ்கொலசிப் சோதினை இன்னும் பின்னுக்காய்ப் போட்டுதாம் உண்மைதானோ?" எண்டுகொண்டு தம்பர் வந்தார். சுதன் சிரிக்க மாஸ்ரரும் பிலத்தாச் சரிச்சார். சிரிச்சபடியே "தம்பு இப்படி இரும் ஆறுதலாச் சொல்லுறன்" எண்டார் மாஸ்ரர். "பரீட்சைத் திணைக்களத்திலை என்னப்பா எங்கடை வடக்குக்காறரே இருக்கினம்.. ஆங்...வைச்சமாம் முடிச்சமாம் அறிக்கையை அனுப்பினமாம் எண்டுறதுக்கு! பலதையும் யோசிக்கவல்லே வேணும்?" எண்டார் நிதானமாய் மாஸ்ரர்.

"உண்ணாணை மாஸ்ரர் எனக்குதுகளொண்டும் விளங்குதில்லை.. வீட்



டிலை மருமோனும் உப்பிடித்தான் சொல்லிப் பேசுறார்.. விளங்கிற மாதிரிச் சொல்லுங்கோவன்" எண்டார் அப்பாவியாய் தம்பர். "அது தம்பு மாமா சோதினைக்கு அரைவாசிக்கு மேலை பிள்ளையள் விண்ணப்பிக்கேலாமலிருக்குதுகள். நாட்டு நிலைமை அதிபர், ஆசிரியர் போராட்டம் எண்டு விண்ணப்பங்கள் அனுப்புப்படயில்லை. அப்பிடித்தான் அனுப்பியிருந்தாலும் அரைவாசிப் பிள்ளையளுக்கு மேலை படிப்புக்கு வசதியளில்லாமலக்கிருக்கு.. ஒன்லைன் படிப்பெண்டிறது எல்லாப் பிள்ளையளுக்கும் கிடச்சிருக்கோ? இல்லையல்லே!" எண்டான் சுதன்.

"ஆனால் நாங்கள் வலு கெட்டிக்காறர். ஒன்லைனிலை முழுச் சோதியையையும் நடத்திப் போட்டம்.. நாங்கள் எண்டிறது வடக்கு மாகாணத்தார்.. ஒன்லைன் பிரச்சனையுமில்லை, வாத்திமார் போராட்டமும் இல்லை.. இப்ப அறிக்கை தயாரிக்கிற வேலையும் தொடங்கியாச்சு... அமைச்சர் வடக்கிலை மட்டுந்தான் பிள்ளையளின்ரை கல்வியிலை வாத்திமார் அக்கறையோடை இருக்கினம் எண்டு பப்பாவிலை ஏத்தினதுக்கு உச்சிக்கு ஏறுகினம். மூளையும் மட்டுமட்டு. முதுகெலும்பும் கேள்விக்குறிதான். அவன் வடக்கை கிழக்கும் சேர்தியாய் நாட்டிலையிருந்து தனிமைப்படுத்துகிறான் எண்டுறதை விளங்க முடியாத பேயனுகள்.." எண்டு மாஸ்ரர் கொதிச்சார். தம்பர் பேந்தப்பேந்த முளிச்சார்.

"அதுக்குள்ளை அரசாங்கம் போராட்டக்காறற்றை கோரிக்கையை விளங்காமல் சம்பளத்திலை மாற்றமில்லாமல் ஐயாயிரம் ரூபா கூடத்தாறம் எண்டதிலை இருக்கிற ஏமாத்துக்கு போராட்டக்காறர் மசியேல்லையாமில்லே! உண்மைதானே?" எண்டார் முருகேசர் கேள்வியோடை. "உண்மைதான் மாமா.. ஆனால் எங்கடையாக்கள் அரசாங்கத்துக்கு விசுவாசங்காட்ட வெளிக்கிட்டிருக்கினம் எண்டிறதுதான் இப்ப சிரிப்பு. சூம் வகுப்பு எடுத்தால்தானாம் அந்த ஐயாயிரம் கிடைக்குமெண்டொரு வெருட்டில்லே விட்டிருக்கினம்? அதோடை தாங்கள் நடத்தினை ஒன்லைன் சோதினை மாக்ஸ்சுகளைக் கேட்டும் கரைச்சல்தான்.. அந்த மாக்ஸ்சுகளை வைச்சு இஞ்ச எல்லாம் நடக்குது எண்டு காட்டி நல்ல பேரெடுக்கலாமெண்டல்லே ஒற்றைக் காலிலை நிக்கினம்" எண்டான் சுதன்.

"எனி எங்கடையாக்களிலையும் கொஞ்சம் இருக்குத்தானே வெங்காயங்கள்.. என்னவோ ஏதோவெண்டு அனுப்புகிற விவரங்களைக் கொஞ்சம் கூட்டியும் போடுகுதுகளாம் எண்டும் கேள்விப்பட்டன்..." எண்டு மாஸ்ரர் சொல்லிக்கொண்டிருக்க சுதன் குறுக்கை "குறைவாய்த்தான் பிள்ளையள் பங்குபற்றினதெண்டால் நீங்கள் ஊக்கப்படுத்தேல்லை எண்டு பேச்சுமல்லே வாங்கவேணும்? அதுக்காகவும் கூட்டிப்போடுறதுதான்..." எண்டான். "பிள்ளையளின்ரை கல்வியிலை உண்மையான அக்கறையிருக்கிறவை அறிக்கையனுப்புறதிலை கவனமெடுக்கமாட்டினம்" எண்டார் மாஸ்ரர்.

"அப்ப மொத்தத்திலை முட்டாளுகள் முட்டாளுகளை முட்டாளாக்கிற முட்டாள் வேலை .. அப்பிடித்தானே...?" எண்டு கொண்டு எழும்பி முசுமுசுக்கை பிடுங்கப் போட்டன். ■




க.குமாரதாஸன்

# உலகம் எங்கேயோ போய்ட்டுது பாஸ்!

தமிழ்ப் பெண்கள் இருவர் ஓரினச் சேர்க்கைத் திரு மணத்தில் இணைந்து கொண்டது குறித்து தமிழ் பேசும் சமூக ஊடகப் போராளிகள் கொதித்துத் தெறித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் தான் ஓரினச் சேர்க்கை யாளர்கள் ஏனைய இணையர்கள் போல திருமணம் செய்துகொள்வதையும் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்வதையும் அங்கீகரிக்கும் சட்டத்துக்கு சுவிஸ் நாட்டு மக்கள் அமோக ஆதரவளித்திருக்கிறார்கள்.

புரட்டாதி 26ஆம் நாள் நடைபெற்ற மக்கள் கருத் தறியும் வாக்கெடுப்பில் ஒருபாலினத் திருமணங்களை ஆதரிக்கும் தரப்பினர் 64 சதவீத வாக்குகள் பெற்று வெற்றியீட்டியுள்ளனர் இதன் மூலம் ஓரினத் திரும ணத்தை (SAME-SEX MARRIAGE) அங்கீகரித்துள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளோடு சுவிற்ஸர்லாந்தும் இணைந்துகொள்கிறது. ஆணை ஆணும் பெண்ணைப் பெண்ணும் திருமணம் செய்து கொள்கின்ற சட்டத்தை சுவிஸ் நாடாளுமன்றம் கடந்த டிசெம்பரில் நிறைவேற்றி இருந்தது. ஆனால் சுவிஸின் நேரடி ஜனநாயக அரச மைப்பின்படி சட்டம் ஒன்றை எதிர்க்கின்ற தரப்பினர் தமக்கு ஆதரவாக 50 ஆயிரம் கையொப்பங்களைச் சேகரித்து விண்ணப் பித்தால் அந்தச் சட்டத் தின் மீது மக்கள் கருத் தறியும் சர்வஜன வாக் கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.அந்த அடிப் படையிலேயே ஒரு பாலினத் திருமணச் சட்டம் மீதும் கருத்த றியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் சட்டத்துக்கு அமோக ஆதர வாகவாக்குகள் பதிவாகியுள்ளன. இதன் மூலம் ஓரின தம்பதிகள் இனிமேல் ஏனையோரைப் போன்று சம உரிமைகளுடன் ஒரு பாலின இணையரும் திருமணம் புரியலாம். குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கலாம்.



திருமணம் புரிகின்ற இரண்டு பெண் இணை தாங்கள் குழந்தை பெற்றுக் கொள்வதற்காக ஆணின் விந்த ணுவை நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளவும் (SPERM DONATIONS) உரித்துடையவர்களாவர்.

சுவிஸ் ஆண் ஒருவரை மணம் புரியும் வெளிநாட்டு ஆண் ஒருவர் சுவிஸ் குடியுரிமை பெற விண்ணப் பிக்கலாம். பெண் இணைக்கும் இது பொருந்தும்.

ஓரினத் திருமணம் உலகில் சுமார் முப்பது நாடுகளில் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. பெல்ஜியம், ஸ்பெயின், நோர்வே சுவீடன், போர்த்துக்கல், ஐஸ்லாந்து டென் மார்க், பிரான்ஸ், லக்ஸம்பேர்க் அயர்லாந்து, மோல்ரா, ஜேர்மனி, ஒஸ்ரியா, இங்கிலாந்து, பின்லாந்து ஆகிய 15 ஐரோப்பிய நாடுகள் ஓரினத் திருமணத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. சுவிஸ் 16 ஆவது நாடாக அவற்றோடு இணைந்துகொள்கிறது.ஆசியாவில் தைவான் மாத்திரமே ஓரின திருமணத்தைச் சட்டத்தின் மூலம் அங்கீகரித்துள்ள ஒரே நாடு ஆகும்.

# இங்கிலாந்தில் புதிய டைனோசர் இனங்கள் கண்டுபிடிப்பு

மனித இனம் வளர்வதற்கு பல காலம் முன்னதாக வாழ்ந்த டைனோசர்கள் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் புதுப் புது தகவல்களைத் தந்துகொண்டே இருக்கின்றன. இப்போது இங்கிலாந்து அமைந்திருக்கும் பகுதியில் 125 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் புதிய டைனோசர் இனங் கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கிட்டத்தட்டப் பல ஆண்டு கால ஆராய்ச்சிக்குப் பின் னர் இந்த இரு புதிய இனங்கள் குறித்தும் ஒரு முடி வுக்கு வந்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். அதில் முதலாவது மாதிரிக்கு செராடோசூப்ஸ் இன்ஃபெரோ டியோஸ் என்றும் இரண்டாவது மாதிரிக்கு ரிப்பரோ வெனேட்டர் மில்னேரே என்றும் பெயரிட்டிருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இன்ஃபெரோடியோஸ் என்று பெயரிடப்பட்டுள்ள முதலாவது மாதிரி, "கொம்பு முதலை முகம் கொண்ட நரக ஹெரான்" என்று அடை யாளப்படுத்தப்பட்டுள்ளது.

புருவப் பகுதியைச் சுற்றி குட்டையான கொம்புகள் மற்றும் புடைப்புகள் இருப்பதால், ஹெரான் போன்ற வேட்டை பாணியை இது கொண்டிருக்கலாம் எனக் கருதி இந்த பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது மாதிரிக்கு ரிப்பரோவெனேட்டர் மில் னேரே என்று பெயர் வைத்துள்ளனர். இது சமீபத்தில் இறந்த பிரிட்டிஷ் தொல்லியலாளர் ஏங்கலா மில்னரின் நினைவாக "மில்னரின் ஆற்றங்கரை வேட்டையாளர்" என்று இது அழைக்கப்படுகிறது.இவை இரண்டுமே மாமிச உண்ணிகள் வகையைச் சேர்ந்தன என்பது ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பு.





வேலணையூர் தாஸ்

# எப்போது பூ பூக்கும் உன் மனக்காடு

1
விழும் நிலவில்
ஒரு பிடி ஏந்தி சிரி
எழும் காற்றில் கூந்தலை சீராக்கு பூக்களை தூவு
பனி நீரால் நிலம் நனை புன்னகையால்
கொடியேற்றி விழிகளால் விளக்கேத்து
நாணப்போர்வை விலக்கு
முகத்தில் மஞ்சள் பூசி வா
உன் தலைவன் வருகிறான்.

2
தாமரைக் குளத்தில் குளிக்கிற அல்லி மலரே
சந்தனத் தென்றலாய் உலவுகிறாய்
உன் கண்களை சந்திக்கும் வேளைகளில்
சிந்திக்கிறேன்
கொட்டி கிடக்கிற காதலை இந்த சின்ன
விழிகளில் எப்படி அடைத்திருக்கிறாய்
சில காலமாய் மௌனமே இழுக்கிறது நம்ம
காதல் தேரை
எப்போது பூ பூக்கும் உன் மனகாடு ..

3
சொல்வதற்கு ஒரு ஆயிரம் கதைகள்
வைத்திருக்கிறேன்
நகரும் இரவை அசையாது இருக்கச் சொல்
நிலவிற்கு ஒரு நாற்காலி கொடுக்கலாம்
தேனிருக்குள் மிதக்கிற கனவை நீ வடித்தெடு
தென்றல் வரும் திசைகளில் திரையிடலாம்
அதுவரை ஒலிக்கட்டும் இந்த இசை.

மருத்துவம்

# எந்நாளும் நலம் வாழ



## முடியுதிர்தல் மனஅழுத்தம் பாலியல் குறைபாடு தீர்வுத்தரும் ஜாதிக்காய்

மருத்துவர்
கந்தையா -சோதிதாசன்







ஜாதிக்காய் சிறந்ததொரு உடற்தேற்றியாக சித்தமருத்துவத்தில் அறியப்படுகிறது. இது கொட்டை வகையை சேர்ந்த ஒரு வகை மூலிகையாகும். அதிகக் காரமும் துவர்ப்புத் தன்மையும் கொண்டது. உடலில் இருக்கின்ற திசுக்களை, உறுப்புகளை பலமாக நீண்டகாலம் இயங்க வைப்பதில் ஜாதிக்காய் பெரும் பங்காற்றுகிறது.

இது பல்வேறு விதமான மருத்துவ நலன்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது. இதனால் பாரம்பரியமாக மக்கள் இதை தங்கள் உணவோடும் மருந்துகளுடனும் சேர்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

**பெண்களின் தலைமுடி சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கிறது**

உணவுமுறை மாற்றத்தாலும் இரசாயன ஸம்போக்களை அதிகம் பாவிப்பதாலும் இன்றைய இளம் பெண்கள் தங்கள் தலைமுடி ஆரோக்கியத்தில் பெரும் பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். முடி மெலிந்து, போதல், முடிகளில் வெடிப்பு ஏற்படுதல், முடி உதிர்தல் போன்ற பிரச்சினைகள் அதிகமாக ஏற்படுகின்றன.

இந்த பிரச்சனைகளுக்கு ஜாதிக்காய் தீர்வளிக்கிறது. ஒரு ஜாதிக்கயை எடுத்து. பால் சேர்த்து கிரைண்டரில் நன்றாக அரைத்து தலைமுடி வேர்களில் படும் படியாக தேய்த்து 15 நிமிடம் சென்றபின் குளித்து வர தலைமுடி மென்மையாகவும் பளபளப்பாகவும் பொடுகு போன்ற பிரச்சினைகள்நீக்கி ஆரோக்கியமானதாகவும் வளரும். இதை வாரம் ஒரு முறை செய்துவர வேண்டும்.

**மன அழுத்தம் தீர்கிறது**

பொருளாதார சூழ்நிலைகள், பெரும் தொற்றுநோய் நிலமைகள் என்பவற்றால் இன்று பலர் மன அழுத்தத்தால் அவதிப்படுகிறார்கள். தூக்கமின்மை, வாழ்க்கையில் வெறுப்பு, கவலை போன்றவை மன அழுத்தத்தால் ஏற்படுகின்றன. இவற்றைக் கவனிக்காது விடுகிறபோது பெரும் மன நோயாக அது மாறுகிறது. இந்த மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும் ஜாதிக்காய் உதவுகிறது. பாதி ஜாதிக்காயை தூள் செய்து பாலில் கலந்து சிறிதளவு தேன் விட்டு இரவுப் படுக்கைக்கு போகும்போது தினமும் அருந்திவர மன அழுத்தத்தில் இருந்து விடுதலை பெறலாம்.

**இன்று பல ஆண்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை ஆண்மைக் குறைவு**

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று உலகில் 60 சதவீதமான ஆண்கள் இப்பிரச்சினையால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கிறது இதற்குத் தீர்வாக ஜாதிக்காய் தமிழர்களிடையே பாரம்பரியமாக பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இதை வெற்றிலையோடு சேர்த்து கொடுக்கிற வழக்கம் பாரம்பரியமாக இருந்திருக்கிறது. வெற்றிலை போடுதல் பல் வேறு பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் ஜாதிக்காயை லேசான சூட்டில் நெய்யில் வறுத்து இடித்து தூளாக்கி 5 கிராம் அளவு சூரணத்தை காலை, மாலை பசும் பாலில் காய்ச்சி குடித்து வந்தால் பாலியல் குறைபாடு விந்து நீர்த்துப் போதல் என்பதை நீக்கி இல்லற வாழ்வை இனிக்கச் செய்யும். மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியான மருந்தாக எடுத்து வரவேண்டும்.

இது மட்டுமன்றி குருதியில் உள்ள கொழுப்பின் அளவை குறைப்பதிலும், வெள்ளை அணுக்களில் குருதிப் புற்று நோய் ஏற்படாமல் தடுக்கவும் ஜாதிக்காய் சிறப்பாக செயலாற்றுவதாக ஆய்வுகள் தெரிவிகின்றன.



**கடந்த 2005-ம் ஆண்டிலிருந்து பிரதமராக இருக்கும் ஏஞ்சலா மெர்க்கல்தான், ஜெர்மனியின் முதல் பெண் பிரதமர். உலக நாடுகளிடையே செல்வாக்குமிக்க பெண் அரசியல் தலைவராக விளங்கும் மெர்க்கல், ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்திவாய்ந்த தலைவராகவும் இருந்துவருகிறார்**

# ஜெர்மனி தேர்தல்: அடுத்த ஆட்சி யார் கையில்?

ஜெர்மனியில் 4 ஆண்டுக்கு ஒரு முறை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். அதன்படி கடந்த ஞாயிற்றுக் கிழமை (புரட்டாதி 26) அன்று, ஜெர்மனியில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. அதே நாளில் வாக்கு எண்ணிக்கையும் தொடங்கப்பட்ட நிலையில், திங்கட்கிழமை (செப். 27) அன்று தேர்தல் முடிவுகள் வெளியாகின. இந்தத் தேர்தலில், 2005ஆம் ஆண்டிலிருந்து ஜெர்மனியை ஆட்சி செய்த ஏஞ்சலா மெர்க்கலின் கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியன் கூட்டணி தோல்வியைச் சந்தித்திருக்கிறது. மெர்க்கல் கட்சியை எதிர்த்து போட்டியிட்ட சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சிக்கு அதிக வாக்குகளும், இடங்களும் கிடைத்திருக்கின்றன. பெரிய வித்தியாசம் இல்லாவிட்டாலும் அந்தக் கட்சியே வெற்றி பெற்றிருக்கின்றது.

**பெரும்பான்மை இல்லை!**

ஜெர்மனி நடாளுமன்றத்தில் மொத்தம் 735 இடங்கள் இருக்கின்றன. இவற்றில் 368 இடங்களைக் கைப்பற்றும் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கும். ஏஞ்சலா மெர்க்கலின் கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியன் கட்சிக்கு 24.1 சதவிகித வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அந்தக் கட்சி 196 இடங்களைப் பெற்றிருக்கிறது. 206 இடங்களைக் கைப்பற்றியிருக்கும் சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சிக்கு, 25.7 சதவிகித வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

**ஜெர்மனி**



இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், ஜெர்மனி நாடாளுமன்றத்தில், கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியன் கட்சியும், சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சியும்தான் ஆதிக்கம் செலுத்திவந்தன. ஆனால், சுற்றுச்சூழல் பிரச்னைகள் சார்ந்து அதிகம் விவாதிக்கப்பட்ட இந்தத் தேர்தலில், க்ரீன்ஸ் கட்சியும், லிபரல் கட்சியும் இளைஞர்களை அதிகம் கவர்ந்திருக்கின்றன. அதன் மூலம் இவ்விரு கட்சிகளும் அதிக இடங்களைக் கைப்பற்றியிருக்கின்றன. கிரீன்ஸ் கட்சிக்கு 118 இடங்களும், லிபரல் கட்சிக்கு 92 இடங்களும் கிடைத்திருக்கின்றன.



**எந்தக் கட்சி ஆட்சியமைக்கும்?**

இந்தத் தேர்தலில், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லையென்றாலும், கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்கும் முயற்சியில் சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சி இறங்கியிருக்கிறது. இது குறித்து அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் ஓலஃப் ஷோட்ஸ், ``கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியன், எதிர்க்கட்சி வரிசையில்தான் அமர வேண்டும் என மக்கள் விரும்பியிருக்கிறார்கள். அதைத்தான் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. நாங்கள் லிபரல், கிரீன்ஸ் ஆகிய கட்சிகளோடு இணைந்து ஆட்சியமைப்போம். ஜெர்மனியில் சிறப்பான அரசை உருவாக்க மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்'' என்று கூறியிருக்கிறார்.

ஆனால் கிரீன்ஸ் கட்சிக்கும் லிபரல் கட்சிக்கும் ஆகாது. இந்த இரு கட்சிகளினதும் கொள்கைகள் வெவ்வேறானவை என்பதால் அவை ஒருமித்து ஒரு கூட்டணி ஆட்சியில் பகேற்பது அரிதிலும் அரிதாகவே நடக்கக்கூடும் என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்.

பல விஷயங்களில் எதிரெதிர் கருத்துகளைக்கொண்டு மோதிக்கொள்ளும் கிரீன்ஸ் கட்சியையும், லிபரல் கட்சியையும் ஒரே கூட்டணியின்கீழ் கொண்டுவருவது கடினம் எனச் சொல்லப்படுகிறது. அதனால், கூட்டணி குறித்து முடிவுகள் எட்டப்பட டிசம்பர் மாதம் வரைகூட ஆகலாம் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது.

**ஓலஃப் ஷோட்ஸ்**

ஓலஃப் ஷோட்ஸ், `கூட்டணி அமைத்து ஆட்சியமைப்போம்' எனத் தெரிவித்திருக்கும் கருத்துகளை ஏற்க மறுத்த கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியன் கட்சி, ''அதிக இடங்களைப் பிடித்த கட்சி, ஆட்சியமைக்க அதிகாரம்கொண்டது என அர்த்தமில்லை. எங்கள் கட்சி ஆட்சியில் அமர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். நவீன ஜெர்மனியை உருவாக்கக் கூட்டணி ஆட்சி தேவைப்படுகிறது'' என்றிருக்கிறது. இதன் மூலம், கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியன் கட்சி, சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சி என இரு கட்சிகளுமே கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பதற்கான முடிவிலிருப்பது தெரியவருகிறது. ஆனால், சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சி ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புகளே அதிகமிருக்கிறது என்கிறார்கள் ஜெர்மனி அரசியலை உற்று நோக்குபவர்கள்.

ஜெர்மனியில் தற்போதைய நிலவரப்படி, மூன்று கட்சிகள் கூட்டணிச் சேர்ந்து ஆட்சியமைக்கும் சூழலே இருந்துவருகிறது. அப்படி ஆட்சியமைத்தால், ஜெர்மனி அரசியல் வரலாற்றில் மூன்று கட்சிகள் இணைந்து ஆட்சியமைப்பது இதுவே முதன்முறையாக இருக்கும்.

**மெர்க்கல் கட்சி சறுக்கியது ஏன்?**

கடந்த 2005-ம் ஆண்டிலிருந்து பிரதமராக இருக்கும் ஏஞ்சலா மெர்க்கல்தான், ஜெர்மனியின் முதல் பெண் பிரதமர். உலக நாடுகளிடையே செல்வாக்குமிக்க பெண் அரசியல் தலைவராக விளங்கும் மெர்க்கல், ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்திவாய்ந்த தலைவராகவும் இருந்துவருகிறார். அப்படியிருந்தும் அவரது கட்சி ஏன் இந்தத் தேர்தலில் வெற்றிபெறவில்லை என்கிற கேள்வி எழுகிறது.

அதற்கு பதில் தரும் வகையில் சில தகவல்களைச் சொல்கிறார்கள் சர்வதேச அரசியல் விமர்சகர்கள், ''1949 முதல் ஜெர்மனி

(23ம் பக்கம் பார்க்க)

# பொருள்களால் வரும் மதிப்புக் கிடையாது!



● ஜீயோ டாமின்

முகநூல் வழியே அறிமுகமாகிய நண்பர் ஒருவரை ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு திருவிழாவில் நேரில் சந்தித்தேன். நெரிசலில் சில நிமிடங்களுக்குமேல் நேரில் பேசிக்கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு சமீபத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சில செய்திகளைப் பகிர்ந்துகொண்டார். பேசும் போது எங்கள் முந்தைய சந்திப்பு தொடர்புடைய ஏதோ ஒன்றை நினைவுபடுத்துவதற்காக "அன்றைக்கு நீங்க ரெட் கலர் 'ரேமன்' பிரான்டட் ஷர்ட் போட்டிருந்தீங்களே" என்று குறிப்பிட்டார். தூக்கிவாரிப் போட்டது எனக்கு. சில நிமிடங்களே நீடித்த அதுவும் திருவிழா நெருக்கடிக்கிடையே நடந்த முதல் சந்திப்பில் நான் எவ்வாறு அந்நபரால் மதிப்பிடப்பட்டிருக்கிறேன் என்று எண்ணிப்பார்த்தபோது உள்ளுக்குள் ஏற்பட்ட தீடீர் அகுசை உணர்வை ஒருவாறு சமாளித்துப் பேசி முடித்தேன்.

இன்று நாம் நம்முடைய குணநலன்களாலன்றி நாம் அணியும் ஆடை ஆபரணங்களாலேயே அடையாளம் காணப்படுகிறோம் என்பது எத்தனை வெட்கப்படவேண்டியது? மற்றவர்கள் நம்மை எந்த அளவீடுகளால் அளவிடுவதாக உணர்கிறோமோ அதே அளவீடுகளாலேயே நாம் அவர்களையும் அளவிடுகிறோம். நம்முடன் பழகும் நபர் என்ன விலை பெறுமானமுள்ள காலணி அணிந்திருக்கிறார் (அது நன்றாக இருக்கிறதா இல்லையா என்பதோ அல்லது அவருடைய உடைக்குப் பொருத்தமாக இருக்கிறதோ என்பது கூட விலை மற்றும் பிராண்டுக்கு அடுத்த பட்சம் தான்) என்பது முதல் அவர் என்ன விலைமதிப்புள்ள வாகனத்தில் வந்திருக்கிறார் என்பதுவரை அளவிட்டே அதன்பின் அந்நபரைப்பற்றிய ஒரு சித்திரம் நம் மனதில் கட்டமைக்கப்படுகிறது. அடுத்த கட்டமாக நாம் கட்டமைத்த அந்தச் சித்திரத்தை அதே போன்ற அளவீடுகளுடன் நமக்கு நாமே சுயமதிப்பீடு செய்து உருவாக்கிய நம் சொந்த சித்திரத்துடன் ஒப்பிட்டுக்கொள்கிறோம்.

இந்த ஒப்பீடு நம்மைத் தாழ்வு மனப்பான்மை கொள்ளச் செய்வதாயிருந்தாலும் சரி இல்லை பெருமையோ பொறாமையோ கொள்ளச் செய்வதாயிருந்தாலும் சரி, இந்த மதிப்பீடுகளும் ஒப்பீடுகளும் சிறிதளவிலேனும் நமக்குள் ஊறிப்போயிருக்கிறது என்பதே உண்மை. நானும் எனக்குள் இதைப் பலமுறை செய்திருக்கிறேன். வெளியே மற்ற பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருக்கும் என் பிள்ளைகள் ஏளனப் பார்வைக்கு உட்பட்டுவிடுவார்களோ என்ற எண்ணத்தில் நான் அவர்களின் ஆடைகளை மற்றவர்களுடையதோடு ஒப்பிட்டிருக்கிறேன். இந்த மதிப்பீடுகளை என் பிள்ளைகளுக்கும் எந்தக் கூச்சமுமின்றி வெகு சாதாரணமாக நான் பலநேரங்களில் கடத்தியிருக்கிறேன் என்பதையும் உணர்கிறேன்.

உறவினர் வீட்டுத் திருமணம் ஒன்று வரப்போகிறது என்றால் பலருக்கும் அது மகிழ்ச்சியைவிட அதிகப் பதற்றத்தையே கொடுக்கிறது. அங்கே உறவினர்கள் கூடும் விழாவில் தான் மரியாதையுடன் பார்க்கப்பட வேண்டுமென்றால் ஒரு குண்டுமணித் தங்கமாவது தன்னிடம் இருந்தாக வேண்டுமென்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள். பெரிதாய் கவரிங் நகைகள் புழக்கத்தில் இல்லாத என்னுடைய சிறுவயதில் வீட்டுத் திருமணங்களின்போது பெண்கள் பொன் நகைகளை இரவல் வாங்கி அணிந்துகொள்வது சாதாரண நிகழ்வு. எனினும் குறைவாகவே நகைகள் அணிந்திருந்தாலும் அந்தத் திருமணத்துக்குக் காரில் வந்திறங்கும் பெண்ணின் மதிப்பு இரவல் நகைகளோடு பேருந்தில் போய் இறங்கும் பெண்ணின் மதிப்பைவிட அதிகம் என்பதானது இங்கு 'மதிப்பு' எதை வைத்து அளவிடப்படுகிறது என்பதை நன்கு உணர்த்தும். இந்தச் சிக்கல் பெண்களுக்கானது மட்டுமல்ல. ஒரு ஆணுக்கான மதிப்பு அவனணியும் காலணி முதல் அவனுடைய வாகனம் வரை தொடர்கின்றது.

'ஆள்பாதி ஆடைபாதி' என்பார்கள். ஆடைகள் ஒரு நபரின் இரசனையையும் தன்னம்பிக்கையையும் அவர் தன்னைத்தானே பாராமரித்துக்கொள்ளும் விதத்தையும் பறைசாற்றுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. ஆனால் உண்மையில் இங்கு ஆடையின்றி அதை அணிபவரின் பொருளாதாரப் பின்புலமே அவருக்கு மரியாதையைப் பெற்றுத் தருகிறது என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒரே விதமான ஆடையே அணிந்திருந்தாலும் அப்பிள் பிரான்ட் அலைபேசி வைத்திருப்பவரும் சாதாரண ஒப்போ மொபைல் வைத்திருப்பவரும் இங்கு ஒரே விதமாகப் பார்க்கப்படுவதில்லை என்பது நமக்கு நன்றாகவே தெரியும்.

விசித்திரமான மதிப்பீடுகள் இவை. இவை எப்போதும் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறங்கிக் கிடப்பவை. எனினும் இவை எப்போதும் யாரிடமும் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படுவதில்லை. நம் சமூகத்தில் கொஞ்சம்கூட உறுத்தலின்றிச் சாதிப் பெருமை பேசுபவர்கள்கூடப் பொருளாதாரப் பெருமையைத் தன் வாயால் பேசக் கூச்சப்படுவார்கள்

இன்னொரு தரப்பும் இங்கே உண்டு. பொருளாதாரத்தில் உச்சத்திலேயே இருந்தாலும் தான் எளிமையாக வாழ்வதுபோன்ற ஒரு பிம்பத்தைத் தன் அரசியல் இலாபங்களுக்காகவோ இல்லை வேறு ஆதாயங்களுக்காகவோ உருவாக்கும் மனிதர்கள். கோடி கோடியாகப் பணத்தை அடுத்தவருக்குக் கொடுத்தாலும் அழுக்கு வேட்டி, செருப்பற்ற கால்கள் என்று எளிமை பாராட்டுவதாகக் காட்டிக்கொண்டு அரசியல் முதலீட்டில் ஈடுபடுகிறார்கள் இவர்கள்.

விசித்திரமான மதிப்பீடுகள் இவை. இவை எப்போதும் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறங்கிக் கிடப்பவை. எனினும் இவை எப்போதும் யாரிடமும் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படுவதில்லை. நம் சமூகத்தில் கொஞ்சம்கூட உறுத்தலின்றிச் சாதிப் பெருமை பேசுபவர்கள்கூடப் பொருளாதாரப் பெருமையைத் தன் வாயால் பேசக் கூச்சப்படுவார்கள். அதேநேரத்தில் குரூரமாய் அதைத் தன் மனதிற்குள்ளே இரசித்துக்கொள்வார்கள். இந்த மதிப்பீடுகள்தான் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒருவனை அவன் தன் நெஞ்சுக்கு நெருக்கமானவனாகவே இருந்தாலும் என் நண்பன் என்று பிறர் முன்னிலையில் சொல்ல இன்னொருவனைத் தயக்கம் கொள்ளச்செய்து சங்கடத்தை உருவாக்குகிறது.

இது தனி மனிதர்களை மட்டுமல்ல அருவெறுக்கத்தக்க விதத்தில் தனிமனிதர்களால் கட்டப்பட்ட சமூகத்தையும் நாட்டையும் கூட நோயாய்ப் பீடித்திருக்கிறது. அடுத்தவர்கள் முன்னிலையில் தன் மதிப்பைத் தூக்கி நிறுத்துவதற்காகவே வெற்று ஆடம்பரங்கள் பிரம்மாண்டங்களுடன் நிழக்த்தப்படும் குடும்ப - சமூக விழாக்களை இதற்கு உதாரணமாகக்கொள்ள முடியும். கட்டட வடிவமைப்பாளனான என்னை நண்பர் ஒருவர் தொடர்புகொண்டு தன் ஊருக்கு ஒரு தேவாலயம் வடிவமைக்கக் கேட்டுக்கொண்டார். இரண்டு உயர்ந்த கோபுரங்களுடன் வடிவமைப்பு முடிவு செய்யப்பட்டு வேலை தொடங்கிய பின்னர் அவசரமாய் ஓரிரவில் தொடர்புகொண்டு 'பக்கத்து ஊரிலும் தேவாலயம் கட்டுகிறார்களாம். அவர்களுடைய சர்ச்சின் உயரத்தைவிட நம்முடையது குறைந்துபோனால் நமக்கு அசிங்கமாகிவிடும், எனவே நமது வடிவமைப்பின் கோபுர உயரத்தை இன்னும் 10 அடிகள் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்'. இத்தனைக்கும் ஏற்கெனவே இருந்த வடிவமைக்கான பணத்தைத் திரட்டவே அவர்கள் படாதபாடுபட்டுக் கொண்டிருந்தனர்.

குடும்ப விழாக்களான திருமணங்கள்கூட நமக்காகவன்றி ஊரில் நாலு பேர் முன் நம் மதிப்பை நிலை நிறுத்துவதற்காகவே யோசித்துத் திட்டமிடப்படுகின்றன. சிறுவயதில் திருமண வீடுகளில் எத்தனை கார்கள் வந்திருக்கின்றன, வாழை இலையில் எத்தனை கூட்டுகளும் பொரியலும் இருக்கிறது என்பதை நண்பர்களுடன் சேர்ந்து எண்ணிப் பார்த்து உச்சுகொட்டியது இன்னும் என் நினைவில் இருக்கிறது.

இந்தச் சமூக மதிப்பீடுகளின் நீட்சியாகத்தான் நாட்டின் மதிப்பையும் கெத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் தாமரைக் கோபுரம் போன்ற வெற்றுப் பிரம்மாண்டங்களைப் பார்க்க முடிகிறது. பெருந்தொற்றுக் காலத்தில் தன் குடிகள் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் ஒருபுறம் செத்துக்கொண்டிருக்க அவர்களுக்கு மூச்சுவிட உயிர் வாயுவைகூட உற்பத்தி செய்ய முடியாத நிலையிலும் விதிகளை வளைத்து அசுர வேகத்தில் அரசால் முன்னெடுக்கப்படும் வளர்ச்சித் திட்டங்களை என்னவென்று சொல்வது?

இதன் வெளியரங்கமான பெருமிதங்களின் பின்னிருக்கும் உளவியலையும் விலங்குலகத்தில் இதன் பரிணாமத்தையும் கொஞ்சம் ஊகிக்க முடிகிறது. சக விலங்குகளைவிட நன்கு கிளைத்த பெரிய கொம்புகள், சேதாரமற்ற அழகிய தோகை, பிசிறற்ற அடர்ந்தப் பிடரி மயிர் போன்ற வெளிக்காட்டிக்கொள்ளும்படியான பெருமிதங்களே விலங்குலகில் 'ஆண்மை'க்கான அடையாளமாகவும் உயர்வாகவும் பார்க்கப்படுவதோடு எதிர் பாலுயிரியை ஈர்ப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பழங்குடிச் சமூகங்களில்கூட இருவாச்சியின் இறகுகளைத் தலையில் சூடிக்கொள்ளும் தகுதி பெற்றிருப்பதும் குறிப்பிட்ட ஆபரணங்களை அணிந்துகொள்வதும் தலைமைத்துவத்தின் ஆண்மையின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

இதன் நீட்சியாகத்தான் பொருட்களின் மூலம் ஈட்டப்படும் வெளியரங்கமான மதிப்பைக் கட்டமைக்கும் குணம் மனிதருக்குள் குடிகொண்டிருக்குமோ என்று தோன்றுகிறது. எனினும் முந்தையது மரபு ரீதியாகவோ அல்லது (உடல் வலு அல்லது ஆளுமையால் ஈட்டப்பட்ட) தகுதியின் மூலமோ பெறப்படுகிறது என்றால் இன்றைய நவீன மதிப்பு வெறும் பொருளாதாரப் பலத்தால் கட்டமைக்கப்படுகிறது. இன்றைய உலகில் பிழைத்திருக்க உடல்வலுவையும் ஆளுமைத்திறனையும் விட ஒருவருடைய பொருளாதார வலு அத்தியாவசியமாய்ப் பார்க்கப்படுவதுகூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

எது எப்படி இருப்பினும் மதிப்புக்காக வாங்கப்படும் - வடிவமைக்கப்படும் பொருட்களோ - அடையாளங்களோ இல்லை செயல்பாடுகளோ வெறும் பொருளாதார சுமையாய் மட்டும் இருந்துவிட்டால் போனால் போகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால் உலகம் கடும் சூழல்

## பொருள்களால் ...

சிக்கல்களை எதிர்கொண்டு வரும் இந்நாட்களில் இந்த வெற்றுப் பிரம்மாண்டங்களை நாம் கடுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது.

எவ்வளவு கெத்தான பொருட்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அதிகமாகச் சூழல் சீர்கேடும் என்பது நாம் இங்கு கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. ஒரு சாதாரண இருசக்கர மோட்டார் வாகனத்தைவிட விலை அதிகமுள்ள - தேவைக்கும் அதிகத் திறன்கொண்ட - அதிகப் புகை உமிழும் - அதிக இரைச்சலை உருவாக்கும் - அதிக மரபு எரிபொருள் உறிஞ்சும் ராயல் என்பீல்டுகள் போன்ற உந்துருளிகளில் பவனிவரும்போதுதான் நம் இளைஞர்கள் தம்மை ஒரு குட்டி இளவரசன் போல உணர்கிறார்கள். இதுவே ஒரு திருமணத்தை எடுத்துக்கொண்டால் திரும்பும் திசையெல்லாம் ஜொலிக்கும் வண்ண விளக்குகள் - வீணாக்கப்படும் உணவு - குடிநீர் - பரிசுப்பொருட்கள் - ஒருமுறை பயன்படுத்தித் தூக்கியெறியும் வீண் அலங்காரங்கள் - தண்ணீர்ப் புட்டிகள் முதல் உணவுத் தட்டுகள் வரையிலான நெகிழிப் பொருட்கள் - எங்கும் குளுகுளுவென உணரவைக்கும் குளிரூட்டிகள் எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்தச் சூழல் நெருக்கடியில் நாம் இந்த வாழ்க்கை முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. நம் திருமண விழாக்களை நெஞ்சுக்கு நெருக்கமான உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் மட்டும் சேர்ந்து கொண்டாடும் -எளிமையான அதே நேரத்தின் இன்னும் அதிக அன்பையும் நெருக்கத்தையும் உணரவைக்கும் குடும்ப விழாக்களாக மாற்றுவது குறித்து நாம் சிந்திக்கவேண்டும். நீண்ட நாட்களாகக் கிடப்பில் கிடந்த திருமணங்களைக் கொரோனா பொது முடக்கத்தில் செலவைக் குறைக்கும் நோக்கத்தில் அவசர அவசரமாக முடித்தவர்கள் பலரை நாம் பார்த்திருப்போம். இதன் பின்னிருக்கும் வலியைக் கொஞ்சம் உணர்ந்தாலே நமது இந்த வெற்று ஆடம்பர மதிப்பீடுகளுக்காக விலைகொடுக்கும் மனிதர்களுக்கு இந்தச் சமூகம் கொடுக்கும் பொருளாதார நெருக்கடியைப் புரிந்துகொள்ள முடியும்.

பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்பார்கள். பொருட்களின் உற்பத்தி சூழலைப் பாதிக்கிறது என்பதற்காக நாம் அம்மணமாக அலைய வேண்டியதில்லை. பொருட்களையும் அவற்றின் மீதான ஆசையையும் துறந்து புத்தனாகத் திரியவேண்டியதுமில்லை. ஆனால் குறைந்தபட்ச வசதிகளுடன் உயிர்வாழ்வதற்கான தேவைகளைத் தாண்டிய பொருட்களை அவற்றின் அவசியத்தை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

வேதனைதரும் அருவெறுக்கத்தக்க பொருள் சார்ந்த மதிப்பீடுகளுக்குப் பின்னிருக்கும் உளவியலை நாம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய சக மனிதனைப் பொதுவெளியில் நிர்வாணியாய் உணரச் செய்யும் இந்த மதிப்பீடுகள் உடைக்கப்பட வேண்டுமானால் அந்த நிர்வாணத்தை நாம் ஒவ்வொருவரும் வலிந்து தேர்ந்தெடுப்பது ஒன்றே வழி.

வெளியே தெரிவதற்காகவே கழுத்தை இறுக்கியபடி நாம் அணியும் தங்கச் சங்கிலிகளோ, நாம் அணியும் விலையுயர்ந்த பிராண்டட் ஆடைகள், அணிகலன்கள், காலணிகள், கைக்கடிகாரங்களோ இல்லை நாம் ஏறியமர்ந்து பவனிவரும் ஸ்டைலான வாகனங்கள், உடலில் புஸ்... புஸ்சென்று அடித்துக்கொள்ளும் வேதி நறுமணங்களோ, பாக்கெட்டில் சொருகியிருக்கும் விலையுயர்ந்த பேனாக்களோ, பணப்பையை நிறைத்திருக்கும் பல வண்ண கிரெடிட் கார்டுகளோ அணுவளவிலேனும் நமக்குச் சமூக மதிப்பைப் பெற்றுத் தர முடியாது.

பொருட்களால் நம் மரியாதையையும் மதிப்பையும் உயர்த்திக்கொள்ள முடியாது.

இரவில் ஒளியை நாடி வட்டமிடும் பூச்சிகள் போன்ற சில மனிதர்கள் அந்த பொருட்களால் உங்களை நோக்கி ஈர்க்கப்படக்கூடும். உங்கள் அருகே வந்து உங்களை மேலிருந்து கீழ் வரை அளவிட்டபடி புருவங்களை உயர்த்தித் தம் கீழ் உதட்டால் மேல் உதட்டைப் பிதுக்கிக் கொண்டே 'அந்தமாதிரி ஆள்தான் நீங்க' என் பார்கள் அவர்கள். நீங்களும் வானத்தில் சிறகடிப்பதற்குள் விடிந்துவிடும். இருள் விலகி ஆதவன் ஒளிபடர்ந்தபின் 'வெற்று' விளக்கைச் சுற்றும் பூச்சிகள் எங்கேனும் உண்டா என்ன?

பெரும் மக்கட் திரளைத் தம்வசம் காந்தம் போல ஈர்த்து வைத்திருந்த மகத்தான வரலாற்று நாயகர்கள் எவரும் கவர்ச்சியும் ஆடம்பரமும் நிறைந்த விலையுயர்ந்த பொருட்கள் மூலம் தம் மகத்துவத்தையும் மனித அன்பையும் ஈட்டியவர்கள் அல்லர். 'உள்ளே எதுவுமற்ற' வெற்றுகளே பல இலட்சம் மதிப்புள்ள கோட்டுச் சூட்டுகளில் தம் உடலைப் புதைத்துக்கொண்டு வெண்தாடியுடன் தம்மை மகத்தானவர்களாக நிறுவ முயல்கின்றனர்.

உங்கள் கைவசமிருக்கும் ஒரு விலை மதிப்புமிக்கப் பொருள் உங்களை நோக்கி ஓர் 'உறவை' ஈர்க்கும் என்று நீங்கள் நம்பினால் தூக்கியெறிய வேண்டியது அந்தப் பொருளை மட்டுமல்ல உறவையும்தான். பூப்போன்று மலர்ந்த முகமும் அதிலிருந்து வெளிப்படும் புன்முறுவலும், கனிவான பார்வையும், பாசாங்கற்ற வார்த்தைகளும் கேட்கும் திறன்பெற்ற காதுகளும், இதமான தொடுதலும், மானிடக் காதலுமின்றி மனிதரை எதுதான் ஈர்க்க முடியும்? தூய அன்பைத் தவிர எதுதான் ஓர் உறவை நாம் தக்கவைத்துக்கொள்ள உதவும்?

நம்மைப் பெருமைகொள்ளச் செய்யும் பொருட்கள் அவற்றை உடைமையாக்க வாய்ப்புகளற்ற நம் நண்பர்களையும் உறவுகளையும் காயப்படுத்தி ஏளனம் செய்பவை. சிறுமைப்படுத்துபவை. பொதுவெளியில் அவர்களைக் கூனிக்குறுகச் செய்பவை.

பொருட்கள் பணத்தை வீணாக்குகின்றன பொருட்கள் உறவுகளை விலக்குகின்றன. பொருட்கள் உடல் நலனைக் கெடுக்கின்றன. பொருட்கள் தம் உற்பத்தியிலும், பயன்பாட்டிலும், கழிவு நீக்கத்திலும் சூழலைப் பாழ்படுத்துகின்றன.

பொருட்களால் பெறப்படும் மதிப்பு ஒரு சமூக அநீதி. பொருட்களால் பெறப்படும் மதிப்பு ஒரு சூழல் அநீதி. பொருட்களால் பெறப்படும் மதிப்பு 'விளக்குமாத்துக்குப் பட்டுக்குஞ்சம்' போன்றது. அது மதிப்பை அன்றி ஏளனத்தையும் புறக்கணிப்பையுமே பெற்றுத்தரும். மனிதர் உள்ளடக்கிய நம் சூழலின் மீதான காதல்தான் உண்மையாக நம்மைத் தலைநிமிரச்செய்யும் 'மதிப்பு'. அந்தக் மதிப்பைச் சொந்தமாக்கிக்கொள்ள உழைப்போம்.

## இந்த வார சுடோக்கு - 55

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 2 | | 8 | 6 | | |
| | | | | 9 | | | | 5 |
| | 8 | | | 4 | | | 1 | 7 |
| | 6 | | | | 9 | 5 | | |
| | | 9 | 7 | 6 | 5 | 8 | | |
| | | 5 | 4 | | | | 6 | |
| 6 | 4 | | | 2 | | | 5 | |
| 3 | | | | 8 | | | | |
| | | 2 | 3 | | 6 | 1 | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஓரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
*சுடோக்கு,*
**551 A,** *கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 8 | 2 | 3 | 7 | 9 | 5 | 4 |
| 5 | 3 | 4 | 6 | 9 | 8 | 7 | 2 | 1 |
| 9 | 2 | 7 | 1 | 4 | 5 | 8 | 3 | 6 |
| 4 | 6 | 3 | 8 | 7 | 2 | 1 | 9 | 5 |
| 7 | 5 | 9 | 4 | 1 | 6 | 3 | 8 | 2 |
| 1 | 8 | 2 | 9 | 5 | 3 | 4 | 6 | 7 |
| 3 | 7 | 1 | 5 | 2 | 9 | 6 | 4 | 8 |
| 2 | 4 | 6 | 3 | 8 | 1 | 5 | 7 | 9 |
| 8 | 9 | 5 | 7 | 6 | 4 | 2 | 1 | 3 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.*

## ஜெர்மனி...

அரசியலில் ஆதிக்கம் செலுத்திவந்த கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியனுக்கு இந்தத் தேர்தலில் மிகப்பெரிய தோல்வியைத் தந்திருக்கிறார்கள் ஜெர்மன் மக்கள். 2018-ம் ஆண்டு கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்த மெர்க்கல், 2021 தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்றும் அறிவித்தார். ஜெர்மனி அரசியலில் இரும்புப் பெண்மணியாக வலம்வந்த மெர்க்கல் அரசியலிலிருந்து ஓய்வுபெற்றிருப்பதே அந்தக் கட்சிக்குப் பின்னடைவுதான். 1990 முதல் ஏஞ்சலா மெர்க்கல் போட்டியிட்டு வென்ற தொகுதியில்கூட, இந்த முறை சோஷியல் டெமாக்ரட்டிக் கட்சியே வெற்றிபெற்றிருக்கிறது.

### ஏஞ்சலா மெர்க்கல்

ஏஞ்சலா மெர்க்கலின் ஓய்வுதான் கிறிஸ்டியன் டெமாக்ரட்டிக் யூனியனின் தோல்விக்கு முக்கியக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. ஜெர்மனியிலிருக்கும் இளைஞர்கள் பலரும் சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்கள் நாட்டுக்குத் தேவை என்று நினைக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் சூழலியல் தொடர்பான திட்டங்களை அடுக்கிய கிரீன்ஸ் கட்சிக்கு அதிக இடங்கள் கிடைத்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் நீண்டகாலமாக ஆட்சியிலிருக்கும் மெர்க்கலின் கட்சி, நவீன உள்கட்டமைப்புகளை அமைக்கத் தவறிவிட்டதாகவும், சரியான முதலீட்டாளர்களை ஜெர்மனிக்குக் கொண்டுவரத் தவறிவிட்டதாகவும் ஜெர்மன் மக்கள் கருதுகின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்க்க முடியாத பிரச்னைகளுக்கு வலதுசாரி ஆட்சியாளர்கள் சரியான தீர்வு காணவில்லை என ஜெர்மன் மக்கள் கருதுகின்றனர். அதன் காரணமாகத்தான் இடதுசாரிகளான சோஷியல் டெமாக்ரட்டிக், கிரீன்ஸ் ஆகிய கட்சிகள் இந்தத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றிருக்கின்றன" என்கிறார்கள்.

# சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பாதுகாப்பானதா?



சுரேந்திரா

வடக்கு மாகாண சபை பதவியில் இருந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் நிலத்தடித் தண்ணீர் மாசு பட்டுவிட்டது என்கிற சர்ச்சை ஒன்று பெருமெடுப்பில் பேசப்பட்டது. வழக்கம்போலவே கட்சி அரசியல் நல்ல விளைச்சலைத் தர இந்தத் தண்ணீர் பிரச்சினை அளவுகணக்கின்றி அள்ளி இறைக்கப்பட்டது. இறுதியில் பல பெட்டிகள் கைமாறிக்கொண்டதால் இந்தப் பிரச்சினையை மூடிமறைத்துவிட்டார்கள் என்கிற குற்றச்சாட்டுடன் அது ஒரு முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் அதைப் பற்றிப் பேசவிளைந்தோர் யாருமிலலை. முக்கியமாக அன்று அக்கறை செலுத்தி இந்தப் பிரச்சினையை வைத்து அரசியல் வயிறு வளர்த்த எந்த அரசியல் கட்சியும் இப்போது அதனைப் பற்றிப் பேசுவதில்லை.

அதற்காக அந்த விடயம் அப்படியே அமுங்கிப்போய்விடவில்லை. நிலத்தடி தண்ணீர் மாசுபட்டது என்று இந்த அரசியல் கட்சிகள் நடத்திய அலப்பறை காரணமாக யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் போத்தல் தண்ணீர் வியாபாரமும் தண்ணீரைச் சுத்திகரிக்கும் RO Plant விற்பனையும் அமோகமாக அதிகரித்தன. அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக அனேகமாக ஒவ்வொரு சந்திகளிலும் இந்த RO சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு அவை தண்ணீரை விற்கவும் தொடங்கியிருக்கின்றன.

கொரோனா கட்டுப்பாட்டுக் காலங்கள், பொது முடக்க காலங்கள், தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலங்களில்கூட இத்தகைய RO சுத்திகரிப்புத் தண்ணீர் வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டு கூவிக் கூவி விற்கப்படுகின்றன. அதிலும் சனநெரிசல் கூடுதலான பகுதிகளில் இந்த விற்பனை மிகச் சிறப்பாக நடக்கின்றது.

RO தண்ணீர் நல்லதா கெட்டதா? இந்தச் சந்தேகம் நிறையப் பேருக்கு ஏற்கனவே இருக்கிறது. தண்ணீரில் TDS அளவு 500 mg/Lக்கு குறைவாக இருக்கும் இடங்களில் RO பயன்பாடு பொருத்தமானது அல்ல என்கிறார்கள் நிபுணர்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற ஆய்வுகள் செய்யப்பட்டு RO தண்ணீர் இங்கு பயன்பாட்டுக்கு உகந்ததுதானா என்பது குறித்து எந்த அறிக்கைகளும் வெளியாகி இருப்பதாகத் தெரியவில்லை.

TDS என்றால் என்ன? TDS 500க்கு கீழ் இருப்பதற்கும் RO பயன்படுத்துவதற்கும் என்ன தொடர்பு? என்று தெரிந்துக்கொள்வதற்கு முன் RO என சொல்லப்படும் Reverse Osmosis (எதிர்திசை சவ்வூடுபரவல்) முறையை பற்றி தெரிந்துக்கொள்வோம்.

எதிர் திசை சவ்வூடுபரவல் என்பது மென்படல வடிகட்டுதலை ஒத்த ஒரு முறை ஆகும். நீர் சுத்திகரிப்பு முறைகளுள் ஒன்றான இது நுண்ணிய துளைகளைக்கொண்ட மூலக்கூறுகளாக அமைக்கப்பட்டுள்ள மேன்படலத்தினால் ஆக்கப்பட்ட அமைப்பினைப் பயன்படுத்தி நீரை வடிகட்டும் ஒரு முறையாகும். இது அதிக அழுத்தத்தை பயன்படுத்தி நீரில் ஒரு மென் படலத்தின் மூலம் கரைசலை தள்ளுகிறது மற்றும் கரைப்பான் தக்க வைத்திருக்கும் சுத்தமான நீரை ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு கடந்து செல்ல அனுமதிக்கிறது.

இப்படி சுத்திகரிக்கப் படும் RO தண் ணீர் என்பது ஒரு சுத்தமான நீராகும். ஆனால் நாம் குடிக்கும் நீர் சுத்தமாக இருப்பது மட்டும் போதாது. நம் உடலுக்கு தேவையான கல்சியம், மக்னீசியம், சோடியம், பொட்டாசியம் (Calcium, Magnesium, Sodium, Pottasium) போன்ற தனிமங்கள் நீரில் இருத்தல் நமக்கு அவசியமாகிறது.

நீரின் மூலக்கூறு வாய்ப்பாடு $H_2O$ என்று நாம் படித்திருப்போம். ஆனால் உண்மையில் இயல்பாக நமக்கு கிடைக்கு குடிநீரில் வெறும் கைட்ரஜன் மற்றும் ஒட்சிசன் கூறுகளை தாண்டி அதில் நிறைய, கனிமங்களும், தாது உப்புகளும், வாயுக்களும், கரிமப் பொருட்களும் கலந்திருக்கின்றன.

அப்படி தண்ணீரில் இருக்கும் அனைத்து கனிமங்களையும் தாதுக்களையும் முழுமையாக நீக்கிவிடும் வல்லமை கொண்டது தான் இந்த RO. எனும் எதிர் திசை சவ்வூடுபரவல் முறை.

> **நீரின் மூலக்கூறு வாய்ப்பாடு $H_2O$ என்று நாம் படித்திருப்போம். ஆனால் உண்மையில் இயல்பாக நமக்கு கிடைக்கு குடிநீரில் வெறும் கைட்ரஜன் மற்றும் ஒட்சிசன் கூறுகளை தாண்டி அதில் நிறைய, கனிமங்களும், தாது உப்புகளும், வாயுக்களும், கரிமப் பொருட்களும் கலந்திருக்கின்றன**

தண்ணீரில் கரைந்து இருக்கும் கனிமங்கள் தாதுக்கள் மற்றும் இதர பொருட்களை நாம் TDS (Total Dissolved Solids) என்று குறிப்பிடுகிறோம்.

RO இயந்திரத்தில் சுத்திகரிக்கப்பட வேண்டிய நீரை (Input Water) நாம் உள் செலுத்தும் பொழுது அது அந்த நீரில் உள்ள 90% TDSஐ குறைத்த பிறகு சுத்திகரிக்கப்பட்ட கனிமங்கள் நீக்கப்பட்ட (Demineralized) தண்ணீரை நமக்குத் தருகிறது.

ஒரு உதாரணத்திற்கு நாம் உள்செலுத்தும் நீரின் TDS அளவு 500 mg/L என்றால் RO சுத்திகரிப்பானால் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரின் TDS அளவு 50 mg/L தான் இருக்கும்.

ஒரு மனிதன் ஆரோக்கியமான வாழ்வை வாழ அவன் பருகும் ஒரு லீற்றர் தண்ணீரில் 120 முதல் 150 mg/L TDS இருத்தல் அவசியமாகிறது.

TDS அளவு 500 mg/L க்கு மிகாமல் இருந்தால் அது நல்ல பாதுகாப்பான குடிதண்ணீர் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. இதனால்தான் TDS 500mg/Lக்கு குறைவாக உள்ள இடங்களில் RO பயன்படுத்த அவசியம் இல்லை என்று பல நாடுகளின் அரசுகள் சொல்லியிருக்கின்றன.

சர்வதேச தரக்கட்டுப்பாட்டு முறைகளின்படி நல்ல குடிநீரில் TDS 300 mg/Lக்கு மிகாமல் இருக்கவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த தரக்கட்டுப்பாட்டு முறைகளும் குடிதண்ணீரில் குறைந்த பட்சம் TDS இவ்வளவு இருக்க வேண்டும் என சொல்லவில்லை.

குறைந்தபட்ச TDS அளவிற்கென தர நிர்ணயம் இல்லை என்பதால் இதுவரை அவசியம் உள்ளதா இல்லையா என்றுகூடப் பாராமல் தங்கு தடை இன்றி அனைவரும் RO பயன்படுத்தி வருகின்றோம். ஆனால் குறைந்த TDS இருக்கும் தண்ணீரை பருகுவதால் உடலுக்கு தேவையான கல்சியம், மக்னீசியம் போன்ற கனிமங்கள் பற்றாக்குறை ஏற்படுவதாகவும் அதனால் அது சார்ந்த உடல் உபாதைகள் (தலைவலி, காய்ச்சல், சோர்வு, தசைப் பிடிப்பு போன்ற குறுகிய கால அறிகுறிகளும், எலும்பு அடர்த்தி குறைப்பு, நீரழிவு நோய், உயர் குருதி அழுத்தம் போன்ற நீண்ட கால நோய்களும்) ஏற்பட காரணமாக இருப்பதாகவும் மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

மருத்துவர்களும் ஆய்வறிக்கைகளோ இப்படி கூற , RO உற்பத்தியாளர்களும் LMES போன்ற RO ஆதரவாளர்களோ நாம் பருகும் தண்ணீரில் இருந்து வெறும் 6% தான் கல்சியம் மக்னீசியம் நம் உடலுக்கு கிடைப்பதாகவும், மீதமுள்ள 94% கல்சியம் மக்னீசியம் உணவில் இருந்துதான் நமக்கு கிடைகிறது எனவும் அதனால் RO பயன்பாட்டினால் மட்டும் ஒருவருக்கு கல்சியம் மக்னீசியம் பற்றாக்குறை ஏற்பட்டு விடாது என்றும் வாதிடுகிறார்கள்.

ஆனால் உண்மையில் தண்ணீரில் உள்ள கல்சியம் மக்னீசியத்தின் அளவு பகுதிக்கு பகுதிக்கு மாறும். அது தொடர்பான சோதனைகள் செய்யப்படாமல் RO தண்ணீரைப் பயன்படுத்துவது ஆபத்தானது.

மீதமுள்ள 90% கல்சியம் மக்னீசியம் நமக்கு உணவில் இருந்துதான் கிடைகிறது என்பது உண்மைதான் என்றாலும், அமெரிக்கா ஐரோப்பா போன்ற வளர்ந்த நாடுகளில்கூட 60% மக்களுக்கு போதுமான அளவு மக்னீசியம் கிடைப்பதில்லை என ஆய்வுகள் கூறுகின்றன. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலே இந்த நிலைமை என்றால், இலங்கை போன்ற ஏற்ற தாழ்வுகள் மிக்க நாட்டில் மக்னீசியம் குறைபாடு எந்த அளவிற்கு இருக்கும் என சிந்தித்து பாருங்கள்.

இப்படி உணவில் இருந்து கிடைக்க வேண்டிய கல்சியம் மக்னீசியம் பற்றாகுறையாக இருக்கையில் தண்ணீரில் இருந்து கிடைக்க வேண்டியதும் கிடைக்கவில்லை என்றால் அது சிக்கல் இல்லையா? ■

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781